விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

அன்பு வாசகர்களே...
சிவல்புரி சிங்காரம் எழுதும்
குரு பெயர்ச்சி பலன்கள்
இன்று முதல் உங்கள் வலம்புரியில்...

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 17 சனிக்கிழமை (02.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 257

## தேசிய மட்டத்தில் அனித்தா மீண்டும் சாதனை



(கொழும்பு)

இலங்கையின் தேசிய மட்டத்தில் நடந்த கோல் ஊன்றி பாய்தல் நிகழ்ச்சியில் யாழ்ப்பாண 23

## ஜெகத் ஜெயசூரியவுக்கு எதிராக சாட்சியமளிக்க பொன்சேகா தயார்!

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரியவின் சில குற்றங்கள் குறித்து தாம் சாட்சியமளிக்க தயார் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இறுதி போரின் போது இடம்பெற்ற சில குற்றங்களுடன் ஜெகத் ஜயசூரிய தொடர்புபட்டுள்ளதாகவும், அது குறித்து சாட்சி வழங்க தாம் தயார் என்றும் அவர் குறி 23





## இன்று முதல் சோற்றுப் பொதி ரூ.10 அதிகரிப்பு

(கொழும்பு)

பொலித்தீன் பாவனைக்கு நேற்று தொடக்கம் தடை விதிக்கப்பட்ட நிலையில் சோற்றுப் பொதி ஒன்றின் விலையை 10 ரூபாயால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் குறித்த தீர்மானத்தை அறிவித்துள்ளது.

இன்றையதினம் தொடக்கம் சோற்றுப்பொதியின் விலை 24

# தமிழரை ஒருபோதும் இந்தியா கைவிடாது!

## சம்பந்தனிடம் உறுதியளித்தார் சுஷ்மா



23

## விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் – சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் புன்னாலைகட்டுவன் தெற்கினை சேர்ந்த நாகன் சரவணபவானந்தன் (வயது56) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

மேற்படி விபத்தானது 23

## இனந்தெரியாத இருவர் தாக்குதல்; யுவதி வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத இருவர் தாக்கியதில் இளம் யுவதி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் குருநகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த கொன்சன் யோரி ஜெனேபா (வயது 23) என்பவரே படுகாயம 23

## பிரேரணை அமுல் படுத்தப்படுகிறதா? சர்வதேசம் ஜெனிவாவில் கேள்வி எழுப்பும்

(ஜெனிவா)

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் 37 ஆவது கூட்டத் தொடரில் இலங்கையின் விவகாரம் சூடுபிடிக்கவுள்ளது.

சர்வதேச நாடுகள் உள்ளிட்ட அமைப்புக்கள் இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரம் தொடர்பில் கேள்வி எழுப்ப உள்ளநிலையிலேயே இலங்கை விவ 23

## உள்ளூராட்சி தேர்தல் டிசம்பர் 9-ல் சாத்தியம்

(கொழும்பு) எதிர்வரும் டிசம்பர் 9ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தலை நடத்த தேர்தல் திணைக்களம் நம்பிக்கையுடன் உள்ளதாக அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த திகதியில் தேர்தல் நடத்த முடியாவிட்டால் பின்னர் ஜனவரி மாதமே அதாவது ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சை டிசம்பர் 12 – 21 வரை நடைபெறவுள்ளதால் அப்பரீட்சை முடிவடைந்ததன் பின்னர் தேர்தல் நடத்த வேண்டிய நிலை ஏற்படும்.

புதிய தேர்தல் முறைமையின் கீழ் தேர்தலை நடத்த வேண்டி இருப்பதனால் தேர்தல் திணைக்களம் அதிகமான வேலைச்சுமையை எதிர்நோக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (மு)

## த.தே.கூ - அமெ. சந்திப்பு



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் நாட்டுக்கு வருகை தந்துள்ள ஐக்கிய அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் தூதுவர் அலிஸ் வெல்சுக்கும் இடையிலான சந்திப் 23

## போதைப்பொருள் பரிமாறும் சர்வதேச மையமாக இலங்கை?

(கொழும்பு)

சர்வதேச அளவில் கொக்கேய்ன் போதைப்பொருள் பரிமாறப்படும் தளமாக இலங்கை மாறி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

துறைமுக அதிகார சபையின் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி த ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பு துறைமுக 24

## ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணிலுடன் சுஷ்மா சுவராஜ் தனித்தனியாக பேச்சு



(கொழும்பு)

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் தனித்தனியாக சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் மாலை ஆரம்பமாகிய இந்தியப் பெருங்கடல் கருத்தரங்கில் பங்கேற்க, இந்திய வெளிவிவ 23

## சுஷ்மாவை சந்திக்க மகிந்த கடும் முயற்சி

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜை சந்திக்க மகிந்த அணியினர் கடும் பிரயத்தனம் மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்து சமுத்திர மாநாட்டில் பங்கேற்பத 24



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தேசிய அடையாள அட்டைக்கு நிழற்படம் எடுக்கும் முறைமை!

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டைக்கு நிழற்படம் எடுப்பதற்கான முறைமை நேற்று முதல் மாற்றப்பட்டுள்ளது.

சர்வதேச சிவில் விமான சேவை அதிகார சபையின் தரத்திற்கு ஏற்ப, பெற்றுக்கொள்ளப்படும் நிழற்படங்கள் மாத்திரமே எதிர்வரும் காலங்களில் ஏற்றுக்கொள்ளப்படும் என ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

அவ்வாறான நிழற்படங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இடங்கள் தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும், கிராம உத்தியோகத்தர்களிடமும் அது தொடர்பில் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள முடியும் என வியானி குணதிலக்க மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, புதிய ஸ்மார்ட் அடையாள அட்டைகள் அடுத்த மாதம் தொடக்கம் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டினார். (மு-11)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

# சிங்கப்பூரின் தற்காலிக ஜனாதிபதியாக தமிழர்

சிங்கப்பூரின் தற்காலிக ஜனாதிபதியாக இந்திய வம்சாவளி தமிழரான ஜோசப் யுவராஜ் பிள்ளை நேற்று பதவி ஏற்றுக்கொண்டுள்ளார்.

சிங்கப்பூரின் தற்போதைய ஜனாதிபதி டோனி டானின் பதவிக் காலம் நேற்றுடன் நிறைவடைந்தது. இந்த நிலையில் எதிர்வரும் 23ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும்.

நீண்டகாலமாக ஜனாதிபதியின் உயர்மட்ட ஆலோசகர் குழுவின் தலைவராக பொறுப்பு வகித்து வரும் ஜோசப் யுவராஜ் பிள்ளை, இதற்கு முன்னரும் சிங்கப்பூர் ஜனாதிபதிகள் வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் செல்லும் வேளைகளில் அந்நாட்டின் தற்காலிக ஜனாதிபதியாக இருந்து பதவியை திறம்பட நிர்வகித்து வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (மு-11)

**விசேட இறுதி கருத்தரங்குகள்**

**SLAS Open**
5வினாத்தாள்களுக்குமான எதிர்பார்க்கைகள் ஞாயிறு (3/9), செவ்வாய் (5/9), சனி (9/9) ஞாயிறு (10/9) காலை 9.00-4.00 மணிவரை

**SLAS**
மட்டுப்படுத்தப்பட்டது
ஞாயிறு (3/9) செவ்வாய் (5/9), (Case Study-1) காலை 9.00-3.00 மணிவரை

**சட்டக் கல்லூரி சட்டமாணி நுழைவுக்கு**
சனி, ஞாயிறு காலை 9.00-3.00 மணிவரை

**வட மாகாண ஆசிரியர்**
ஞாயிறு 10.00-02.00 மணிவரை

சகல போட்டிப் பரீட்சைகளுக்கும் வகுப்புக்கள் தொடர்ச்சியாக பரீட்சை வரை நடைபெறும் இடம்:
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)
0766883394
(சி-9493)


**வீடு, காணி தேவை**

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட இடங்களில் வீடு, காணி விலைக்குத் தேவை.

**தொடர்புகளுக்கு:-**
**0773611282** (சி-9488)

## மரண அறிவித்தல்கள்

### அமரர் சுப்பிரமணியம் கொங்காதரன் (பொன்னன்)



மண்டைதீவு 8-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கெங்காதரன் (பொன்னன்) 31.08.2017 வியாழக்கிழமையன்று காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-சின்னம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வனும் சாந்தமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும், கிருஷ்ணலதா, சாந்தரூபன், கிருஷ்ணரோகினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜேந்திரன் (ராசன்), பிரதீபா, கிருபாகரன் ஆகியோரின் மாமனாரும், கண்ணகை, வியாகரத்தினம், ரதிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், லக்கீசன், சானுஜா, பானுஜா, சாயீசன், திஷாந், திஷாரா, துதீசன், சகானா, ஹரீஸ் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 03.09.2017 நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் 37/12, பிறவுண் வீதி, 1ஆம் ஒழுங்கை கந்தர்மடத்தில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(296)
**பிறவுண் வீதி,**
**1ஆம் ஒழுங்கை, கந்தர்மடம்.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்**

### வல்லிபுரம் சின்னத்தம்பி (இரத்தினம்)



புறாப்பொறுக்கி ஆலடி, இமையாணன் மேற்கினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சின்னத்தம்பி (இரத்தினம்) அவர்கள் நேற்று 01.09.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2017) சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:-**
**குடும்பத்தினர்**
**0778872027**

**புறாப்பொறுக்கி ஆலடி,**
**இமையாணன் மேற்கு.** (சி-9492)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**திருஞானலிங்கம் பிரதாபன்**



31.08.2017
வியாழக்கிழமை பிரதம நீதிபதி முன்பாக சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்ட முன்னாள் பிரதேச சபை தலைவர் **திருஞானலிங்கம் பிரதாபன்** அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

Congrats!

ஐயனார் கோவிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

வாழ்த்துவோர்
மைத்துனன், மைத்துனி,
பெறாமக்கள், மருமக்கள்
(298)

UTP University Transfer Program
After A/L's Join
PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka



UGC அங்கீகாரம் கொண்ட
நவீன தொழிற்சந்தையை மையப்படுத்திய
**UK Degrees**
யாழ்ப்பாணத்தில்...

Pearson BTEC RICS

HND — BUSINESS MANAGEMENT MARKETING | HRM — Leading to **BA (Hons)** from the UK Universities
HND — QUANTITY SURVEYING — Leading to **BSc (Hons)** from the UK Universities
HND — BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY — Leading to **BSc (Hons)** from the UK Universities
HND — CIVIL ENGINEERING — Leading to **BEng / BSc (Hons)** from the UK Universities
HND — TELECOM ENGINEERING — Leading to **BEng (Hons)** from the UK Universities
HND — COMPUTING — Leading to **BSc (Hons)** from the UK Universities
HND — ELECTRICAL & ELECTRONIC ENGINEERING — Leading to **BEng / BSc (Hons)** from the UK Universities
LLB — LAW — Leading to **LLB (Hons)** from the UK Universities

UGC Recognized TVEC

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Tenny 0766 693 681
Sanchu 0777 102 131
INTAKE NOW ON

BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna.

20 YEARS

Best Employer Brand Award 2017
No.1 BTEC Centre in Sri Lanka 2016
Best Academic & Industry Interface 2016
Academic Impact Winner 2016
No.1 Higher Education Provider 2014
BTEC Gold Partner 2013
Performance Excellence Award 2011
Fastest Growing BTEC Centre 2010

021 221 9910 | 011 259 7217 info@bcas.lk | www.bcas.lk
(சி-9489)

# அரசியல் தீர்வின் அடிப்படைகளும் உத்தேச அரசியலமைப்பு முயற்சியும்

## தமிழ் மக்கள் பேரவையின் கருத்துப்பகிர்வும் பிரகடனமும்

தமிழ் மக்கள் பேரவையானது, துறைசார் நிபுணர்களின் உதவியுடன் சர்வதேச நாடுகளின் அரசியல் அனுபவங்களுக்கேற்ப, தமிழர்களின் இருப்பை பாதுகாக்கும் அரசியற் கோரிக்கைகளையும் ஒருதீர்வு யோசனையாக உருவாக்கி, மக்கள் கலந்தாய்வுடன் அதனை செழுமைப்படுத்தி கடந்த வருடம் வெளியிட்டு இருந்தது. எவராலும் நிராகரிக்க முடியாதவாறு, அது சர்வதேச நியமங்களுக்கமைய அமைந்திருந்தமையை அனைவரும் ஏற்றுக்கொண்டிருந்தனர்.

மக்கள் பங்களிப்புடன் உருவான பேரவையின் அந்த தீர்வு யோசனையானது, இலங்கை அரசின் புதிய அரசியலமைப்பிற்கான மக்கள் கலந்தாய்வுக்குழுவுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எனினும், இலங்கை அரசானது, வழமை போலவே, மக்களின் ஜனநாயக விருப்புகளை கிஞ்சித்தும் கருத்திலெடுக்காது, அவற்றை அடியோடு நிராகரித்து, ஒரு புதிய அரசியலமைப்பை தயாரித்து வருகிறது.

தமிழ் மக்களின் அடிப்படை அரசியற் கோரிக்கைகள் அனைத்தையும் புறந்தள்ளி, ஒருபுதிய அரசியலமைப்பை தமிழர்களுக்கான தீர்வு எனும் பெயரில் கொண்டு வந்து, எமது அரசியல் கோரிக்கைகள் தீர்க்கப்பட்டு விட்டன எனும் தோற்றப்பாட்டை வெளிக்காட்டி, எமது அரசியல் கோட்பாடுகளை நீர்த்துப் போகச் செய்ய, இலங்கை அரசு எடுக்கும் முயற்சிகள் தற்போதுமுனைப்புப் பெற்றிருக்கின்றன.

போலியான வார்த்தை ஜாலங்கள் மூலம் அரசியலமைப்பு குறித்து எமது மக்களை குழப்ப நிலையில் வைத்திருந்து அதன் மூலம் தனது திட்டத்தை கபடமான முறையில் அடையவே அரசு முயற்சிக்கிறது.

இதுதவிர, ஒருபுதிய அரசியலமைப்பானது, தீர்வு எனும் பெயரில் உருவாக்கப்டுகின்ற நேரத்தில், மக்களின் கவனத்தை அதிலிருந்து திசை திருப்புவதற்காக, வெவ்வேறு பிரச்சினைகளை திட்டமிட்ட முறையில் உருவாக்கி, மக்கள் மத்தியில் செயற்கையான முறையில் பேசுபொருளாக மாற்றும் நுண்ணிய சதித்திட்டமும் மிகலாவகமாக முன்னெடுக்கப்படுகிறது. இந்த நேரத்தில் நாம் மிக விழிப்பாக இல்லாது விடின், அது எம் மக்களின் அனைத்து அர்ப்பணிப்புகளையும் அழிவுகளையும் அர்த்தமற்றதாக்கி விடும். விழிப்புத்தான் விடுதலையின் முதற்படி.

இந்த சமயத்தில், அரசியலமைப்பு தொடர்பில் எமது மக்கள் மத்தியில் அரசியல் விஞ்ஞான ரீதியிலான தெளிவுபடுத்தலையும் விழிப்புணர்வையும் கொண்டு வரும் பணி எம் அனைவருக்கும் உரித்தானது. இந்த அடிப்படையில், ஒரு மக்கள் இயக்கமாக, இந்த சமூக பொறுப்பில் தமிழ் மக்கள் பேரவையும் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறது.

அரசியல் விஞ்ஞான ரீதியில், தமிழர்களின் அரசியல் கோரிக்கைகளின் அடிப்படைகளையும் அதன் பிரயோகங்கள் மற்றும் அதனை வலியுறுத்த வேண்டியதன் அவசியங்களையும் நடைமுறை அரசியல் நிலைமைகள் குறித்தான அபிப்பிராயங்களையும் எம் மக்களோடு பகிரும் கலந்துரையாடல் எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகிறது.

தமிழ்மக்கள் பேரவையின் இணைத் தலைவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் தலைமையில் நடக்க இருக்கும் இந்த அரசியல் கலந்துரையாடல் நிகழ்வில் துறைசார் நிபுணர்கள், அரசியல் தலைவர்கள், சிங்கள, முஸ்லிம் சகோதர முற்போக்கு நேச சக்திகள், என பலதரப்பட்டவர்களும் கலந்து கொண்டு தமது கருத்துக்களை பகிரவுள்ளனர்.

இந்த கலந்துரையாடலின் நிறைவாக, எம் மக்களின் அடிப்படை அரசியல் கோரிக்கைளை வலியுறுத்தி, நாம் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வின் அடிப்படைக்கூறுகள் குறித்த பிரகடனம் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

முக்கியமான இந்த காலகட்டத்தில், எமது அரசியல் அடிப்படைகளை பிரகடனப்படுத்தும் இந் நிகழ்வில், அனைவரும் கலந்துகொண்டு, இந்த பிரகடனத்தின் பங்காளிகளாக மாற வேண்டும் என நாம் அனைவரையும் வேண்டிக் கொள்கிறோம்.

எம் மத்தியிலான வேறுபாடுகள் அனைத்தையும் களைந்து, இனத்தின் நலனை கருத்திற்கொண்டு கோட்பாட்டு ரீதியில் அனைவரும் ஒன்றுபட்டு இயங்க முன்வருமாறு நாம் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம் என தமிழ் மக்கள் பேரவை அழைப்பு விடுத்துள்ளது. (இ-3)

# போர்க்குற்றச்சாட்டுக்களுக்கு பொன்சேகாவே பொறுப்பு

## ஜெகத் ஜெயசூரிய நழுவல்




(கொழும்பு)

**போர்க்குற்றச்சாட்டுக்களுக்கு முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவே பொறுப்புக் கூற வேண்டும் என்று முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.**

பிரேசிலில் போர்க்குற்ற வழக்கை எதிர்கொண்டுள்ள அவர், கொழும்பு திரும்பிய பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

தனக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுகளை நிராகரித்த ஜெனரல் ஜயசூரிய, இந்தக் குற்றங்களுக்கு தான் உதவியதாக கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பொய் என்றும் கூறியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு யாராவது பொறுப்பேற்க வேண்டும் என்றால், அந்தப் பொறுப்பு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கே உள்ளது. ஏனென்றால் அவர் தான் அப்போது இராணுவத் தளபதியாக இருந்தார் என்றும் ஜெனரல் ஜயசூரிய மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## விவாகரத்துப்பெற நீதிமன்று சென்ற மனைவி மீது கணவன் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

விவாகரத்து வழக்கு விசாரணைக்காக நீதிமன்றம் சென்ற குடும்பப் பெண் கணவனின் தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி விவாகரத்து வழக்கு விசாரணைக்காக மல்லாகம் நீதவான் நீதிமன்றுக்கு வருகை தந்த குறித்த பெண் நீதிமன்ற முன்றலில் கணவனின் தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயே சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(இ-10-104)

## பொன்சேகா மீது போர்க்குற்றங்கள் சுமத்தப்படாதது ஏன்?

### கேள்வி எழுப்புகிறது பொதுஜன முன்னணி



முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக, போர்க்குற்றச்சாட்டுகள் எதுவும் பதிவு செய்யப்படாதது ஏன் என்று, மகிந்த ராஜபக்ஷ ஆதரவு கட்சியான, பொதுஜன முன்னணி கேள்வி எழுப்பியுள்ளது.

இலங்கை பொதுஜன முன்னணியின் அமைப்பாளரான அஜித் பிரசன்ன, இது குறித்து கருத்து வெளியிடுகையில்,

"ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய, அப்போதைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கீழ் தான் செயற்பட்டவர்.

அமெரிக்கா ஆதரவு அரசாங்கத்துடன் இருப்பதால் தான், இத்தகைய குற்றச்சாட்டில் இருந்து சரத் பொன்சேகாவுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

ஜெகத் ஜெயசூரியவுக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டுகள், இலங்கை இராணுவத்துக்கு மோசமான அடியாகும். புலம்பெயர் தமிழர்களின் இந்த குற்றச்சாட்டுகளை நாம் கண்டிக்கிறோம்.

இராணுவத் தளபதியாக லெப். ஜெனரல் மகேஷ் சேனநாயக்க நியமிக்கப்பட்டதிலும், கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா நியமிக்கப்பட்டதிலும், சரியான நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## சிறுவனிடம் அன்பை பொழிந்த மெஸி



ஆர்ஜென்ரீனா கால்பந்து வீரர் மெஸி தன்னை காண வந்த சிறுவனிடம் பாதுகாப்பையும் மீறி அன்பை வெளிப்படுத்தியுள்ளார்.

ரஷ்யாவில் அடுத்த ஆண்டு 'பிபா' உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கவுள்ளது. இதற்கான, தகுதிச்சுற்று போட்டி உலகின் பல்வேறு இடங்களில் நடைபெறுகிறது.


உருகுவே அணிக்கு எதிரான தகுதிச் சுற்றில் பங்கேற்க ஆர்ஜென்ரீனா அணி உருகுவே வந்தது. அப்போது, மொண்டிவிடியோ நகரில் அமைந்துள்ள ஹோட்டல் அறைக்கு ஒவ்வொரு வீரராக பேருந்தில் இருந்து இறங்கினர்.

நட்சத்திர ஆர்ஜென்ரீனா வீரர் மெஸி ஹோட்டலுக்கு நுழைந்தபோது, சிறுவன் ஒருவன் சந்திக்க முற்பட்டான். ஆனால், பாதுகாப்பு அதிகாரிகள் அவனை அப்புறப்படுத்தினர்.

இதை கண்ட மெஸி, சிறுவனை அழைத்து வர சொன்னார். பின், அவனை கட்டியணைத்து புகைப்படமும் எடுத்துக் கொண்டார். சோகத்திலிருந்த சிறுவன் இந்த இன்ப அதிர்ச்சியால் புன்னகையுடன் விடைபெற்றார்.

கடந்த ஆண்டு ஏழ்மையில் வாடிய ஆப்கான் சிறுவன் ஒருவன், மெஸியின் பார்சிலோனா கழக அணி 'ஜெர்சி' மாதிரியை பிளாஸ்டிக் கவரில் செய்து அணிந்திருந்தான். இதை சமூகவலைதளத்தில் பார்த்த மெஸி, சிறுவனுக்கு 'ஜெர்சியை' அனுப்பினார். பின், கட்டாரில் நேரடியாகவும் சந்தித்தார். இந்த வரிசையில், தற்போதும் மற்றொரு சிறுவன் மீது அன்பை வெளிப்படுத்தி உள்ளார்.

## பீலேயை முந்தினார் ரொனால்டோ



சர்வதேச கால்பந்து அரங்கில் அதிக கோல் அடித்த வீரர்கள் பட்டியலில் பிரேசில் ஜாம்பவான் பீலேயை முந்தி 5வது இடம் பிடித்தார் போர்த்துக்கல்லின் ரொனால்டோ.

ரஷ்யாவில், அடுத்த ஆண்டு (ஜூன் 14 - ஜூலை 15) 'பிபா' உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது. தற்போது இதற்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா என 6 பிரிவுகளாக நடக்கிறது.

போர்த்துக்கல்லில் நடந்த ஐரோப்பிய அணிகளுக்கான 'பி' பிரிவு போட்டியில் போர்த்துக்கல், பாரோ தீவு அணிகள் மோதின.

இதில் கிறிஸ்டியானோ ரொனால்டோ 'ஹட்ரிக்' கோல் (3, 29, 64ஆவது நிமிடம்) அடித்து கைகொடுக்க, போர்த்துக்கல் அணி 5-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. போர்த்துக்கல் சார்பில் வில்லியம் (58ஆவது நிமிடம்), நெல்சன் ஆலிவெய்ரா (84ஆவது) தலா ஒரு கோல் அடித்தனர்.

மூன்று கோல் அடித்த ரொனால்டோ, சர்வதேச கால்பந்து அரங்கில் அதிக கோல் அடித்த வீரர்கள் பட்டியலில், முன்னாள் பிரேசில் வீரர் பீலேவை (77 கோல், 92 போட்டிகள், 7ஆவது இடம்) முந்தி 5ஆவது இடத்தை ஈராக்கின் ஹுசைன் சயீத்துடன் (78 கோல், 137 போட்டி) பகிர்ந்து கொண்டார். ரொனால்டோ, இதுவரை 144 போட்டிகளில் 78 கோல் அடித்துள்ளார். முதலிடத்தில் ஈரானின் அலி டாய் (109 கோல், 149 போட்டி) உள்ளார்.

### யு.எஸ்., ஓபன்

## 3ஆவது சுற்றில் பெடரர், நடால்

யு.எஸ்., ஓபன் டென்னிஸ் தொடரின் மூன்றாவது சுற்றுக்கு ஸ்பெயினின் ரபேல் நடால், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் முன்னேறினர்.

அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரில், யு.எஸ்., ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதன் ஆண் கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் 'நம்பர்-1' வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால், ஜப்பானின் டாரோ டேனியலை எதிர் கொண்டார்.

முதல் செட்டை 4-6 என பறிகொடுத்த நடால், அடுத்த மூன்று செட்டையும் 6-3, 6-2, 6-2 என்ற கணக்கில் வசப்படுத்தினார். முடிவில், நடால் 4-6, 6-3, 6-2, 6-2 என வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.


### போராடிய பெடரர்

மற்றொரு போட்டியில் 'நம்பர்-3' வீரரான சுவிட்சரலாந்தின் பெடரர், ரஷ்யாவின் மிகய்ல யூசினியுடன் (101 ஆவது இடம்) மோதினார். 19 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றிருந்தாலும் இவர் தடுமாறினார்.

3 மணி நேரம் 7 நிமிட போராட்டத்திற்குப்பின் பெடரர் 6-1, 6-7, 4-6, 6-4, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். மற்றைய போட்டிகளில் ஸ்பெயினின் பெலிசியானோ லோபஸ், ஆர்ஜென்ரினாவின் லியானர்டோ மேயர் உள்ளிட்டோர் வெற்றி பெற்றனர்.

### வெஸ்னினா அசத்தல்

பெண்களுக்கான இரண்டாவது சுற்றில் ரஷ்யாவின் எலினா வெஸ்னினா 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் பெல்ஜியத்தின் கிறிஸ்டின் பிலிப்கின்சை தோற்கடித்தார்.




மற்றைய போட்டிகளில் போலந்தின் ரட்வன்ஸகா, அமெரிக்காவின் செல்பி ரோஜர்ஸ் வெற்றி கண்டனர்.

### சானியா ஜோடி வெற்றி

பெண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் சானியா, சீனாவின் சூய் பெங் ஜோடி 6-4, 6-1 என குரோஷியாவின் மார்டிக், டோனா ஜோடியை வீழ்த்தியது.

ஆண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் போபண்ணா, உருகுவேயின் பாப்லோ ஜோடி 1-6, 6-3, 6-4 என அமெரிக்காவின் பிராட்லி, ஸ்காட். லிப்சிகே ஜோடியை தோற்கடித்தது.



## சட்டவிரோத மணல் ஏற்றிய 9 சாரதிகள் பொலிஸாரால் கைது

(பரந்தன்)

நேற்று இரவு முல்லைத்தீவு சுதந்திரபுரம் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் ஒன்பது உழவு இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் அதன சாரதிகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் மணல் கொள்ளை இடம்பெற்று வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கிளிநொச்சி முல்லைத்தீவுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெளிகன்னவின் ஆலோசனையின் கீழ் உப பொலிஸ் பரிசோதகர் இந்து பிரதீபனின் விசேட குழுவினர் குறித்த பகுதியை முற்றுகை இட்டதில் சட்டவிரோதமாக அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய ஒன்பது உழவு இயந்திரங்களும் சாரதிகளும் குறித்த குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சாரதிகளும் உழவு இயந்திரங்களும் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் இன்று புதுக்குடியிருப்பு பொலிஸாரால் ஆஜர்ப்படுத்தப்பட உள்ளது. (மு-312)


32வது ஆண்டு நீங்காத நினைவுகள்



அமரர் வி.தர்மலிங்கம்

மூளாய், சுழிபுரம்.

சுட்டுக்கொல்லப்பட்ட, தன்னலமற்று மக்கள் பணிபுரிந்த முன்னாள் கூட்டணி (TULF) பாராளுமன்ற உறுப்பினர்களை என்றும் மறவாது நினைவு கொள்கின்றேன்.



அமரர் மு.ஆலாலசுந்தரம்

தங்க.முகுந்தன் (077 727 9238)
(முன்னாள் யாழ்.மாநகர சபை உறுப்பினர் TULF)

(C-9491)



# இலங்கை- இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர்கள் சந்திப்பு

சந்தித்துள்ளார். இந்து சமுத்திர மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கொழும்பு வந்துள்ளார்.

அந்த வகையில் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து உரையாடிய இந்திய வெளி விவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் நேற்று இலங்கை வெளிவிவகார அமைச்சரை சந்தித்து கலந்துரையாடியு ள்ளார். இந்த சந்திப்பில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் குறித்து ஆராயப்பட் டுள்ளன. (இ-7)



இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன. இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜை


## 3 ஆம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு 1997 - 01 - 12



உதிர்வு 2014 - 09 - 05

அமரர்.

## அருந்தவராசா கிருசாந்

திதி: பரிவர்த்தன ஏகாதசி

எமது வாழ்வின் முத்தான
முதல் விடிவெள்ளியே-நீ
இடையில் மறைந்தது ஏனோ?
கடல் அலை ஓய்வதில்லை
நம் கண்ணீரும் ஓய்வதில்லை
உன்பாச உறவும்
பெற்றோர் மனமும் -உன்னை
தேடுதடா- தங்கை, தம்பி
தவிதவிக்க
இது விதியின் விளையாட்டா
உலக வாழ்வு நிரந்தரமில்லை
என்பதை நாம் அறிவோம்
மூவாண்டு கழிந்தும்
உன் நீங்காத நினைவுகளுடன்

(சீ-9469)

கருகம்மன்,புலோலி தெற்கு,புலோலி. குடும்பத்தினர்.



சமர்ப்பன் தியான நிலையத்தின் ஏற்பாட்டில்

## தியான கருத்தரங்கு

இந்தியாவிலிருந்து வருகைதரும் விசேட பயிற்சியாளர்களினால் இக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இலவசம்




13 வயதிற்கு மேற்பட்ட அனைத்து மதத்தவரும் கலந்துகொள்ள முடியும்

காலம்: 03.09.2017 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: காலை 10 மணிக்கு
இடம்: சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலய திருமண மண்டபம்.



சிலநேரங்களில் எம்மை நாமே கணிகாணிக்க வேண்டும் அப்போது நமக்குள் உள்ள அமைதியை நாம் கண்டறிய முடியும்

முன்பதிவுகளுக்கு - 0778068100


## இராசி பலன்

02.09.2017
(ஆவணி 17, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
ஏகாதசி முற்பகல் 9.45 மணிவரை
பூராடம் காலை 8.25 மணிவரை
சுபநேரம் 3.05-4.35 மணிவரை
இராகுகாலம் 9.05-10.35 மணிவரை
பரிவர்த்தன ஏகாதசி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| - | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவாதிரை<br>பகல் 3.05 மணிக்கு<br>மகர-சந் | | ராகு, புத, சுக், |
| கேது | | | சூரி செவ் |
| சந் | சனி | குரு | |

**மேடம்** சொன்ன சொல்லைக் காப் பாற்றி மகிழ்வீர்கள், வெளி யூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செவி குளிரும் செய்தி கள் வந்து சேரலாம், தொழில் நன்மையுண்டு.

**இடபம்** மாலைப்பொழுது மனதில் இருந்த பாரம் குறையும், சுணங்கிய காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, ஆரோக்கியம் சீராகும்.

**மிதுனம்** கலகலப்பான சூழ்நிலை மலைநேரம் மாறலாம், வழி பாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மற்றவர்க ளின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது.

**கடகம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**சிம்மம்** இனத்தார் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், உடல்நலனில் அக்கறை காட் டுவீர்கள்.

**கன்னி** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்ப டலாம், வீட்டுத் தேவைகளில் அக்கறை காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**துலாம்** பெற்றோர் வழியில் பிரியம் கூடும், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர் கள், உற்சாகமான நாள், எடுத்த காரியங்களில் முன் னேற்றமுண்டு.

**விருச்சிகம்** உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக் கும், வாக்கு மேன்மையு ண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு** தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, புதிய கற்பனைகளை வளர்த் துக் கொள்வீர்கள்.

**மகரம்** பெரிய மனிதர்களின் சந்திப் புக்கள் இடம்பெறும் வாய்ப் புண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், தொழில் ரீதியான பயணமொன்று இடம்பெறலாம்.

**கும்பம்** பயணத்தால் பலன் கிடைக் கும், முயற்சிகளில் முன்னேற் றமுண்டு, தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், விருந்துக ளில் கலந்து மகிழும் வாய்ப் புண்டு.

**மீனம்** உற்சாகத்தோடு பணிபுரிவீர் கள், அந்நியர்களின் உதவி கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன நன்மையுண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம்.

# அந்தந்த பிரதேச மக்கள் பயன்பெறும் வகையில் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா வலியுறுத்து

ஒரு பிரதேசத்தில் வாழ்வாதாரத் திட்டங்களை ஆரம்பிக்கும் போது அந்தந்த பிரதேசத்தில் உள்ள மக்கள் பயன்பெறும்வகையில் அமைத்துக்கொடுக்க வேண்டும் என சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஆரம்ப கைத்தொழில் அமைச்சின் ஏற்பாட்டில், குழு செயற்கை முறையிலான கடலட்டை வளர்க்கும் செயற்றிட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான கடலட்டை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வேலணை பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

எமது பிரதேசங்களில் வேறு மாவட்டங்களை சேர்ந்த மக்கள் வந்து எமது வளங்களை அழித்து செல்கிறார்கள். இதனால் இப்பிரதேசத்தில் உள்ள மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. அந்தந்த பிரதேசத்தில் உள்ள வளங்களை அந்தந்த பிரதேச மக்கள் பயன்படுத்தி பயன் பெற வேண்டும். அவ்வாறான நோக்கத்துடனேயே நல்லாட்சி அரசில் நாம் பல் வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகிறோம்.

ஒவ்வொரு பிரதேசங்களிலும் விசேடமாக பெண் தலைமைத்துவ குடும்பங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். யுத்தம் காரணமாக 90 ஆயிரத்துக்கும் அதிகமான பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உருவாகியுள்ளன. அவர்கள் தமது வாழ்வாதாரத்தை உயர்த்துவதில் அதிகளவான பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர். எனவே அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்குவதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த காலத்தில் சரியான முறையில் பயனாளிகள் தெரிவு செய்யப்படவும் இல்லை, வாழ்வாதாரம் வழங்கப்படவும் இல்லை. எமது பயனாளிகளுக்கு சரியான முறையில் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டால் மாத்திரமே எதிர்காலத்தில் தனியாகவும்பலமாகவும் வாழ்க்கை வாழ முடியும்.

எமது இளைஞர்கள், முன்னாள் போராளிகள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மீது எமது அரசு முக்கிய கவனம் செலுத்த வேண்டும். முன்னாள் போராளிகள் புறக்கணிக்கப்படுகிறார்கள். கடந்த கால அரசு போதை வஸ்துக்களை வடக்குக்கு அனுப்பி இளைஞர்களை சீரழித்து வைத்துள்ளது. போதைக்கு அடிமையாக்கியுள்ளது.

எனவே எமது இளைஞர்களை நல்வழிப்படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்புவதற்கு பல அபிவிருத்தி திட்டங்கள் வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை நாம் செய்து வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# தமிழ் மக்களுக்கு விசேட வேண்டுகோள்



தற்போதைய அரசியல் நிலைமையின் அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்து, நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருக்கும் இனப்பிரச்சினை தீர்வுக்கு ஓர் திடகாத்திரமான முடிவை மேற்கொள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானித்துள்ளது. கடந்த 60 ஆண்டுகால அரசியலில் இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்கு நெருங்கி வந்த பல சந்தர்ப்பங்கள் தீர்வு ஏற்படாமல் நழுவிப் போயுள்ளதை நான் பார்த்திருக்கிறேன்.

இனப்பிரச்சினை தீர்வுக்கு நீண்ட தாமதம் ஏற்படுவதற்கு தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் ஒற்றுமையின்மை என்பதுதான் பிரதான காரணமாகும் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஓர் சட்டபூர்வமான அமைப்பல்ல என்பதை தமிழர் விடுதலைக் கூட்டணி கருதினாலும், தமிழ் மக்களின் நன்மைகருதி அவர்கள் மேற்கொள்ளும் அத்தனை நடவடிக்கைகளையும் சகித்துக்கொண்டு முழு ஒத்துழைப்பு வழங்க முன் வந்தது.

ஆனால் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியை அலட்சியப்படுத்தியமையால் மிகவும் ஏமாற்றமடைந்தோம்.

அதன் பலனாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை குழு கூட்டத்திலும் தொடர்ந்து அண்மையில் நடைபெற்ற தேசிய மாநாட்டிலும், எதிர்வரும் காலங்களில் நடக்கவிருக்கும் தேர்தல்களில் ஏனைய கட்சிகளுக்கு மாறாக துணிந்து எவரோடும் தனித்து கூட்டுச்சேராமல், குறிப்பிட்ட காரணங்களுக்காக, தேர்தலில் போட்டியிட விரும்பும் அத்தனை கட்சிகளுடனும் இணைந்து ஒரே அமைப்பின் கீழ் ஒரே கொள்கை, ஒரே சின்னத்தின் கீழ் போட்டியிட முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு கட்சியும் பொருத்தமான வேட்பாளர்களை முன்னிறுத்தி தேர்தல் முடிந்ததன் பின் தெரிவு செய்யப்படுகின்ற அத்தனை பேரும் ஒரே குடையின் கீழ் இயங்க வேண்டும்.

இதனையே பல்வேறு தமிழ் அமைப்பினர், தமிழ் அரசியல் கட்சியினர், பல் கலைக்கழக மாணவர்கள், புத்திஜீவிகள் அதுபோல பல அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் 2004ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் எதிர்நோக்கியிருந்தனர்.

இந்த ஆலோசனைக்கு அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் மற்றும் தராக்கி போன்றவர்கள் பூரண ஆதரவு வழங்கியதோடு விடுதலைப்புலிகளும் ஒரே கட்சியின் கீழ் அனைவரும் இணைந்து போட்டியிட வேண்டுமென்று வற்புறுத்தியிருந்தனர்.

விடுதலைப்புலிகள் யுத்தத்தை கைவிட்டு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு மறைமுகமாக வெளிப்படுத்தினர். துரதிர்ஷ்டவசமாக, நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும் யாரோ மேற்கொண்ட சதி நடவடிக்கையால் 2004ஆம் ஆண்டு தேர்தலின் போது இந்த திட்டம் அமுல்படுத்த முடியாமல் போய்விட்டது. எதிர்காலத்தில் இந்தத் திட்டம் வெற்றியளிக்க வேண்டுமென்பதே எனது பேரவா.

வடகிழக்கில் இவ்வாறு ஆதரவு தேடும் குழுக்கள், தமிழ்க்கட்சிகள், அமைப்புக்கள் ஆகியன தங்களுக்கிடையே காணப்படும் ஆழமான வேறுபாடுகளை மறந்து, நீண்டகாலம் இராணுவத்துடன் தொடர்புகள் கொண்டிருந்ததையும் உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்களையும் பொருட்படுத்தாது ஒரே குடையின் கீழ் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதே.

இந்தத் திட்டத்தை அமுல் படுத்துவதால் ஒரே குடையின் கீழ் இணைந்து செயற்பட விரும்பும் அமைப்புக்களை புறந்தள்ளி வைக்க வேண்டிய அவசியமில்லை. இத்திட்டத்தின் விசேட அம்சம் யாதெனில் போராளி இயக்கங்களிடையே காணப்படும் ஆழமான வேறுபாடுகளை பொருட்படுத்தாது அவர்களையும் இணைத்துக் கொள்வதை விடுதலைப்புலிகள் ஆமோதித்து இருந்தனர்.

மிகவும் சக்திவாய்ந்த எவராலும் வெல்ல முடியாத விடுதலைப்புலிகளின் அழிவுக்கு வழிவகுத்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒரு சில தலைவர்களா நிர்க்கதியாக நிற்கின்ற தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்கப்போகின்றார்கள்? இனப்பிரச்சினைக்கும் ஏனையவற்றுக்கும் எதுவித தீர்வையும் காணாமல் காலம் கடத்துவதற்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க, இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வை முன்வைத்தார். அதற்கு 48.43 வீதம் வாக்குகளும், அதனை எதிர்த்து போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கு 50.29 வீத வாக்குகளும் கிடைத்திருந்தன.

விடுதலைப் புலிகளின் ஓர் அங்கமாக தம்மை பற்றி தம்பட்டம் அடித்துவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, புலிகளுடன் பேசி தேர்தலில் பகிஷ்கரிக்கும் திட்டத்தை கைவிட்டிருந்தால், சமஷ்டி முறையிலான தீர்வுக்கு மூன்றில் இரண்டு வீதமான வாக்குகள் இலகுவாக கிடைத்திருக்கும்.

மேலும் இந்திய மாநிலங்களுக்கு உரிய அதிகாரத்தையொத்த, இந்திய முறையிலான, நான் முன்வைத்த தீர்வுக்கு அனைத்து சமூகங்களிடமிருந்தும் வரவேற்பு கிடைத்தது. அதைக்கூட முன்னெடுக்காத தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரா எமது பிரச்சினைக்கு இனி தீர்வு காணப் போகின்றார்கள் என்பதையும் தமிழ் மக்கள் சிந்தித்து, சகல தமிழ் அரசியல் கட்சிகளை ஓரணியில் திரளுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி கேட்டுக்கொள்கிறது.

வீ. ஆனந்தசங்கரி
செயலாளர் நாயகம்-த.வி.கூ

# தலைவர்களின் நினைவு தினம்





1985.09.02இல் சுட்டுக் கொலை செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமரர்கள் வி. தர்மலிங்கம், மு. ஆலாலசுந்தரம் ஆகியோரின் 32ஆவது நினைவு தினம் இன்று மாலை 4.30 மணியளவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள அலுவலகத்தில் இடம்பெறும். (இ)

# பண்ணிசையரங்கு

அனலைதீவு புளியந்தீவு ஸ்ரீ நாகராஜேஸ்வரி அம்பிகா சமேத ஸ்ரீ நாகராஜேஸ்வர சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவ பெருந்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. நாளை சப்பறத் திருவிழாவும் மறுநாள் தேர்த்திருவிழாவும் நடைபெறும். இக் காலத்தில் ஆலய பிரதானமண்டபத்தில் பி.ப.3 மணி - 4.30 மணி வரை கலாபூஷணம் க.லோகேஸ்வரனின் பண்ணிசையரங்கு பக்க வாத்திய சகிதம் இடம்பெறும். (இ)

# நீர்வேலியில் இளையோரை மையப்படுத்திய ஆன்மீகவுரை



(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய மஹோற்சவத்தையொட்டி இளையோரை வழிப்படுத்தும் வகையில் மேன்மைகொள் சைவ நீதி என்ற பொருளில் ஆன்மீகவுரை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதனை இணைப்பாளராகக் கொண்டு கடந்த 27 ஆம் திகதி தொடக்கம் இடம்பெறும் இந்நிகழ்வில் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன், பிரம்மஸ்ரீ தி. மயூரகிரி குருக்கள் ஆகியோர் ஆன்மீக உரைகளை வழங்கி வருகின்றனர். உரையின் நிறைவில் ஆன்மீக அறிவுப் போட்டி நடத்தப்பட்டுப் பரிசில்களும் வழங்கப்படுகின்றன.

இவ்வாலயத்தின் தேர் திருவிழா எதிர்வரும் 05 ஆம் திகதி காலை 9 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் முற்பகல் 11 மணிக்கும் இடம்பெறவுள்ளன. (இ-3)

# முழு நேர வெதுப்பக கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் வெதுப்பக (Backer)- Bread & Pasty கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. இக் கற்கைநெறிக்கு தேசிய தொழிற்தகைமை (NVQ) சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. இக் கற்கைநெறியினை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 4ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம் (021 222 7949) அல்லது வலந்தலைச்சந்தியில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் (021 221 1793) எதிர்வரும் 08.09. 2017 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# ஆன்மீக நிகழ்வு

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய மஹோற்சவ காலத்தை முன்னிட்டு தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலையின் அனுசரணையில் நடைபெறும் ஆன்மீகநிகழ்வுகளில் இன்று மாலை 4 மணிமுதல் இரவு 7 மணிவரை விசேட நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறும். (இ-3)

# இந்து சமய அற்புதங்கள் சந்நிதியில் இலவசமாக வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய தேர்த் திருவிழாவை முன்னிட்டு ஸ்ரீ வாணி வெளியீட்டகத்தின் இந்து சமய அற்புதங்கள் அடங்கிய நூல் இலவசமாக சந்நிதி ஆச்சிரமத்தில் அடியார்களுக்கு வழங்கப்படும். (இ-3)

# தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நீங்காத இடம்பிடித்த தர்மர்

இலங்கை தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் உன்னதமான பல தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். அந்த வரிசையில் இலங்கை நாடாளுமன்றத்தில் 1960 ஆண்டு தொடக்கம் 1983 ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியாக இருபத்து மூன்று வருடங்கள் உறுப்பினராக இருந்து மக்களுக்குச் சேவையாற்றி அவர்களின் நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பெற்ற அருந்தலைவர் விஸ்வநாதர் தர்மலிங்கம் படுகொலை செய்யப்பட்ட முப்பத்திரண்டாவது சிரார்த்த தினம் இன்று 02.09.2017 ஆகும்.

அமர் தர்மர் மிகவும் செல்வப் பரம்பரையில் ஒரே வாரிசாகத் தந்தை விஸ்வநாதருக்கும் தாய் வள்ளிப்பிள்ளைக்கும் பிறந்தார். இவரின் தந்தை அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டம் பெற்ற கல்விமான். இவரின் குடும்பம் சரித்திரப் பிரசித்தி வாய்ந்ததும் புதைபொருள் சிறப்பு மிக்கதுமான கந்தரோடை கிராமத்தில் வாழ்ந்து வந்தனர். தந்தையாரான விஸ்வநாதர் மற்றும் தாயாரையும் தர்மர் சிறுவயதிலேயே இழந்து விட்டார்.

அமரர் தர்மருக்கு மக்கள் மத்தியில் மதிப்பும் செல்வாக்கும் இருந்த படியினாலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தீவிர ஆதரவாளனாக இருந்த படியினாலும் 1960 ஆம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட உடுவில் தொகுதிக்கு அவ் வருடம் பங்குனி மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தந்தை செல்வாவின் விருப்பத்திற்கிணங்க தமிழரசுக் கட்சி வேட்பாளராக இவர் நிய மிக்கப்பட்டார். இவருடன் அப்பொழுது கல்விமான்களான ஹன்டி பேரின்பநாயகம், கூட்டுறவாளர் வீ. வீரசிங்கம் முன்னாள் செனட்டர் பொ. நாகலிங்கம் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியின் வி. பொன்னம்பலம் உட்பட ஏழுபேர் போட்டியிட்டார்கள். இத்தேர்தலில் தர்மர் பல்லாயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றியீட்டினார். அதன் பின்பு நடைபெற்ற தேர்தல்களில் உடுவில் மானிப்பாய் தொகுதிகளில் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டி தொடர்ச்சியாக இருபத்து மூன்று வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து 1983 ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தின் ஆறாவது திருத்தச் சட்டத்துக்கு அமைய சத்தியம் செய்ய மறுத்து நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முகாமையாளராக இருந்த போது தர்மரை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வி. பொன்னம்பலம் அவரின் கல்லூரியில் ஆசிரியராக இருந்தார். அவர் தேர்தலில் போட்டியிட விடுமுறை வழங்கி பரஸ்பர மதிப்பும் நட்பும் பாதிக்கப்படாத வகையில் ஒரு நாகரிகமான அரசியல்வாதியாக திகழ்ந்ததை யாவரும் அறிவர்.



1972 ஆம் ஆண்டு கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா தலைமையில் இயங்கிய அரசியல் நிர்ணய சபைக்கு தமிழரசுக் கட்சி சமர்ப்பித்த சமஷ்டி அரசியல் யாப்பினை வரைவதில் தன்னந்தனியாக ஈடுபட்டு நாடாளுமன்றத்தில் புள்ளிவிபரங்களுடனும் ஆதாரங்களுடனும் சொற்பொழிவாற்றியதை சமீபத்தில் யாழில் தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவாற்ற வந்த தற்போதைய அரசியல் அமைப் புக் குழுத் தலைவராக ஜயம் பதி விக்கிரமரட்ன நினைவு கூர்ந்தது குறிப்பிடத்தக்கது.

அமரர் தர்மர் நாடாளுமன்றத்தில் ஆழமான கருத்துக்களை மிகச் சாதாரண வார்த்தைகளில் நகைச்சுவையாகவும் கூறும் பண்பு அவரிடமிருந்தது. விளங்க வைக்கக் கூடிய ஆற்றல் அவரிடமிருந்ததால் அவருடைய மேடைப் பேச்சுக்களோ, பாராளுமன்ற உரைகளோடு தெளிவாகவும் ஆணித்தரமாகவும் இரத்தினச் சுருக்கமாகவும் அமைந்திருக்கும். 1972 ஆண்டுக்குப் பின் அன்றைய அரசினால் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறைக்கூடங்களில் கஷ்டப்பட்ட போது அவ்விளைஞர்களின் வீடுகளுக்கு அடிக்கடி சென்று பெற்றோருக்கும் ஆறுதல் கூறி உதவியும் வழங்கியதை பலர் நன்றியுடன் இன்றும் நினைவு கூருகிறார்கள். இவ்விளைஞர்கள் சிறைகளில் படும் இன்னல்கள் சர்வதேச மன்னிப்புச் சபையினருடன் தொடர்பு கொண்டு அவர்களே விடுதலை செய்வதற்கு தன்னாலான முயற்சிகளை எடுத்துள்ளார்.

தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காக தன் வாழ்நாளில் பெரும் பகுதியை அர்ப்பணித்த தர்மர் ஒரு திருமண விழாவில் பங்குபற்றிக் கொண்டிருந்த வேளையில் அவரை அழைத்து கடத்தி படுகொலை செய்தாலும் அன்னாரையும் அவரின் இலட்சியத்தையும் மக்கள் மனதிலிருந்து என்றுமே அகற்ற முடியாது. தர்மரின் படுகொலையையிட்டு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபருமான அ. அமிர்தலிங்கம் கூறுகையில், தர்மர் தமிழனாலேயே படுகொலை செய்யப்பட்டார் என்று எண்ணும் போது ஒவ்வொரு தமிழனும் வெட்கத்தினால் தலைகுனிய வேண்டிய நிலையை இப் பாதகச் செயலை செய்தவர்கள் ஏற்படுத்தி விட்டார்கள் எனக் கூறியுள்ளார்.

ஆ.சி.கணேசவேல் (ஜே.பி.)
முன்னாள் பிரதேச சபை உறுப்பினர், ஆனைக்கோட்டை





யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் முன்னாள் துறைத் தலை வர் கலாநிதி க.சிதம்பர நாதனின் நெறியாள்கை யில் உருவான "உயிர்ப் பைத் தேடி" சக்தியைப் பகிரும் ஆற்றுகை நிகழ்ச்சி அண்மையில் கந்தர் மடம் பழம் வீதியிலமைந்துள்ள பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் இடம்பெற்றது. அரங்க செயற்பாட்டுக் குழுவினர் பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் நிகழ்த்தும் இக்கொண்டாட்ட அரங்கில் ஆடல், பாடல், காண்பியம், கதை சொல்லல் என அனைத்தும் இணைந்த ஓர் அரங்காக இடம் பெற்றமையினை படங்களில் காணலாம்.

# துர்நாற்றம்; தொற்றுநோய் அபாயம்



(யாழ்ப்பாணம்)

குருநகர் கடற்கரைப் பகுதியில் கொட்டப்படும் திண்மக் கழிவுகளால் கடல் வளம் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் கடற்கரை ஓரங்களை அண்டிய பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதோடு தொற்றுநோய் பரவும் அபாயம் இருப்பதாகவும் பிரதேச மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இத் திண்மக் கழிவுகளை உரிய முறையில் அகற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கையெடுத்து தொடர்ந்து குறித்த பிரதேசத்தில் திண்மக் கழிவுகளை வீசுபவர்களை கண்டறிய சி.சி.ரி.வி கமராக்களை பொருத்துவதனூடாக இப் பிரச்சினைக்குரிய தீர்வினை எட்ட முடியும் என பிரதேச மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-10-109)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம்<br>கி.பா:13<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:B.Eng/<br>பொறியியளாளர் கனடா<br>தொ.இ: B/7026 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் செவ் 2<br>ல்உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc/தனியார்<br>தொழில்<br>தொ.இ: G/7031 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் செவ் 12ல்<br>தகைமை/தொழில்:A/L/தனியார்<br>தொழில<br>தொ.இ: B/7027 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 33செவ் 2 ல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:BSc<br>தொ.இ: G/7033 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 32<br>உயரம்: 179cm<br>தகைமை/தொழில்:BBM, AIB/<br>வங்கியாளர்<br>தொ.இ: B/7029 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 13செவ் 4 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/7034 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 10<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:லண்டன் PR<br>தொ.இ: B/7032 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 32செவ் 1 ல<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BA/<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/7035 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பாரிய இயந்திரங்களின் உதவியுடன் நிலத்தடி உவர்நீர் வெளியேற்றம்

## விவசாய நிலங்கள் பாதிப்பு

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேசத்தில் அமைந்துள்ள பழைமை வாய்ந்த விவசாயக் கிராமமான பொன்னாவெளியில் விவசாய நிலங்கள் மத்தியில் கடற்கரைப் பக்கமாக பாரிய இயந்திரங்களைப் பயன்படுத்தி நில மட்டத்திலிருந்து 200 அடி ஆழத்திற்கு துளையிட்டு நிலத்தடி உவர் நீர் வெளியேற்றப்பட்டு விவசாய நிலங்களுக்கு பாய்ச்சப்படுகின்றன.

இப் பகுதி விவசாய நிலங்களும் அயல் கிராம விவசாய நிலங்களும் உவர் நிலமாக மாறுகின்ற பெரும் அபாய நிலையை எட்டியு ள்தாக வேரவில், பொன்னாவெளி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயப் பிரதிநிதிகள் அண்மையில் நடைபெற்று முடிந்த பூநகரி பிரதேச இணைப்புக்குழு கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள் முன்னிலையில் தமது ஆட்சேபத்தை தெரிவித்தனர்.

இது தொடர்பில் எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென கவலை தெரிவிக்கும் விவசாயிகள் டோக்கியோ சீமெந்து நிறுவனம் சீமெந்து தயாரிப்பதற்காக நிலத்தடியில் உள்ள கற்கள் பயன்படுத்தப்படுமா என ஆராயும் பொருட்டு தொடர்ச்சியாக ஆராய்ச்சிகள் நடைபெறுவதாக தெரிவிக்கின்றனர்.

இந் நடவடிக்கையை முற்றாக நிறுத்தினால் மட்டும் தமது பல நூற்றுக்கணக்கான விவசாய நிலங்கள் உவர் நிலமாக மாறுவதை தடுக்க முடியுமென தெரிவிப்பதுடன் இது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபருடனும் அரசியல் பிரமுகர்களுடனும் பேசவுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். (2-84)

# தமிழர்களை இயல்பு வாழ்விற்குள் வாழவிட அரசிற்கு எண்ணம் இல்லை

## பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழர்களை ஒரு இயல்வாழ்க்கைக்குள் வாழ விடவேண்டும் என்ற எண்ணம் இன்னமும் இந்த அரசாங்கத்திற்கு இல்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இரணைதீவு பகுதியில் தமது பூர்வீக நிலங்களை விடுவிக்கக்கோரி கடந்த மேமாதம் முதலாம் திகதி முதல் தொடர்ந்து நான்கு மாதங்களாக தொடர் கவனயீர்ப்புப்போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் இரணைதீவுப்பகுதியை விடுவிக்கக்கோரி முழங்காவில் இரணைமாதா நகரில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களைச் சந்தித்து கலந்துரையாடிய போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் தமிழர்களை ஒரு இயல்பு வாழ்க்கைக்குள் வாழவிடவேண்டும் என்ற எண்ணம் கடற்படைக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ இல்லை எனக் கூறினார்.

பாதுகாப்பு அமைச்சர் இரணைதீவை விடுவிப்பதற்கு சில சாதகமான முடிவுகளை எடுக்க முயற்சிக்கின்றபோதும், கடற்படையினர் நிலங்களை விடுவிப்புதற்கு இம்மிய ளவும் விரும்பவில்லை. இன்னமும் கடற்படையினரிடம் இருக்கின்ற இனத்துவேசங்களும் வேறுபாடு தன்மைகளிலும் அவர்கள் மாறியதாக இல்லை. இரணைதீவு விடுவிக்கப்படக்கூடாது என்பதற்கு கடற்படையினர் பல்வேறு காரணங்களை அடுக்கிச்செல்கின்றனர்.

தொடர்சியாக தமிழர்கள் எல்லா இடங்களிலும் கையேந்துகின்ற, போராடுகின்ற ஒரு குழப்பகரமான சூழலை தொடர்ச்சியாக அரசாங்கம் வைத்திருக்க விரும்புகின்றது அந்த நிலைமைகளில் இருந்தும் கூட அவற்றுக்குள்ளால் இவ்வாறு இந்த சாதகமான முடிவுகள் எடப்பட்டன.

இந்த வாரம் என்னுடன் பேசிய பிரித்தானிய உயரஸ்தானிகள் ஜேம்ஸ் டொறிவிடமும் இதனை வலியுறுத்தியிருந்தேன்.

400 வருடங்கள் பழைமை வாய்ந்ததும் அதாவது 1934 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசினால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட இரணைதீவு காணிகளைக் கூட இன்னமும் விடுவிக்கவில்லை என்ற விடயத்தை கூட வலியுறுத்தியுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# முள்ளிக்குளம் கடற்படையினருடன் காணி விடுவிப்பு தொடர்பில் கலந்துரையாடப்படும்

## சாள்ஸ் எம்.பி. தெரிவிப்பு

மன்னார் முள்ளிக்குளம் பகுதியில் கடற்படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் உறுதியளித்திருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் முள்ளிக்குளம் பகுதியில் கடற்படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பதற்கு ஏற்கனவே உறுதியளித்தபடி குறித்த காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் உள்ளன.

கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோர் இரணைதீவு விடுவிப்பு தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்றை பூநகரி பிரதான கடற்படைத்தளத்தில் மேற்கொண்டிருந்தனர். இரணைதீவை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடலை யடுத்து மன்னார் முள்ளிக்குளம் பகுதியில் கடற்படையினர் வசமுள்ள காணிகள் விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

இக்கலந்துரையாடல் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கருத்துத்தெரிவிக்கையில், முள்ளிக்குளம் பகுதியில் கடற்படையினர் வசமுள்ள காணிகளில் கடற்படையினர் விடுவிப்பதாக உறுதியளித்த அடம்பன் குளமும் அதனை அண்டிய விவசாய நிலங்களும் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கின்றோம். மன்னார் மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை விக்ரர் அடிகளார் தலைமையிலான மதகுருமார் இந்த கோரிக்கையை முன் வைத்தனர்.

இதன் போது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் முள்ளிக்குளம் கடற்படை முகாமிற்கு வருகை தந்து கடற்படையோடு கலந்தாலோசித்து காணிகளை விடுவிப்பது தொடர்பில் உறுதியளித்துள்ளார் என பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார். (2)

# முன்னாள் போராளிகளுக்கு மருத்துவ உதவிக்கு நிதியுதவி வழங்கல்



தெரிவு செய்யப்பட்ட முன்னாள் போராளிகளிற்கு மருத்துவ உதவிக்கான நிதி உதவி வழங்கல் நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகமான அறிவகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தலைமையில் நடைபெற்றுள்ளது. அத்துடன், புலம்பெயர்ந்து வாழும் தாயக செயற்பாட்டாளரான தா.மயூரனின் நிதி உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட முன்னாள் போராளிகளிற்கு மருத்துவ உதவிக்கான நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், தெரிவு செய்யப் பட்ட முன்னாள் போராளிகளின் மருத்துவ தேவைகளைக் கருத்தில் கொண்டு மருத்துவ உதவிக்கான நிதி உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (2)

வன்னி வலம்

# யுத்தகாலத்தில் போடப்பட்ட மண் அணைகள் அகற்றப்படவில்லை

## வெடிபொருட்கள் காணப்படுவதாக மக்கள் அச்சம்

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் ஐயனார் புரம், அக்கராயன் குளம் ஆகிய பகுதிகளில் யுத்த காலத்தில் போடப்பட்டுள்ள மண் அணைகள் அகற்றப்படவேண்டும் எனவும் இப்பகுதிகளில் வெடிபொருள் அச்சம் காணப்படுவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளதுடன் கிளிநொச்சி ஆனைவிழுந்தான், வன்னேரிக் குளம், ஐயனார்புரம் ஆகிய பகுதிகளில் விவசாயநிலங்கள் குளங்களின் நீரேந்து பிரதேசங்கள் ஆகிய வற்றில் யுத்த காலத்தில் போடப் பட்ட மண் அணைகள் இன்று வரை அகற்றப்படாமல் காணப்படுகின்றன.

குறிப்பாக ஐயனார்புரம் ஆனைவிழுந்தான் பொதுமயானத்தினை அண்மித்த பகுதியிலும் இதே வேளை வன்னேரிக்குளத்தினை அண்மித்த பகுதியிலும் இராணுவ மண் அணைகள் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படும் மண் அணைகளை அண்மித்த பகுதிகளில் வெடிபொருட்களின் ஆபத்துக்கள் காணப்படு வதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை இப்பகுதிகளில் காணிகளை துப்பு ரவு செய்து அவற்றை எரிக் கும் போது அச்சமான சூழல் காணப்படுவதாகவும் இப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.





இதேவேளை அக்கராயன்குளம் பகுதியில் வெடிக்காத நிலையில் எறிகணைகள் உள்ளிட்ட வெடிபொருட்கள் காணப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர் நேற்று முன்தினம் அக்கராயன்குளம் கெங்காதரன் குடியிருப்பு பகுதியில் காணியை துப்புரவு செய்த போது வெடிக்காத நிலையில் எறிகணை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மண் அணைகளில் வெடிபொருட்களின் அச்சம் காணப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (2)

# வாழ்வாதார நடவடிக்கைக்கு உதவுவதற்கு முன்வாருங்கள்

## கெங்காதரன் குடியிருப்பு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி கெங்காதரன் குடியிருப்பு பகுதியில் உள்ள குடும்பங்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு உதவ வேண்டும்என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பு பகுதியில் தற்போது 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

குறித்த பகுதியில் தலா அரை ஏக்கர் காணிகளில் இந்த மக்கள் வாழ்ந்து வருவதனால் அக் காணிகளில் எந்தவித வாழ்வாதார பயிர்ச்செய்கைகளையோ அல்லது ஏனைய வாழ்வாதார செயற்பாடுகளையோ முன்னெடுக்க முடியாது என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலையில் அன்றாட உணவிற்கே பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருவதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு தொழில் வாய்ப்புக்களையோ அல்லது வேறு பயிர்ச் செய்கை காணிகளையோ பெற்றுத்தருமாறு இப்பகுதி மக்கள் பொது அமைப்புக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)

# வரட்சி நிவாரணம் வழங்கலில் பாரபட்சம்

## பாதிக்கப்பட்ட குடும்பங்கள் குற்றச்சாட்டு

(வவுனியா)

வரட்சி நிவாரணம் வழங்கலில் நெடுங்கேணி பிரதேச செயலக பிரிவில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் நெடுங்கேணி வடக்கு,தெற்கு,ஒலுமடு, ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளில் வரட்சி நிவாரணமாக அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரணங்களில் கிராம சேவையாளர்களினால் கிராமத் தலைவர்களின் தரவுகளின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் சில காரணங்களை காட்டி நீக்கப்பட்டு வருவதாக பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் கவனம் எடுக்கப்பட்டு பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைவருக்கும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்துதரும்படி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)

# துணுக்காயிலிருந்து அக்கராயன் ஊடாக யாழ்ப்பாணத்திற்கு பேருந்து சேவையை ஆரம்பியுங்கள்

முல்லைத்தீவு துணுக்காயில் இருந்து கிளிநொச்சி அக்கராயன் வழியாக யாழ்ப்பாணம் வரை நடைபெற்ற பேருந்து சேவைகள் கடந்த ஆறாண்டுகளாக நடைபெறாததன் காரணமாக போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

துணுக்காய், உயிலங்குளம், ஆலங்குளம், தென்னியங்குளம், கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம், அக்கராயன், ஸ்கந்தபுரம், முக்கொம்பன், பூநகரி வழியாக யாழ்ப்பாணத்திற்கும் ஸ்கந்தபுரம் கிளிநொச்சி வழியாக யாழ்ப்பாணத்திற்கும் பேருந்து சேவைகள் நடைபெற்ற நிலையில் அக்கராயனில் துணுக்காய் பேருந்து தரிக்கக் கூடாது என கிளிநொச்சி தனியார் பேருந்து சங்கத்தினர் அறிவித்த நிலையில் மேற்படி வழித்தடத்தில் நடைபெற்ற பேருந்து சேவைகள் கடந்த ஆறாண்டுகளாக நடைபெறவில்லை.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர், முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் ஆகியோருக்கு மேற்படி கிராமங்களின் பொது அமைப்புகள் மனுக்கள் கையளித்த போதிலும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் ஆராயப்பட்ட போதிலும் மேற்படி கிராமங்களுக்கிடையிலான போக்குவரத்து நடைபெறவேயில்லை.

வடமாகாண பிரதி அவைத் தலைவர் கூட வடமாகாண போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியும் பயனில்லை. துணுக்காயில் இருந்து அக்கராயன் வழியாக யாழ்ப்பாணத்திற்கான பேருந்து சேவைகளை நடத்துவதற்கு வடமாகாண போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட கிராமங்களின் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-312)


1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி.

பொன்மணி கதிர்காமத்தம்பி



மண்ணில் 1936 - 08 - 21

விண்ணில் 2016 - 09 - 14

ஓராண்டானாலும் எம்மை விட்டுப்
பிரிந்த தாயின் மடி தேடி
மனதால் வாடும் உயிரோடு,
உணர்வோடு, உதிரத்தோடு,
ஒன்றாய் கலந்த...

03.09.2017 நாளை
ஞாயிற்றுக்கிழமை அன்னாரின்
இல்லத்தில் நடைபெறும்
ஆத்ம சாந்திப்
பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து
இடம்பெறும்
மதிய போசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

(286)

325, பிரதான வீதி,
பருத்தித்துறை.

021 226 4920

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்


# ஆடை விற்பனை நிலைய களஞ்சிய அறையில் தீ!

## பல இலட்சம் பொருட்கள் எரிந்து நாசம்



(குருமன்காடு)

வவுனியா பசார் வீதியில் அமைந்துள்ள ஆடை விற்பனை நிலையம் ஒன்றில் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள களஞ்சிய அறையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஏற்பட்ட தீவிபத்தில் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து சாம்பலாகின.

வவுனியா பஸார் வீதியில் அமைந்துள்ள பிரபல விற்பனை நிலையமான ஆடை விற்பனை நிலையத்தில் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. உடனடியாக வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு பிரிவினரும் வவுனியா பொலிஸாரும் இணைந்து சுமார் ஒரு மணிநேர போராட்டத்தின் பின்னர் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இத் தீ விபத்து கட்டடத்தின் இரண்டாம் பகுதியிலிருந்த கணனியிலிருந்து பரவியிருக்கலாம் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது.

சம்பவம் நடைபெற்ற நேரத்தில் அப் பகுதி புகைமண்டலமாக காணப்பட்டதையடுத்து இலங்கை மின்சார சபையினர் அப்பகுதிக்கான மின் இணைப்பை துண்டித்தனர்.

இது தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (2-112-250)

# முல்லையில் கிராம அமைப்புகளுக்கு குடிநீர்த்தாங்கிகள் வழங்கப்பட்டன

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிலஅபிவிருத்தி வேலைகள் நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீமினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கும் நோக்கோடு குடிநீர் தாங்கிகள்கிராமஅமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் தெரிவுசெய்யப்பட்ட 35 பயனாளிகளுக்கு மலசலகூடத்திற்கான முதற்கட்டப்பணமும் அமைச்சரினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. ஒரு மலசல கூடத்திற்கு 35 ஆயிரம் ரூபா செலவிடப்படும்.

இதேவேளை நீராவிப்பிட்டி மக்களின் குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்வதற்கு தண்ணீர் தாங்கிக்கான புனர்நிர்மாணத்திற்கான அடிக்கல்லினையும் நாட்டி வைத்து உரையாற்றிய அமைச்சர், முல்லைத்தீவில் தமிழ்,முஸ்லிம் உறவுகளின் ஒற்றுமையை குழப்புவதற்கு சிலஅரசியல் தலைமைகள் இயங்கி வருகின்றன. இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் இரண்டு சமூகங்களுக்கிடையில் சமனாக தனது அமைச்சின் அபிவிருத்திப் பணிகள்நடைபெறும்எனவும்அவர்தெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உனேஸ் பாரூத் கருத்து தெரிவிக்கையில் , தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் இணைந்து முஸ்லிம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுவதில் முன்னின்று செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்திஸ்ரீஸ்கந்தராசாவும் கலந்துகொண்டிருந்தார். (2)


யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
164, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
021 222 8117, 077 900 8776
வவுனியாவில்: (024) 324 4444


# கோணாவிலில் 240 குடும்பங்கள் குடிநீரைப் பெறுவதற்கு அவதி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச் சிப்பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள கோணாவில் பகுதியில் உள்ள மக்கள் தற்போதைய வரட்சி காரணமாக தமக்கான குடிநீர் பெற்றுக் கொள்ள முடியாது பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகத் தெரிவிக்கின் றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச சபையின் கீழு ள்ள கோணாவில், அறிவியல்நகர், உருத்திரபுரம், செருக்கன் ஆகிய பகுதிகளில் குடிநீருக்கான தட்டுப்பாடுகள் நிலவி வருகின்றன.

இந்நிலையில் கரைச்சிப்பிரதேச சபையின் கீழுள்ள கோணாவில் கிழக்குப் பகுதியில் 240 வரையான குடும்பங்கள் தமக்கான குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது நிலவும் வரட்சி காரணமாக இங்குள்ள மக்கள் தமக் கான குடிநீரைப் பெற்றுக்கொள்வ தற்கு மிக நீண்டதூரத்திற்கு செல்ல வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளதுடன் மீள்குடியேற்றத்தின் பின்னர் அமைக்கப்பட்ட பொதுக் கிணறுகள் தண்ணீரின்றி வற்றிக் காணப்படுகின்றன எனவும் தெரிவித்துள்ளனர். (2)

# தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் இன்று சித்திரத் தேரில் பவனி



இன்று எழுச்சிப் பெருநிலை கண்ட துர்க்கை அம்பாள் சந்நிதானம் வானளாவும் உயர்ந்த இராஜ கோபுரத்துடனும் பரந்து விரிந்த மண்டபங்களாலும் துர்காபுஸ்கரணி தீர்த்த நீர் நிறைந்த தடாகத்துடனும் திருக்காட்சி தருகின்றது. துர்க்கை அம்மன் மூல விக்கிரகம் சங்கு, சக்கரம் ஏற்றிய திருக்கரங்களோடு அருளாட்சி புரிகின்றது.

மதுரையிலே மதுரை மீனாட்சி அம்மனின் ஆட்சி, சிதம்பரத்திலே சிதம்பர நடராஜப் பெருமானின் ஆட்சி, தெல்லிப்பழையிலே கொற்றாவைத் தெய்வமான துர்க்கை அம்மனின் அருளாட்சி நடைபெறுகின்றது. தாமரைப் பூக்கள் செங்கதிரவனாகிய சூரியன் உதயமாகும் போது விரிகின்றன. துர்க்கை அம்மனின் உதயத்தால் அடியார்கள் அன்பர்களின் இதயத் தாமரைகள் மலர்கின்றன.

கோவில்கள் சமுதாயப் பணிகளை ஆற்றி இருக்கின்றன என்பதை திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் தமது தேவாரப் பாடல்களில் காட்டியுள்ளார்கள். இதனை தெய்வச் சேக்கிழாரும் பெரியபுராணத்தில் எடுத்துக் காட்டியுள்ளார். இவற்றையே தம் சிரமேற் கொண்ட சிவத்தமிழ் செல்வி அம்மையாரும் துர்க்கை அம்பாள் ஆலயத்தை ஈடு இணையற்ற சமுதாய நலப் பெருநிலையமாக விளங்கவைத்தார். இதன் முக்கிய பணி ஏழைப் பெண் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிப் பணியான துர்க்காபுரம் மகளிர் இல்லம் ஆகும்.

இந்த நூற்றாண்டில் துர்க்கை அம்பாளுக்கு வருடாந்த பங்குனிச் செவ்வாய் பொங்கல்விழா, ஆடிச் செவ்வாய் விழா, நவராத்திரி விழா, மானம்பூ உற்சவம் தான் சிறப்பாக நடைபெற்றது. ஏனைய உற்சவங்கள், விழாக்கள் எல்லாம் 1978 இற்குப் பின்னர்தான் நடைபெற்று வருகின்றன.

1965ஆம் ஆண்டு ஆவணி மாதத் திருவோண நட்சத்திரத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன் பின்னர் 1968இல் கொடிமரம் நாட்டப்பெற்று மஹோற்சவம் ஆரம்பமானது. இம் மஹோற்சவம் சிறப்புற அமைய நிர்ணயம் செய்த பெருமை அச்சுவேலி சிவஸ்ரீ.ச.குமாரசாமிக் குருக்கள் ஐயாவையே சாரும். மஹோற்சவத்தில் முதல் மூன்று நாட்களும் விநாயகப் பெருமானுக்குரிய யாகமும், பின்வரும் 9 நாட்களுக்குரிய யாகம் நவசக்தி நாயகியாக விளங்கும் துர்க்கை அம்பாளுக்கு உரிய யாகமாக அமைய நிர்ணயம் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே ஆண்டுதோறும் ஆவணி மாத திருவோண நட்சத்திரத்தில் தீர்த்த உற்சவம் நடைபெறும் வண்ணம் ஒழுங்கு அமைக்கப்பட்டுள்ளது.

மஹோற்சவ காலத்தில் அடியார்கள் அனைவரும் கொடித்தம்ப பூசை, யாகபூசை, வசந்த மண்டபப் பூசை ஆகிய மூன்றையும் தவறாது தரிசித்தல் வேண்டுமென சிவத்தமிழ் செல்வ அம்மையார் ஆண்டுதோறும் பிரசங்கம் செய்து வந்தமை யாவரும் அறிந்தவையே.

சைவாலயங்கள் தூய்மையாக அமைய வேண்டும். தூய்மையில்தான் தெய்வீகத்தைக் காணலாம் என்பது அம்மையாரின் ஆழமான கருத்து. எனவேதான் ஆண்டுதோறும் துர்க்கை திருவீதி எங்கும் வெண்மணல் பரப்பி தூய்மையைக் காண வழியமைப்பார். துர்க்கை அம்மன் இருப்பிடம் செம்மண் பிரதேசம். ஆயினும் திருவீதியில் எங்கு பார்த்தாலும் வெண்மணல் பிரதேசமாக அழகுக் காட்சி தரும்.

இன்றைய காலத்தில் கோயில்களில் பணிசெய்ய தொண்டர்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது யாவரும் அறிந்த விடயமாகும். எது எவ்வாறாக இருந்தாலும் சரியைத் தொண்டுகளுக்கு தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் கடந்த ஐம்பதாண்டு காலமாக தொண்டாற்றிய சிவத்தமிழ் செல்வி அம்மையார் ஒரு நல்வழிகாட்டி. மேலும் துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபை முப்பத்தைந்து ஆண்டு காலமாக தங்களின் அளப்பரிய பணிக்காக செய்து வருகின்றது.

ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்ற உயரிய நோக்கில் அம்மையார் ஆரம்பித்து வழிநடத்திய துர்க்காபுரம் மகளிர் இல்லப் பணிகள் நிர்வாக செயற்பாடுகளுக்கு பக்க பலமாக இருத்தல் யாவரும் அறிந்தவையே.

தொண்டர்களின் பெருமையை தெய்வச் சேக்கிழார் பெரிய புராணமாக வடித்துள்ளார். சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் தொண்டின், தொண்டர்களின் பெருமையை உணர்ந்தவர்-அறிந்தவர்.

இன்று துர்க்கை அம்மன் திருவீதியில் திருத்தேர் ஓடுகின்றது. சமுதாய, சமூக உறவை மேம்படுத்தும் அடியார் கூட்டத்தின் தேர் விழா இதுவாகும். சைவத்தமிழ் மக்களுக்கு ஒரு விடிவை, அமைதியைத் தர வேண்டும் என வெற்றித் தெய்வம் துர்க்கை அம்பாளின் தேர் விழாவில் அனைவரும் பிரார்த்திப்போமாக.

கா.சிவபாலன்

## மஹா கும்பாபிஷேகம்

மாவிட்டபுரம் செருக்கன் கிணற்றடி ஞானவைரவர் ஆலய நூதன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நாளை 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 07.45 மணி முதல் 08.52மணி வரை இடம்பெறும். எண்ணெய்க் காப்பு சார்த்துதல் அன்று 02 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் இடம் பெறும்.

நாளை காலை கும்பாபிஷேகம் இடம் பெற்று தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேக பூசைகளுடன் எதிர் வரும் 14 ஆம் திகதி சங்காபிஷேகமும் அடியார்களுக்கு அன்னதானமும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## ஆத்திசூடி ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய அலங்கார உற்சவ சங்காபிஷேகம்

யாழ். கந்தர்மடம் ஆத்திசூடி ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்காபிஷேகம் இடம்பெற்று நண்பகல் அன்னதானம் வழங்கப் படும்.

மாலை 4 மணிக்கு திருவூஞ்சல், பஞ்சமுக அர்ச்சனையைத் தொடர்ந்து விநாயகப் பெருமான்தெருவீதியுலாவரும் அலங்கார காட்சியும் இடம் பெறும். (இ-3)

## கவனயீர்ப்பு தொடர்கிறது



காணாமற் போனோரின் உறவினர்களால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முன்தினம் 171 ஆவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றது.

வடமாகாணத்தில் காணாமல் போனோரின் உறவினர்களால் தொடர் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் யாழ். மாவட்டத்தில் காணாமல் போனோரின் உறவினர்களால் மருதங்கேணிப் பிரதேச செயலகத்திற்கு முன்னால் கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்ட கவனயீர்ப்புப் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இக் கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு அரசியல் தலைவர்கள், பொது அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் தமது ஆதரவினை நல்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-60)

## தேரும் தீர்த்தமும்

(யாழ்ப்பாணம்)

மந்துவில் வடக்கு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 23 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (இ-10-101)

---

இளவாலை மாரீசன்கூடல் ஸ்ரீ களப்பராகிரி முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

நாளை மறுதினம் 4 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (இ-10-104

## 'அருட்கதிர்' ஆன்மீக சஞ்சிகை


(யாழ்ப்பாணம்)

யாழ். கதிர் கலையகத்தால் வெளியீடு செய்யப்படவுள்ள "அருட்கதிர்" ஆன்மீகச் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆன்மீ கக் கட்டுரைகள், ஆலய வர லாறுகள் மற்றும் அற்புதங் கள் போன்ற பல ஆன்மீக விடயங்களையும் தாங்கி வரவுள்ள இச் சஞ்சிகைக்கு ஆக்கங்களை அனுப்ப விரு ம்புவோர் ஆசிரியர், அருட் கதிர், யாழ். கதிர் கலையகம், மத்திய கல்லூரி வீதி, நெல் லியடி, கரவெட்டி என்னும் முகவரிக்கு 20.09.2017 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் யாழ். பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறைத் தலைவருமான பேராசிரியர் மா.வேதநாதன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-7)

## அல்வாய் சமூக அமைப்பால் கழிவுத் தொட்டிகள் வைப்பு

(கரணவாய்)



வீதிகளில் கழிவுகள் தேங்காமலும் சுத்தமாகவும் வைத்திருப்பதற்காகவும் அல்வாய் சமூக கலாசார அமைப்பினால் தகரத்திலானான கழிவு போடும் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சியின் மாலுசந்தி தொடக்கம் நாவலடிச் சந்தி வரையான பகுதிகளில் ஆங்காங்கே இக்கழிவு போடும் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. (இ-60)

## ஜெகத் ஜெயசூரியவுக்கு ஆதரவாக அரசாங்கம் செயற்பட வேண்டும்

### மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்து

(கொழும்பு)

முன்னாளர் இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரியவிற்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு பங்களிப்பு செய்த இராணுவ வீரர்களுக்கு எதிராக அவ்வாறான நடவடிக்கைகள் எடுப்பது குறித்து கவலையடைவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## இலஞ்சம் மற்றும் ஊழலை சகித்துக் கொள்ளக் கூடாது

### பிரசாத் காரியவசம் தெரிவிப்பு

இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடிகளே நேர்மையான ஆட்சியை ஊக்கமிழக்க செய்வதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பு பாதுகாப்பு கருத்தரங்கில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சாதாரண மக்கள், ஆட்சி முறைமை தமக்கு எதிராகவுள்ளதென்று உணர்வதற்கு ஊழலே காரணம்.

" ஊழல் அநீதி , அவமதிப்பு என்பவை தீவிரவாதங்களுடன் மக்கள் சேர்வதற்கு காரணமாகின்றது. தீவிர வன்முறையை தடுப்பதற்கு , ஊழலை ஒழிப்பதும் , அரசாங்கம் நேர்மையாக செயற்படுவதும் அவசியமாகும்."

மக்களின் மனத்தாக்கங்கள் கவனிக்கப்பட்டு அவற்றை தீர்த்து வைப்பது அவசியம். இது நடைபெறாத போது தீவிரவாதம் வளர் வதற்கு களம் அமைத்துக் கொடுக்கப்படுகிறது.

"இலங்கை பாதுகாப்பு படைகள் இப்போது புதிய சவால்களுக்கு முகம்கொடுக்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 02.09.2017-04.10.2018 வரை



எல்லாவற்றிலும் முதலிடம் பிடிக்க வேண்டுமென்று விரும்பும் மேஷ இராசி அன்பர்களே!

(பெயரின் முதல் எழுத்துக்கள்: சு, சே, சோ, ல, லி, லு, லே, லோ, அ. உள்ளவர்களுக்கும்)

உங்கள் இராசிக்கு 9 ஆம் இடமான தனுசு இராசிக்கும், 12 ஆம் இடமான மீன இராசிக்கும் உரியவர் குரு பகவான். அவர் இதுவரை உங்கள் இராசிக்கு 6ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்தார். அவர் இப்போது உங்கள் இராசிக்கு 7 ஆம் இடமான துலாம் இராசிக்குச் செல்கிறார். அங்கிருந்து சப்தம பார்வையால் உங்கள் இராசியைப் பார்ப்பது மிக மிகச் சிறப்பாகும்.

குரு பகவானைப் பொறுத்தவரை ஸ்தான பலத்தை விட, பார்வை பலமே அதிகம் என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. 5,7,9 ஆகிய பார்வைகள் எந்தெந்த இடங்களில் எல்லாம் பதிகின்றதோ, அந்தந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடக்க குருபார்வை ஒன்றே கைகொடுக்கும்.

அதேநேரத்தில் குருவின் பெயர்ச்சியை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், உங்கள் இராசிக்கு மற்ற இடங்களில் உள்ள கிரக அமைப்புகள் சஞ்சாரத்தின் படியும், சுயஜாதகத்தின் படியும் பார்ப்பதோடு, நடக்கும் திசாபுத்தி நன்மை தரும் திசை தானா? என்பதையும் கணக்கிட்டு அதற்குரிய சிறப்புப் பரிகாரங்களையும் செய்து கொள்ளுங்கள்.

குதூகலம் தரும் குருப் பெயர்ச்சி!

குருப்பெயர்ச்சியாகும் இந்த சமயத்தில், இராகு-கேதுக்களும் சில நாட்களுக்கு முன்னதாக பெயர்ச்சியாகி இருக்கின்றன. 4 ஆம் இடத்தில் இராகுவும், 10 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் சனி பகவான், இன்னும் 3 மாதங்களில் அதாவது, 19.12.2017 அன்று உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தை விட்டு விலகி 9 ஆம் இடத்திற்கு வந்து உன்னதமான பலன்களை வழங்கப் போகிறார்.

இவற்றை கருத்தில் கொண்டு இப்பொழுது பெயர்ச்சியாகும் குருபகவான் எப்படிப்பட்ட பலன்களைக் கொடுக்கப் போகின்றார் என்பதைப் பற்றி நாம் அறிந்துகொள்ளலாம்.

'குரு பார்க்கக் கோடிநன்மை' அதனால் தான் பெயர்ச்சியாகும் குருவை முன்னதாகவே சென்று வழிபட்டு வரவேண்டும் என்பார்கள். குரு பீடங்களுக்குரிய ஆலயங்களுக்குச் சென்று பரிகாரங்களை முறையாகச் செய்யும் பொழுது நன்மைகள் நடைபெறும் என்பது நம்பிக்கை.

இந்த குருப்பெயர்ச்சியால் உங்கள் வாழ்க்கையில் புதிய பாதை புலப்படப் போகிறது. மதிப்பும், மரியாதையும் உயரப் போகிறது. நல்ல வரன்கள் கிடைத்து வாழ்க்கைப் பாதை சீராகப் போகிறது. வணிகம் செய்வதில் வளர்ச்சியும், இலாபமும் அதிகரிக்கும். உணர்ச்சிவசப் பட்டுப் பேசியதால் உறவுகள் பகையாகிப் போயிருக்கலாம். அவைகள் இனி உங்களைத் தேடி வந்து ஒற்றுமையைப் பலப்படுத்தும்.

மங்கல நாண் சூடுகின்ற வாய்ப்பும், இல்லத்தில் மழலைச் சத்தம் கேட்கும் வாய்ப்பும் உருவாகும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். உங்களை உதாசீனப் படுத்தியவர்களே உங்களிடம் உதவிகேட்டு வரப்போகிறார்கள். தடைகள் விலகும். தொகை வரவைப் பெருக்கிக் கொள்ள எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். மனம் இனிக்கும் சம்பவங்கள் மனையில் நடைபெறப் போகிறது. பூமி வாங்கும் யோகம், புது வீடு வாங்கும் யோகம் ஒரு சிலருக்கு வந்து சேரும். பணிபுரியும் இடத்தில் உங்களுக்கும் மேலதிகாரிகளுக்கும் இடையில் இருந்த மனக்கசப்புகள் அகலும். மொத்தத்தில் உங்கள் திறமை பளிச்சிடும் நேரமிது.

குரு பார்வை பலன்கள்!
ஏழினில் குருதான் வந்தால்
எதிர்காலம் சிறப்பாய் மாறும்!
வாழ்வினை வசந்தமாக்கும்
வருமானம் அதிகரிக்கும்!
சூழ்ந்திடும் பகை விலக்கும்!
தொல்லைகள் அனைத்தும் ஓயும்!
கோள்களில் குருவை நீங்கள்
கும்பிட்டால் வரனும் வாய்க்கும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. அந்த அடிப்படையில் 7 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு, உங்கள் வாழ்வில் வசந்தத்தை உருவாக்கப்போகிறது. வருங்காலம் நலமாக வழிகாட்டப் போகிறது. ஏழாமிடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை சப்தம பார்வையாக உங்கள் இராசியை பார்க்கிறது. 5 ஆம் பார்வையாக

## ஏழில் குரு வருகிறது எதிலும் வெற்றி தருகிறது!

உங்கள் இராசிக்கு பதினோராம் இடமான லாப ஸ்தானத்தைப் பார்க்கிறது. 9 ஆம் பார்வையாக உங்கள் இராசிக்கு 3 ஆம் இடமான வெற்றிகள் ஸ்தானம், சகோதர ஸ்தானத்தைப் பார்க்கிறது. இந்தப் பார்வைகள் உங்களுக்கு மிகுந்த நற்பலன்களை வழங்கும்.

'ஜென்மத்தைக் குருதான் பார்த்தால் செயலிலே வெற்றி கிட்டும்' என்பார்கள். எனவே கடந்த காலத்தில் இருந்த கவலைகள் அகலும். தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் இருந்த தொல்லைகள் ஒவ்வொன்றாக குறையும்.

இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறப் போகிறது. வழக்கு, விவகாரங்களில் சாதகமான பலன்கள் உங்களுக்கு கிடைக்கும். புதிய முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். கௌரவம் அந்தஸ்து உயரும். உறவினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

'மூன்றினை குருதான் பார்த்தால் முன்னேற்றம் அதிகரிக்கும்' என்பார்கள். குருவின் பார்வை சகாய ஸ்தானத்தில் பதிவதால் அனைத்து வழிகளிலும் உங்களுக்கு சகாயங்கள் கிடைக்கும். குடும்ப ஒற்றுமை திருப்திகரமாக இருக்கும். சச்சரவுகளை உருவாக்கிய சகோதரர்கள் இனி சமாதானக் கொடிபிடிப்பர். மூத்த சகோதரர்களால் உங்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். பூர்வீக சொத்துத் தகராறுகள் காரணமாக விலகிச் சென்ற சகோதரர்கள் இனி விரும்பி வந்து சேருவர். எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும். தள்ளியிருந்த பெற்றோர்களை தன் குடும்பத்தோடு இணைத்துக் கொள்ளும் வாய்ப்பு ஒரு சிலருக்கு உருவாகும்.

'பதினொன்றை குருதான் பார்த்தால், பணவரவு திருப்தியாகும்' அது மட்டுமல்லாமல் 11 ஆம் இடத்தை பொறுத்து மூத்த சகோதரம், கல்வியால் இலாபம், தாய்வழி அனுகூலம், பெரிய மனிதர்களின் நட்பு, பொன், பொருள் சேர்க்கை, பயண விபரங்கள், உத்தியோக மேன்மை போன்றவற்றையும் நாம் அறிந்து கொள்ள இயலும். குருபார்க்கும் பொழுது மூத்த சகோதரத்




தால் உங்களுக்கு முன்னேற்றம் கிடைக்கும். முக்கிய புள்ளிகளில் ஒருவராக நீங்கள் மாறும் வாய்ப்பு உருவாகும். பணியிடத்தில் இருந்த நெருக்கடிகள் அகலும். மூதாதையர்களின் சொத்துகளில் இருந்த வில்லங்கங்கள் விலகி, உங்களுக்குரிய பங்கு கிடைக்கும்.

இல்லத்தில் இதுவரை இருந்த இக்கட்டான நிலை மாறும். சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். வாரிசுகளின் வாழ்க்கையில் நல்ல மாற்றங்கள் உருவாகும். மனதிற்கு ஏற்ற விதத்தில் கல்வி பயிலும் வாய்ப்பும், மணமாலை சூடும் வாய்ப்பும் உருவாகும். வியாபாரத்தில் இருந்த ஏற்ற, இறக்க நிலை மாறி கூட்டாளிகளால் கூடுதல் இலாபம் கிடைக்க வழி பிறக்கும். மூடிக்கிடந்த தொழிலுக்கு திறப்பு விழா நடத்திப் பார்ப்பீர்கள். வாழ்க்கைத் துணைக்கு உத்தியோகம் சம்பந்தமாக முயற்சி செய்திருந்தால், அதன் மூலமும் வருமானம் கிடைக்கும். படித்து முடித்த பிள்ளைகளுக்கும் வேலை கிடைத்துப் பணியில் அமரும் யோகம் உண்டு. மொத்தத்தில் பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும் நேரமாக இந்த குருப் பெயர்ச்சி காலம் அமையப் போகிறது.

குருவின் அதிசாரம்

14.2.2018 முதல் 11.4.2018 வரையான காலத்தில், குரு அதிசாரமாக விருச்சிக இராசிக்குச் செல்கிறார். அஷ்டமத்து குருவால் கஷ்டங்கள் வருமே என்று நினைக்க வேண்டாம். உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்திற்கு அதிபதியானவர் குரு. அவர் அஷ்டமத்தில் வரும் பொழுது 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கு ஏற்ப, திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். செய்தொழிலில் திடீர் முன்னேற்றங்கள் ஏற்படும். அயல்நாட்டு வர்த்தகத்தால் ஆதாயம் கூடுதலாகக் கிடைக்கும். ஒருசிலருக்கு தூரதேசத்தில் இருந்து வரும் அழைப்புகள், தொழில் ரீதியானதாக இருக்கலாம். கூட்டுத் தொழிலில் இருந்த சிக்கல்கள் அகலும். 9 ஆம் இடத்திற்கும் குருபகவான் அதிபதி என்பதால், இக் காலத்தில் தந்தை வழி உறவில் பிரச்சினைகள் உருவாகலாம்.

அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!

7.3.2018 முதல் 4.7.2018 வரை குரு வக்ர இயக்கத்தில் இருக்கிறார். குரு வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது, நன்மை, தீமைகள் கலந்தே வரும். திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் வெற்றியடையுமா? என்பது சந்தேகம்தான். மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்புடன் சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். அயல்நாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு, அனுபவமிக்கவர்களின் ஆலோசனை கைகொடுக்கும். புதிய முதலீடுகள் செய்து தொழிலை விரிவாக்க நினைத்தவர்கள், முன்பின் அறிமுகம் இல்லாதவர்களை நம்பி எதிலும் இறங்க வேண்டாம். கூட்டாளிகளுடன் இணைந்து செயற்படுபவர்கள் உடனுக்குடன் கணக்கு வழக்குகளை பார்த்துக்கொள்வது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

மேஷ இராசியில் பிறந்த பெண்களுக்கு மிக சிறப்பான நேரமிது. குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள். மனதில் இருந்த இனம் புரியாத கவலை அகலும். வியாழ நோக்கம் அமைவதால் திருமணமாகாத பெண்களுக்கு, மணமாலை சூடும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் மனம்போல் வாழ்க்கைத் துணை அமையும். கணவன்- மனைவி ஒற்றுமை பலப்படும். தள்ளிப் போன காரியங்கள் தானாக நடைபெறும். பிறந்த வீட்டிற்கும், புகுந்த வீட்டிற்கும் பெருமை சேர்க்கும் விதத்தில் நடந்து கொள்வீர்கள்.

தாய் மற்றும் சகோதரர்களின் ஆதரவு கிடைக்கும். விலகியிருந்த உறவுகள் திரும்ப வந்து ஒட்டிக்கொள்ளும். ஆரோக்கியம் சீராகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வும், இலாகா மாற்றங்களும் வந்து சேரலாம். உங்கள் சுய ஜாதகப்படி திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை தேர்ந்தெடுத்து வழிபடுவதோடு, வியாழன் தோறும் குருபகவானை வழிபாடு செய்யுங்கள்.


செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!

உங்கள் இராசிநாதன் செவ்வாய் என்பதால் முருகப்பெருமான் வழிபாட்டை முறையாகச் செய்து வருவது நல்லது. தற்சமயம் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால், சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானையும், அனுமனையும் வழிபடுவது சிறந்தது. சிறப்பு வழிபாடாக பிள்ளையார்பட்டியில் வீற்றிருந்து எல்லையில்லாத வரங்களை கொடுக்கும் கற்பக விநாயகரை வழிபடுவது நல்லது.

(தொடரும்......)

# அமெரிக்காவில் ரஷ்ய தூதரகங்களை மூட அரசு உத்தரவு

## தூதரக அதிகாரிகள் பதவி நீக்கத்திற்கு பதிலடி



(வோஷிங்டன்)

ரஷ்யாவில் அமெரிக்க தூதரகங்களில் பணியாற்றி வந்த ஊழியர்களை ரஷ்ய அரசு பதவிநீக்கம் செய்ததற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்காவில் மூன்று ரஷ்ய தூதரகங்களை மூட அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவில் 35 ரஷ்ய தூதரக அதிகாரிகளை சமீபத்தில் அந்நாட்டு அரசு வெளியேற்றியது.

மேலும் மேரிலேண்டில் உள்ள அமெரிக்க தூதரக வளாகங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

அதைத்தொடர்ந்து, அமெரிக்காவின் தூதர்கள் வெளியேற்ற நடவடிக்கைக்கு பதிலடி கொடுக்க ரஷ்யா முடிவு செய்தது. அதன்படி ரஷ்யாவில் தங்கியுள்ள 30 அமெரிக்க தூதர்கள் வெளியேற்றப்பட்டார்கள். மேலும் ரஷ்யாவில் இருக்கும் அமெரிக்க சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்நிலையில்.. அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரில் செயற்பட்டு வரும் ரஷ்ய தூதரகத்தை மூடுமாறு அமெரிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், வோஷிங்டனில் செயற்பட்டு வரும் ஒரு தூதரக அலுவலகம் மற்றும் நியூயோர்க்கில் செயற்பட்டுவரும் துணை தூதரக அலுவலகம் ஆகியவற்றை மூடுமாறு ரஷ்ய அரசிற்கு, அமெரிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. (8)

# 10 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருப்பவர்களை விடுவிக்க வேண்டும்

## தமிழக அரசிடம் வைகோ கோரிக்கை



(சென்னை)

அண்ணா பிறந்தநாளையொட்டி 10 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருப்பவர்களை விடுவிக்க வேண்டும் என தமிழக அரசுக்கு வைகோ கோரிக்கை விடுத்துள்ளார்.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் ,

சிறைவாசிகளைப் பரோல் விடுப்பில் அனுப்புவது ஒரு மனிதாபிமான நடவடிக்கை ஆகும். குடும்பத்தினருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டாலோ அல்லது குடும்பத்தில் ஏற்படும் நற்காரியங்களில் பங்கேற்கவோ, குடும்பத்தில் ஏற்படும் துயரச் சம்பவங்களில் அல்லது அவர்களுக்கு ஆறுதல் அளிக்க வேண்டிய அவசியம் கருதியோ பரோல் விடுப்பு தரப்படுகின்றது. அப்படி விடுப்பில் செல்லும் சிறைவாசி, தவிர்க்க இயலாத காரணங்களால் குறிப்பிட்ட நாளில் சிறைக்குத் திரும்பி வர இயலாமல் ஒரிரு நாட்கள் தாமதம் ஏற்பட்டு விட்டால் கூட, இந்தியத் தண்டனைச் சட்டம் 224 பிரிவுகளின் கீழ் மேலும் தண்டிக்கப்படுகின்றனர். இதனால் பொது மன்னிப்பில் அவர்கள் விடுவிக்கப்படுவது கிடையாது.

வழக்கில் தண்டிக்கப்பட்ட ஒரு சிறைவாசி, நீதிமன்றத்தின் மேல் முறையீடு செய்து இருந்தால் பரோல் விடுப்பு கிடையாது என்பதும், எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாத மனிதாபிமானம் அற்ற நடவடிக்கையாகும். மேல் முறையீடு ஆண்டுக்கணக்கில் நீடித்துக்கொண்டே போகும். சிறைச்சாலை என்பது தண்டிக்கும் இடம் அல்ல. சீர்திருத்தும் இடம் என்ற கோட்பாட்டை உலகில் பல நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

எனவே, சிறைவாசத்தில் திருந்திய மனிதர்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற வகையில், அண்ணாவின் 109 ஆவது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு, பத்து ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருப்போரையும், பரோல் விடுப்பில் ஒரு சில நாட்கள் த்வறியவர்களையும் முழுமையாக விடுதலை செய்ய வேண்டும் எனத் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கின்றேன் என்று அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளார். (8)

# இரண்டாம் உலகப்போரில் வீசப்பட்ட வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டது

## 70,000 பேர் வெளியேற்றம்

பிராங்க்பர்ட் நகரில் இரண்டாம் உலகப் போரில் வீசப்பட்ட குண்டு கண்டுபிடிக்கப்பட்டதால் அந்நகரில் இருந்து சுமார் 70 ஆயிரம் பேர் வெளியேற்றப்படவுள்ளனர்.

ஜேர்மனி நாட்டின் வர்த்தக மையமாக பிராங்க்பர்ட் நகரம் திகழ்கிறது. உலக அளவில் முக்கிய போக்குவரத்துகளுக்கான சந்திப்பு பகுதியாகவும் இந்த நகரம் உள்ளது.

இரண்டாம்உலகப்போரின் போது ஜேர்மனியை எதிர்த்த நாடுகள் ஏராளமான குண்டுகளை வீசின. அப்படி வீசப்பட்ட பல வெடிகுண்டுகள் வெடிக்கவில்லை. அவை ஜேர்மனி நாட்டின் முக்கிய நகரங்களில் விழுந்து பூமிக்குள் புதைந்து கிடக்கின்றன.

கடந்த ஆண்டு ஆக்ஸ்பர்க் நகரில் மிகப்பெரிய குண்டு கண்டு பிடிக்கப்பட்டு அகற்றப்பட்டது. கடந்த மே மாதம் ஹனோவர் நகரில் கண்டு பிடிக்கப்பட்ட குண்டை அகற்ற 54 ஆயிரம் பேரை நகரில் இருந்து வெளியேற்ற வேண்டியிருந்தது.

இந்த நிலையில் பிராங்க்பர்ட் நகரில் கடந்த புதன் கிழமை மிகவும் சக்தி வாய்ந்த வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அங்குள்ள பல்கலைக்கழக வளாகத்தில் புதைந்து கிடந்த அந்த குண்டு 1400 தொன் எடை கொண்டது.

இங்கிலாந்து நாட்டால் வீசப்பட்டிருந்த அந்த குண்டு எந்த நேரத்திலும் வெடிக்கலாம் என்ற அச்சுறுத்தல் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து பிராங்க்பர்ட் நகரில் இருந்து சுமார் 70 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட உள்ள னர்.

கடந்த 70 ஆண்டுகளாக புதையுண்டு கிடந்த அந்த பயங்கர குண்டுக்கு ஜேர்மனி அதிகாரிகள் "பிளாக்பஸ்டர்" என்று பெயர் சூட்டியுள்ளனர். அந்த பயங்கர குண்டு நாளை செயல் இழக்க செய்யப்படும் என தகவல் வெளியாகியுள்ளது. (8)

# அமெரிக்காவில் வரலாறு காணாத மழை

## 1 1/2 கோடி பேர் வெள்ளத்தில் சிக்கி தவிப்பு–37 பேர் பலி



(ஹூஸ்டன்)

அமெரிக்காவில் வரலாறு காணாத மழையால் ஹூஸ்டன் மற்றும் அதை ஒட்டி உள்ள பகுதிகளில் 1 ½ கோடி பேர் வெள்ளத்தில் சிக்கி தவிக்கிறார்கள். இந்த வெள்ளத்தில் சிக்கி இதுவரை 37 பேர் பலியாகியுள்ளனர்.

அமெரிக்காவின் தென் பகுதியில் மையம் கொண்டு இருந்த ஹார்வி புயல் டெக்சாஸ் மாகாணத்தை தாக்கியது. இதனால் அங்குள்ள ஹூஸ்டன் நகரம், ஆஸ்டின் நகரம் ஆகியவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் நகரம் முழுவதும் வெள்ளக்காடாக காட்சி அளிக்கிறது. நகரின் 3இல் ஒரு பகுதி வெள்ளத்தில் மூழ்கி இருக்கிறது. பல இடங்களில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து விட்டது.

ஹூஸ்டன் மற்றும் அதை ஒட்டி உள்ள பகுதிகளில் 1 ½ கோடி பேர் வெள்ளத்தில் சிக்கி தவிக்கிறார்கள்.

அவர்களில் பலரை மீட்க முடியாத அளவுக்கு வெள்ள நிலைமை மோசமாக உள்ளது. 32 ஆயிரம் பேரை மீட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்துள்ளனர். வெள்ளத்தில் சிக்கி இதுவரை 37 பேர் பலியாகி உள்ளனர்.

எங்கு பார்த்தாலும் வெள்ளமாக இருப்பதால் வீதிப் போக்குவரத்து முற்றிலும் முடங்கியுள்ளது. ஒரு சில வீதிகள் தவிர, மற்ற வீதிகள் அனைத்திலும் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம் முற்றிலும் தடைப்பட்டுள்ளது. இதனால் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மீட்புப் பணிகள் தீவிரமாக நடந்து வந்தாலும், போதிய ஆட்கள் இல்லாததால் இந்த பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. 12 ஆயிரம் பேர் மீட்பு பணியில் ஈடுபட்டிருந்தாலும் அது போதுமானதாக இல்லை என்று மக்கள் தெரிவித்தார்கள்.

வெள்ள நிலைமை மோசமாக இருப்பதால் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் காரணமாக மக்கள் வெளியே நடமாடாமல் இருப்பதால் இதை பயன்படுத்தி சமூக விரோதிகள் கொள்ளைகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள். (8)

# மும்பை கட்டட விபத்து;

## பலி எண்ணிக்கை 24 ஆக உயர்வு



மும்பையில் 5 மாடி குடியிருப்பு கட்டட விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளது.

மும்பையில் பெய்து வரும் பலத்த மழைக்கு தெற்கு மும்பையின் சவுகத் அலி ரோட்டில் பான்டிபஜாரில் உள்ள 117 ஆண்டுகள் பழைமையான 5 மாடி குடியிருப்பு ஒன்று நேற்று முன்தினம் காலை திடீரென இடிந்து விழுந்தது. இதில் சிக்கி பலர் பலியாகினர்.

தகவலறிந்து மீட்பு படையினர் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்று இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில், அடுக்குமாடி குடியிருப்பு விபத்தில் சிக்கி 19 ஆண்கள், ஐந்து பெண்கள் உட்பட 24 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளனர். காயம் அடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தொடர்ந்து அப்பகுதியில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 39 பேர் இடிபாடுகளில் இருந்து உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, மராட்டிய மாநில முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ், விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு ரூ.5 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும் என அறிவித்துள்ளார். (8)




ICBT HND IN BUSINESS MANAGEMENT

Finance/ Marketing/ Human Resource Management

TVEC REGISTERED

Duration
- Full Time: 18 Months (Mon-Fri)
- Part Time: 2 Years (Sat & Sun Evening)

Part Time Entry qualifications: GCE A/L + Work Experience

Cardiff Metropolitan University

BSc (Hons) BUSINESS MANAGEMENT

Offered by Cardiff Metropolitan University, UK

Duration
- 1 year

UGC

Entry Qualifications
- Higher National Diploma in Business Management or any other accepted programs.

Why Study ICBT?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

© 0770 746 553 | © 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector

www.icbt.lk






HND IN CIVIL ENGINEERING

Entry Qualifications
- G.C.E. A/L or G.C.E. O/L + Engineering Foundation

Duration
- 2 Years

TVEC REGISTERED

A/L's → HND → BSc → MSc  DEGREE COMPLETION IN SRI LANKA

LIVERPOOL JOHN MOORES UNIVERSITY

BSc (Hons) CIVIL & STRUCTURAL ENGINEERING

UGC

ice

Entry Qualifications
- Higher National Diploma in Quantity Surveying or any other accepted programs.

Why Study ICBT?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

© 0770 746 553 | © 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector


(அ. 9486)





ICBT DUAL HNDs Software Engineering + Computing

Duration 2 Years

Cardiff Metropolitan University

BSc (Hons) SOFTWARE ENGINEERING

UGC

Offered by Cardiff Metropolitan University, UK

Duration 1 year

Entry Qualifications
Higher National Diploma in Computing/ IT/ Networking/ Systems Development or any other accepted programs.

Why Study ICBT?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

A/L | O/L → HND → BSc  DEGREE COMPLETION IN SRI LANKA

© 0770 746 553 | © 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector

www.icbt.lk






ICBT HND QUANTITY SURVEYING

TVEC REGISTERED

» Entry Qualifications
- G.C.E. A/L or Equivalent
- Certificate in related field

» Duration: 2 Years

Why Study ICBT?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

BIRMINGHAM CITY University

Accredited by RICS

BSc (Hons) Quantity Surveying

UGC

» Entry Qualifications
- HND or Equivalent Qualifications Acceptable to the University
- Progression Routes for NDT, NDES(Civil), C&G (Civil), NC7(Civil / QS)

» Duration: 1 Year

Week End Part Time Classes

© 0770 746 553 | © 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector

# அம்பாந்தோட்டையில் இயற்கை எரிவாயு

## மின்திட்டம் குறித்து சீனாவுடன் இலங்கை பேச்சு



அம்பாந்தோட்டையில், இயற்கை எரிவாயு மின் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பாக, சீனாவுடன் பேச்சுக்களை நடத்தி வருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர், "இந்தியா மற்றும் ஜப்பானுடன் இணைந்து இரண்டு இயற்கை எரிவாயு மின் திட்டங்களை ஆரம்பிக்க ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மூன்றாவது எரிவாயு மின் திட்டம் சீனாவின் மூலம் அமைக்கப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அதற்கான பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. நான்காவது எரிவாயு மின் திட்டத்துக்கு கேள்விப்பத்திரம் கோரப்படும்.

இவை அனைத்தும் வெற்றிகரமாக அமைந்தால், எம்மால் நான்கு எரிவாயு மின் திட்டங்களையும் ஒரே சமயத்தில், திறக்க முடியும்" என்றும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சர்வதேச நீதிமன்றில் போர்க்குற்றவாளியை நிறுத்த வேண்டும்

## பிரிட்டன் எம்.பி வலியுறுத்து



பிரேசிலை விட்டுத் தப்பிச் சென்ற இலங்கை தூதுவரான, ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவுக்கு எதிரான வழக்கை, ஹேக்கில் உள்ள அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று பிரித்தானிய நாடாளுமன்றத்தின் தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவரான, போல் ஸ்கலி தெரிவித்துள்ளார்.

'இராஜதந்திர விலக்குரிமைக்குப் பின்னால் மறைந்திருப்பதோ, சட்ட சவாலை எதிர்கொள்வதற்கு, முன்னர் தப்பியோடுவதோ, போதுமானதல்ல.

ஜெனரல் ஜெயசூரியவைக் கைது செய்வதற்கான அனைத்துலக இன்டபோல் பொலிஸாரின் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட வேண்டும்.

ஹேக்கில் உள்ள அனைத்துலக நீதிமன்றத்துக்கு இந்த வழக்கை கொண்டு செல்ல வேண்டும்.

இரண்டு தரப்புகளுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய, திறந்த வெளிப்படையான நீதி செயல்முறைகளை இலங்கை அரசாங்கம் உருவாக்க வேண்டும்.

இறந்து போனவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு சரியான பதிலும், நீதியும் கிடைக்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# பலகையில் துப்பாக்கி தயாரித்தவர் கைது

(கொழும்பு)

பாவனைக்கு உதவாத துப்பாக்கியின் பாகங்களைக் கொண்டு, மரப்பலகைகளைப் பயன்படுத்தி, துப்பாக்கியொன்றைத் தயாரிப்பதற்கு முயன்ற ஒருவரை, சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை, சம்மாந்துறை உடங்கா-2 பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயது மதிக்கத்தக்க ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என, சம்மாந்துறைப் பொலிஸ் பெருங் குற்றப்பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அந்தவகையில், பாழடைந்த வீட்டிலிருந்து, மூன்று கிழமைக்கு முன்னர் கண்டெடுக்கப்பட்ட பையிலிருந்த, பாவனைக்குதவாத துப்பாக்கிப் பாகங்களை வைத்தே, இவர் துப்பாக்கியொன்றை செய்வதற்கு முயன்றுள்ளார் என்று அறியமுடிகிறது.

30ஆம் திகதி இரவு, கைது செய்யப்பட்ட சந்தேகநபரை, சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தில், ஆஜர்படுத்தவுள்ளதாகத் தெரிவித்த சம்மாதுறை பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (இ-7)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடச் செய்ய முடியாது

## பைசர் முஸ்தபா நம்பிக்கை



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவடையச் செய்ய முடியாது என உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

கட்சியை பிளவடையச் செய்ய நினைப்பது வெறும் கனவு மட்டுமேயாகும் என குறிப்பிட்டுள்ள அவர் கட்சியை பிளவடையச் செய்ய நினைத்தவர்கள் மற்றும் முயற்சித்தவர்கள் இன்று போலவே கடந்த காலங்களிலும் இருந்தார்கள் என சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறு முயற்சித்த பலர் மீளவும் கட்சியின் உதவியை நாட நேரிட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார். கட்சியை பிளவடையச் செய்ய முயற்சிப்போருக்கு இறுதியில் கட்சியின் முன்வரிசை ஆசனங்கள் கிடைக்காமல் போகும் என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## ஓய்வெடுக்க உரிமை இல்லாதவர்கள்!

பதிலிட வேண்டிய கடிதங்கள் மேசையில் கத்தை கத்தையாக இருக்க, ஒருவர் தொலைக்காட்சியில் திரைப்படம் போட்டுப் பார்த்துக் கொண்டிருப்பார்.

வீடெல்லாம் குப்பையும் எடுத்து வைக்க வேண்டிய பொருட்களுமாகக் கிடக்க, ஒரு பெண்மணி தன் பக்கத்து வீட்டுக்காரியுடன் அரட்டை அடித்துக் கொண்டிருப்பார்.

ஆக வேண்டிய காரியங்கள் சேர்ந்து கொண்டே இருக்க சிலர் வெட்டிப் பொழுது போக்கிக் கொண்டிருப்பார்கள்.

இவர்களை விளக்கம் கேட்டால், எங்கே நேரமிருக்கு எனக்கு என்று வெறுப்பின் விளிம்பில் நின்று கொண்டு பேசுவார்கள்.

பரீட்சை நடக்கும் நேரத்தில் எந்தப் பள்ளியிலாவது சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வார்களா?

ஆனால் இத்தவறைத்தான் வாழ்க்கையில் பலர் செய்து கொண்டிருக்கிறார்கள்.

மலைமலையாய்ப் பணிகளைத் தக்க வைத்துக்கொண்டு, செம்மையாக ஒரு நாளைக்குப் பத்து மணி நேரம் வீதம் தூங்கிக் கொண்டிருப்பார்கள்.

கடமைகள் கதவைத் தட்டும் போது, அச்சத்தத்தை மீறி எப்படி இவர்களால் தூங்க முடிகிறது?

கேட்டால் ஒரே அசதியாக உள்ளது. அடித்துப் போட்ட மாதிரி இருக்கிறது என்றெல்லாம் காரணங்களை அடுக்குவார்கள்.

நல்ல வேடிக்கை! சரிவர உழைக்காதவர்களுக்குக் களைப்பு எங்ஙனம் வந்தது. இது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதே தவிர வேறல்ல. உடலும் மனமும் போராட வேண் டும். இப் போராட்டம் நியாயத்தின் அடிப்படையில் அமைய வேண்டும். உடல் ஏகப்பட்ட சௌகரியங்களை எதிர்பார்க்கும். மனமோ வளர்ச்சியை நாடும். இப் போராட்டத்தில் உடலை வெற்றி பெற விடக் கூடாது. மனம் கொஞ்சம் இடம் கொடுத்தால் கூட போதும், உடல் வெற்றி பெற்று விடும்.

உடல் நலனைக் கெடுத்துக் கொள்ளும் உழைப்பும் நம் வளர்ச்சிகளை குலைக்கும் ஓய்வும் நமக்கு ஒருபோதும் நல்லதல்ல.

மிதமிஞ்சிய தூக்கமும் எல்லை கடந்த ஓய்வும் ஒரு மனிதனை மேலும் மேலும் சோம்பேறியாக ஆக்குகின்றனவே தவிர சுறுசுறுப்பையும் புதுத்தெம்பையும் தந்ததாக வரலாறே கிடையாது. ஓய்வு என்பது சக்தியிழந்து உடல் பற்றரியை சார்ஜ் செய்து கொள்ளக்கிடைக்கும் அவகாசம்.

ஆக, ஓர் எல்லைக்கு மேல்செய்யப்படும் சார்ஜ் என்பது வீணாகத்தான் போகிறது. ஓய்வு எடுக்க விரும்புபவர்கள் இனி இந்த புதிய கண்ணோட்டத்தில் சிந்திக்க ஆரம்பித் தால் நல்ல பலன் கள் தெரியும். வளர்ச்சிகளும் நம்மைதேடி ஓடி வரும்.

**லேனா தமிழ்வாணன்**

# தேங்காய்களில் ஏற்படும் 'மைற்' தாக்கத்தை கட்டுப்படுத்த மண்புழு கொம்போஸ்ட் உரப்பாவனை உதவும்

**மண்ணிற்கு இடக்கூடிய சேதனப்பசளை-பண்ணைப்பசளை**

மாடு, ஆடு, கோழி, பன்றி போன்றவற்றின் மலசலக்கழிவுகளை நன்கு உக்க வைத்து மண்ணிற்கு போடுவதாகும்.

**பசுந்தாட்பசளை**

பசிய இலைகுழைகளை மண்ணில் இட்டு பயிர் செய்வதாகும்

◆ பசுந்தாள் உரங்களைப் பயன்படுத்துவதால் மண் அமைப்பு மேம்படும்.

◆ மண்ணில் நீர்ப்பிடிப்பை அதிகரிக்கும், இம் மண் அரிப்பினால் ஏற்படும் இழப்பைக் குறைக்கும்.

◆ பசுந்தாள் உரங்கள் ஏக்கருக்கு 25 முதல் 45 கிலோ வரை தழைச்சத்தை (நைதரசனை) மண்ணுக்கு அளிக்கிறது.

◆ சணலில் 2.3 சதவீதம் தழைச்சத்து(நைதரசன்) 0.50 சதவீதம், மணிச்சத்து (பொசுபேற்) 1.8 சதவீதம், சாம்பல் சத்து ( பொட்டாசு) கிடைக்கிறது.

◆ தக்கைப் பூண்டில் 3.5 தழைச்சத்து, 0.60 சதவீதம் மணிச்சத்து, 1.20 சதவீதம் சாம்பல் சத்து கிடைக்கிறது.

◆ அகத்தியில் 2.71 சதவீதம் தழைச்சத்து, 0.53 சதவீதம் மணிச்சத்து, 2.21 சதவீதம் சாம்பல் சத்து கிடைக்கிறது.

◆ இதை இரு வழிகளில் பெறலாம். பசுந்தாள் பயிர்களை வளர்த்தும், இயற்கையான காடுகளில், வயல் வரம்புகளில், தரிசு நிலங்களில் கிடைக்கும் செடிகள் மூலமாவும் பெறலாம்.

◆ வளர்க்கப்படும் முக்கியமான பசுந்தாள் உரப் பயிர்களான சணல், தக்கைப்பூண்டு, கொளுஞ்சி, பில்லியாறு, கொத்தவரை, சீமை, அகத்தி ஆகியவை.

◆ பசுந்தாள் உரங்கள் மண்ணில் கனிமப் பொருட்களின் அளவை அதிகரிக்கிறது.

◆ மண்ணில் நுண்ணுயிர்கள் பெருகி, அவற்றின் செயற்திறன் ஊக்குவிக்கப்படுகிறது.

◆ பசுந்தாள் உரங்கள் மக்கும் போது உருவாகும் அங்கக அமிலங்கள் நிலத்தில் உள்ள பொஸ்பேட்டுகளை விடுவித்து, பயிருக்குப் பயன்படும் நிலமாக மாற்றி விடுகிறது.

◆ சணல் (குரோட்டலேரியா ஜன்சியா) எல்லா வகை மண்ணுக்கும் ஏற்றது. ஏக்கருக்கு 10 முதல் 15 கிலோ விதை தேவைப்படும். தண்ணீர் அதிகம் தேவைப்படாது. தண்ணீர் பாய்ச்சும் போது செழிப்பாக வளரும். விதைத்த 25 முதல் 45 ஆவது நாளில் பூக்க ஆரம்பித்ததும், வயலில் மடக்கி உழ வேண்டும். ஏக்கருக்கு 3 முதல் 5 தொன் வரை பசுந்தாள் உரம் கிடைக்கும்.

◆ பசுந்தாள் உர விதைகளை நிலத்தை நன்றாக புழுதியாக்கி பின்னர் விதைக்க வேண்டும். அல்லது 3 முறை தண்ணீர் பாய்ச்சினால் நன்றாக செழித்து வளரும். வளர்ச்சி மற்றும் தழைச்சத்து நிலைகையாக உக்குவதற்கு அதிக காலமாவதுடன் தரம் குறைந்த கொம்போஸ்ட்தான் கிடைக்கிறது. 'யுடிரிலஸ்' வகை மண்புழுக்கள் காய்ந்த தென்னோலைகளை வேகமாக உக்கச் செய்வதுடன் தரம் வாய்ந்த கொம்போஸ்ட் உரத்தினை உருவாக்கும் திறன் பெற்றது. நன்கு பராமரிக்கப்பட்ட ஒரு

*உலகளாவிய ரீதியில் செப்டெம்பர் 2 ஆம் திகதி உலக தென்னை தினம் கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தினை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.*

*இக்கட்டுரையானது இந்தியாவின் கேரள, கர்நாடக மாநிலங்களிலுள்ள தென்னந் தோட்டங்களுக்கு மண்புழு கொம்போஸ்ட் உரம் பாவிப்பதனால் தேங்காய்களில் ஏற்படும் ''மைற்' தாக்கத்தினை கட்டுப்படுத்த முடியும் என்பதனை ஆராய்ச்சி மூலம் நிரூபித்துள்ளனர் என்பதனை வலியுறுத்துகின்றது.*



ப்படுத்தும் தன்மை டிஎஸ். ஆர் - 1 ரகத்தில் மற்ற ரகங்களை விட அதிகமாக இருக்கும் என்று வேளாண்துறை தெரிவிக்கின்றது.

**பசுந்தாட்பசளை:-**

பசிய இலைகுழைகளை மண்ணில் இட்டு பயிர் செய்வதாகும்.

**தென்னோலைகளிலிருந்து மண்புழு கொம்போஸ்ட் (கூட்டுரம்)**

இயற்கைச் சூழலைப் பாதிக்காமல் தொடர்ச்சியாக சீரான விளைச்சலைப் பெற இயற்கை உரங்களை இடுவது மிக முக்கியமானதாகும். தொடர்ந்து இரசாயன உரங்கள் இடுவதனால் மண்ணின் தன்மை பாதிக்கப்படுவதுடன் மட்டுமல்லாது பயிர் உற்பத்தித்திறன் குறைவடையும். மண்ணிலுள்ள மண் புழுக்கள் இறப்படையும்.

நன்கு பராமரிக்கப்பட்ட தென்னந் தோட்டத்தில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஹெக்டேயருக்கு 6-8 தொன்கள் வரை காய்ந்த ஓலைகளை உக்கச் செய்வதன் மூலம் வளம் பொருந்திய இயற்கை உரத்தினைப் பெற முடியும். தென்னோலைகளில் லிக்னின், செலுலோஸ் போன்ற இரசாயனப் பொருட்கள் அதிக அளவில் உள்ளதால் ஓலைகள் இயற்ஹெக்டேயர் தென்னந் தோட்டத்திலிருந்து கிடைக்கும் காய்ந்த தென்னோலைகளிலிருந்து 4 தொன் மண்புழு கொம்போஸ்ட் உரம் தயாரிக்கலாம்.

**மண்புழு கொம்போஸ்ட் உரம்**

தென்னோலை மற்றும் கழிவுப் பொருட்கள் மண்புழுவினால் உண்டு. சமிக்கப்பட்டு மற்றும் பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டு வெளியே தள்ளப்படுகின்றது. இந்த மக்கிய கழிவுப் பொருட்களே மண்புழு கொம்போஸ்ட் உரம் என அழைக்கப்படுகின்றது.

**யுடிரிலஸ் மண்புழுவினை விருத்தி செய்தல் முறை**

மாட்டுச்சாணம் மற்றும் உக்கிய இலைகளை 1:1 என்ற விகிதத்தில் கலந்து கலவையை சீமெந்துத் தொட்டி அல்லது மரப்பெட்டி அல்லது பிளாஸ்ரிக் தொட்டியிலோ இட வேண்டும். தேவையான வடிகான் வசதியினையும் செய்ய வேண்டும். 50 யுடிரிலஸ் மண்புழுக்கள், பத்து கிலோ கழிவுப் பொருட்களுக்குள் விட வேண்டும். இந்த கலவையினை காய்ந்த இலை அல்லது வைக்கோலினால் அல்லது ஈரச் சாக்கினால் மூடிவிட வேண்டும். இது ஈரப்பதனைக் காக்க உதவுகின்றது. மழை, வெயிலிலிருந்து பாதுகாக்க பந்தல் அமைக்கலாம். 30-40 வரை ஈரப்பதனை வைத்திருக்க வேண்டும். தேவைக்கேற்றவாறு தண்ணீர் தெளிக்கலாம். 1-2 மாதங்களுக்குள் யுடிரிலஸ் மண்புழுக்களின் எண்ணிக்கை முப்பது மடங்காக அதிகரிக்கும். இப் புழுக்களை கொண்டு மண்புழு கொம்போஸ்ட் உரத்தினை தயாரிக்கலாம் .

**மண்புழு கொம்போஸ்ட் உரத்தினை தயாரிக்கும் முறை**

இந்த உரத்தினை நான்கு தென்னை மரங்களுக்கு மத்தியில் குழிகள் வெட்டியோ அல்லது தென்னை மரத்தின் வேர்ப்பகுதிகளில் குழிகள் எடுத்தோ (2மீற்றர் நீளம், 20 சென்ரி மீற்றர் ஆழம்) (சாதாரணமாக உரமிடும் பகுதி அல்லது சீமெந்து தொட்டிகளிலோ தயாரிக்கலாம். ஆழம் 1 மீற்றருக்குள் இருக்க வேண்டும். முதிர்ந்த, காய்ந்த தென்னோலைகளை சேகரித்து 3 முதல் 6 மாதங்கள் வைக்க வேண்டும். முழு ஓலைகளாகவோ அல்லது துண்டுகளாக்கியோ பயன்படுத்தலாம். துண்டுகளாக்கினால் விரைவில் உக்கும். ஆரம்பத்தில் காய்ந்த தென்னோலைகளை உண்ண மண்புழுக்கள் தயக்கம் காட்டுகின்றன. எனவே 1 தொன் ஓலைக்கு 100 kg மாட்டுச் சாணம் என்ற விகிதத்தில் தண்ணீரில் கரைத்து ஓலைகளின் மீது தெளிக்க வேண்டும். ஓலைகளை 5 அடுக்குகளாகவோ அல்லது முழுவதனையும் இட்டு சாணத்தி னைத் தெளிக்கலாம். உக்கல் நிகழ்வு விரைவாக நடைபெறும்.

மூன்று வாரங்கள் கழிந்த பின்பு 1000 மண்புழுக்களை (1 தொன் ஓலைக்கு) விட வேண்டும். இதன் மேற்பரப்பினை காய்ந்த புல், வைக்கோல் அல்லது தென்னோலைகளால் மூடி விடலாம்.


**கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்கள்**

◆ சூரிய ஒளியின் நேரடித் தாக்கத்திலிருந்து பாதுகாக்க வேண்டும்.

◆ ஈரப்பதன் 30-40 சதவீதம் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்

◆ பறவைகள், எலிகள், பெருச்சாளிகள், எறும்புகள் தொல்லையிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

◆ 2-3 மாதங்களுக்குள் 70 சதவீதம் தென்னோலைகள் உக்கி கொம்போஸ்ட் உரமாகி விடும். இத்தருணத்தில் தண்ணீர் தெளிப்பதனை நிறுத்திவிட வேண்டும். இதனால் மண்புழுக்களானது கீழ்ப்பகுதியினை நோக்கி குவியத் தொடங்கும். பின்பு கம்போஸ்ட்டிலிருந்து மண்புழுக்களை தனியே பிரித்தெடுக்க வேண்டும்.



**ஜெ.சத்தியேந்திரன்,**
சிரேஷ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்
தென்னைப் பயிர்ச் செய்கை சபை,
கமநலசேவை நிலையம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

◆ தோட்டத்தில் நெருப்பு வைக்கும் செயற்பாடு செய்யக் கூடாது.

**மண்புழு கொம்போஸ்ட் உரத்தின் பயன்கள்**

1. இதில் உள்ள ஊட்டச் சத்துக்கள் பயிர்களினால் எளிதில் உறிஞ்சப்படும் நிலையில் உள்ளது.

2. நைதரசன் 1.2-1.8%, பொசுபரசு 0.1-0.2%, பொட்டாசியம் 0.2-0.4% என்ற அளவில் உள்ளது. மற்றும் நுண் ஊட்டச்சத்துக்களும் அடங்கியுள்ளன.

3. மண்புழு கொம்போஸ்ட் உரத்தின் எடை குறைந்த அளவில் உள்ளதால் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்வது எளிது.

4. பயிர்களின் வளர்ச்சியை, வேர் வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடிய ஊக்கிகள் உள்ளன.

5. பயிர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய நுண்ணுயிரிகள் அதிகளவில் உள்ளன.

6. மணமற்றதாக உள்ளதனால் கையாளுவது எளிதாக இருக்கும்.

7. மண்ணின் இடைவெளிகள் தண்ணீர் தேக்குதலை மேம்படுத்துகின்றது.

8. மண்ணின் வளத்தினை (இரசாயனத்தன்மை) அதிகரிப்பதற்கு காரணமாக உள்ளது.

9. மண்புழுக்களின் செயற்பாடு காரணமாக தாவரங்களின் வளர்ச்சிக்கு அவசியமான கல்சியம் துணிக்கைகளை மண்ணிற்கு போசணையாக சேர்க்கின்றது.

10. தாவரங்கள் மற்றும் மிருகங்களின் உடற்பகுதிகளை உக்கச் செய்வதன் மூலம் மண்ணிற்கு போசணையினை அளிக்கின்றது.

11. மண்ணின் உயிரினவியல் குணம் அதிகரிக்கச் செய்தல்.

12. தாவர வளர்ச்சிக்கு இடையூறு செய்யும் பங்கசுக்களின் செயற்பாடுகளை மட்டுப்படுத்தும்.

இத்தகைய தொழில்நுட்பத்தினை பாவித்து தென்னைச் செய்கையில் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய மண்புழு கொம்போஸ்ட் உரம் தேவையற்ற செலவீனங்களைக் குறைக்கும்.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—127


## கவனிக்கத் தவறிய மூலிகைகளின் இருப்பிடம் வடமாகாணம்




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள், எம்மினிய உறவுகளே!

"என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட் டில்" என்பது இன்றைய கட்டுரைக்கு மிகவும் பொருத்தமாகவே இருக்கின்றது. வாருங்கள் அந்த அதிசயத்தையும் அறியுங்கள். செல்வத்தைத் தேடித்தேடி நாம் அலைந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் அதுவோ நாம் வாழும்வடமாகாணத்தில்அருமை பெருமையாகக் கிடைப்பதை அறிந்தால் இங்கு பல தொழிற்றுறைகளும் மூலிகை சார்ந்த உற்பத்திகளும் பெருக ஆரம்பித்துவிடும். எம்மிடம் இருக்கின்ற வளத்தை சரியாக இனங்காணாமல் எங்கோ எதற்கோ நாம் அலைந்துகொண்டிருக்கின்றோம் எனத் தோன்றுகின்றது. விரலுக்கேற்ற வீக்கம் என்பதைப் போல இருப்பதை வைத்துக்கொண்டு வாழ்வதற்கான வழிவகைகளையும் இன்னும் இடர்பட்டு அல்லலுறும் மக்களுக்கான வாழ்வாதார முன்முயற்சிகளுக்கான வழிவகைகளை கண்டுபிடித்து அவர்களுக்கு வழிகாட்டுவதும் அவர்களுக்கானதேவையான ஆலோசனைகளை வழங்குவதும்





அவசியமானதாகும். எமது மக்களுக்கான வழிவகைகளை நாம்செய்து கொடுக்க வில்லை யாயின் யார் கொடுப்பார்? இதை எமது உறவுகள்எப்போது புரிந்து கொள்ளப் போகின்றனர். ஆலோசனை வழங்குவது சுலபமெனவும் அதைக்கூட எம்மில் பலர் செய்ய பின்னிற்பதுஎம்மைக்கேள்விக்குறியாக்கியிருக்கின்றது.

அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு வருகைதந்த சிங்கப்பூரின் வெளியுறவு அமைச்சர் தெரிவித்த கருத்துக்கள் எமக்கான பாடமாகும். வடமாகாண நிர்வாக கட்டமைப்பினை வினைத்திறனுள்ளதாக மாற்ற எண்ணி வடமாகாண முதலமைச்சரினால் சிங்கப்பூர் அரசின் உதவியுடனான பயிற்சிகளை வழங்குவதற்கான கோரிக்கையை வெளியுறவு அமைச்சரவர்களுக்கு முன்வைத்தபோது அவர் தெரிவித்தவை எமக்கான பாடமாகவும் நாம் மீண்டும் எம்மைப் பற்றி சிந்திக்கவும் தூண்டியிருக்கின்றது. அவர் தெரிவித்ததாவது, சிங்கப்பூர் ஒரு காலத்தில் இலங்கையைப் போல வர வேண்டும் என எண்ணி தமது நடவடிக்கைகளையும் திட்டமிடல்களையும் ஒழுங்கமைத்தார்களாம். அங்கே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் பலர் பணிகளில் அமர்த்தப்பட்டு சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு உழைத்திருக்கின்றார்கள் என்னும் போது நாம் பெருமைப்பட்டுக்கொள்ளவே வேண்டும்.

இவ்வாறு சிறந்த திட்டமிடலாளர்களையும் நிர்வாகத் திறனுடையவர்களையும் குறிப்பாக உழைத்த, உழைக்கின்ற மக்கள் உள்ள எமது பிரதேசத்திற்கு சிங்கப்பூர் நாட்டிலிருந்து வளவாளர்கள் தேவையில்லை என்பதும் எம்மவர்களைக் கொண்டே நாம் எமது நிர்வாக இயந்திரத்தை வளமாக்கிக் கொள்ளலாம். எம்மவர்கள் வெளிநாடுகளில் செய்யும் தொழில்களையும் திறன்களையும் உற்றுநோக்கினால் அந்தளவு உழைப்பையும் நாம் எமது பிரதேசத்திலும் உள்ளார்ந்தால் எமது நாட்டையும் வளமுள்ள அபிவிருத்தியில் முன்னிற்கும் தேசமாக உயர்த்திடலாம்.

இவ்வளவுக்கும் மேலாக எமது பிரதேசத்தில் உள்ள வளங்களை நாம் சரியாக கண்டுபிடிக்கவில்லை என்பது மனதுக்கு சங்கடமான செய்தியாக உள்ளது. என்ன வளம் இங்கில்லை? என்பதற்கு முதல் என்ன வளம் எம்மிடம் இருக்கின்றது என்பதை நாம்தெரிந்து கொண்டால் அதனை வைத்துக்கொண்டு நாம் எதனை முதலில் செய்யலாம் என்பதற்கு நாம் துணியலாம். எம்மிடமுள்ள வளங்கள் பலவற்றை நாம் தற்போதும் இனங்காண முனைந்திருக்கின்றோம்.

பயன்பாட்டிலில்லாத தாவரங்களுள் முக்கியமானவை மூலிகை வகைகள். இலங்கை இயற்கையால் வரமளிக்கப்பட்ட தீவாகும். இங்கிருக்கும் மூலிகை வளங்களை நாம் முழுமையாக இனங்கண்டால் அவற்றை நாம் எமது பாவனைக்கும் தொழிற்றுறையாக மாற்றுவதற்கும் வழியுண்டு. அவற்றிலொன்று தான் பற்படாகம் என்னும் மூலிகையாகும். பற்படாகம் தென்பகுதியில் கப்புக்கொட என்னுமிடத்திலுள்ள லிங்க் நச்சுரல் பிறைவேற் லிமிற்றட் (Link Natural Pvt. Ltd) இனால் தங்களது மூலிகை சார்ந்த உற்பத்திகளுக்கு பயன்படுத்துகின்றார்கள். தற்போது தமக்குத் தேவையான பற்படாகம் (*Mollugo cerviana*) என்னும் மூலிகையை இந்தியாவிலிருந்தே தருவிக்கின்றார்கள். ஒரு வேளை இந்தியாவிலிருந்து தருவிக்கும் இம்மூலிகையை பெறுவதில் இடர்பாடுகள் ஏற்பட்டால் அதற்குப் பதிலாக அதனை எம் நாட்டில் உற்பத்திசெய்ய முடிந்தால் அந்த பிரச்சினைக்கு தீர்வினைக் காணலாம். இதற்கான கோரிக்கை இந்நிறுவனத்தால் முன்வைக்கப்பட்ட போது அதற்கான வழிவகைகளை நாம்தேடிக் கண்டுபிடித்தல் அவசியமாகின்றது.

பற்படாகம் என்னும் மூலிகையைப் பற்றிய விளக்கங்களை அறிய முனைந்தபோது அதுபற்றிய விளக்கங்கள் தெளிவாக இல்லாதிருந்ததனை அறிய முடிந்தது. எனவே பற்படாகம் பற்றி மேலதிகமாக அறிவதற்கான ஆய்வினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தில் விவசாய உயிரியல் துறையின் சிறப்பு மாணவியான பாலச்சந்திரன் தேனுவதனி மேற்கொண்டு பற்படாகம் பற்றிய பலவிடயங்களை கண்டறிந்துள்ளார். சரியான பற்படாகம் என்ன என்பதனை இயக்கச்சி பகுதியில் புதுக்காட்டு சந்தியிலிருந்து கரையோரப் பக்கமாக செல்லும் பாதையில் செல்லும் போது வலப்பக்கமாக செல்லும் பாதையில் சிறுதூரம் சென்றால் பாரம்பரிய வைத்தியர் ஒருவரின் வீட்டினைக் காணலாம். அங்கே அவர் வீட்டில் பற்படாகம் செறிவாக வளர்ந்திருப்பதை அவதானித்தோம். இதுவே உண்மையான பற்படாகம். இருப்பினும் பல சித்த வைத்தியர்களை அவர்கள் பற்படாகம் போன்றிருக்கும் வேறொன்றை பற்படாகமென காண்பித்தார்கள். ஆக மொத்தத்தில் சரியான பற்படாகம் என பலராலும் இனங்காண முடியாதிருப்பதனை அறிய முடிந்தது. ஆனால் எமது பிரதேசத்தில் குறிப்பாக மணற்பாங்கான பகுதிகளில் பற்படாகத்தை வளர்க்க முடியும் என கண்டறியப்பட்டுள்ளது. மேலும் தேனுவதனியினுடைய ஆய்வில் பற்படாகத்தை போன்ற வேறு பல தாவரங்களையும் கண்டறிந்துள்ளார். இவற்றினை பற்படாகத்திற்குப் பதிலாக பயன்படுத்தக்கூடும் என்பதாலும் தகுந்த விளக்கமின்றி பற்படாகத்தை வளர்க்கவோ சேகரிக்கவோ முயலலாம் என்பதற்காக உண்மையான பற்படாகம் பற்றிய விளக்கத்தை மக்களுக்கு வழங்கவேண்டியது அவசியமாகின்றது.

பற்படாகத்தைப் பற்றி அறிய முற்பட்டபோது அதனை உற்பத்தி செய்வது பற்றியும், விதையினூடான உற்பத்தியினை ஊக்குவிப்பதற்கான வழிவகைகளைப் பற்றியும் ஆராயப்பட்டது. அதனுடன் பற்படாகம் வளர்ந்திருக்கும் இடங்களை வரைபடமாக்கும் முயற்சியும் எடுக்கப்பட்டுள்ளது. பல இடங்கள் இன்னும் கண்டறியப்பட வேண்டியிருக்கின்றது. ஆனால் இவ்வாறான மூலிகைகளை உற்பத்தி செய்து குறிப்பிட்ட கம்பனிக்கு வழங்கினால் அந்த உற்பத்தியாளர்களுக்கு வருமானந் தரும் தொழிலாக மாற்றிக் கொள்ளலாம். இது ஒரு வகை மூலிகையைப் பற்றிய கதை என்றாலும் இவ்வாறாக பல மூலிகைகளை நாம் சேகரித்து அதனை தகுந்த முறையில் பதப்படுத்தி வெளிநாட்டுச் சந்தைக்கும் அனுப்ப முடியும். இங்குள்ள மக்களுக்கு எளிய வழியிலும் அதிகமானதுமான வருமானத்தை ஈட்டித்தரும். தொழிற்றுறையாக இதனை வளர்த்தெடுக்க முடியும். இம்மண்ணில் வீளையும் இத்தகைய மூலிகைத் தாவரங்களை சேதன முறையில் உற்பத்தி செய்து அவற்றை தரமானதாக பதப்படுத்தி தகுந்த பொதிசெய்தல் மூலமாக வெளிநாடுகளுக்கு அனுப்பினால் நிறையவே பண மீட்டலாம். இவ்வாறான தொழிற்றுறை எமது மக்களுக்கான நிறைந்த வருமானந்தரும் தொழிலாக மாறும்.

பற்படாகத்தில் பல நல்ல விடயங்கள் பொதிந்திருக்கின்றன. இதனை மேலும் ஆய்வுக்குட்படுத்தினால் அதனுள் பொதிந்திருக்கும் இரசாயன மூலக்கூறுகளைப் பற்றி அறிந்து கொள்வதுடன் அதன் சித்த வைத்தியம் அல்லது பாரம்பரிய வைத்தியம் தவிர்ந்த பயன்பாடுகளையும் நாம் அறிந்து கொள்ளலாம். இவ்வாறான விடயங்களை பயன்படுத்தி புதிய உணவுகள் தயாரிப்பதற்கும் இவற்றை பயன்படுத்த முடியும்.

ஒரு கூட்டு இயக்கமாக இவ்வாறான மூலிகைகளை வளர்ப்பதும், பாதுகாப்பதிலும் இன்னும் அவற்றினை வினைத்திறனாக பயன்படுத்துவதிலும் முயற்சி எடுக்கலாம். பிரதேசத்தின் அபிவிருத்தி பற்றி அதில் ஈடுபடும் சங்கங்கள், கழகங்கள் இன்னும் அமைப்புக்கள் மூலிகைகளை சேகரித்து அவற்றை சந்தைப்படுத்துவதில் முயற்சிகாட்டலாம். உலக சந்தையை மையப்படுத்தினால் எமது உற்பத்திகளையும் இன்னும் மதிப்பேற்றஞ் செய்த உற்பத்திகளையும் நாம் விற்பனைக்கு விடலாம்.

மூலிகைத்தாவரங்களை சரியாக இனங் காண முடியுமாயின் அவற்றின் மூலம் குடும்பங்கள் வருமானம் பெறுவதற்கான வழிவகைகளையும் நாம் ஏற்படுத்திக்கொடுக்கலாம்.


## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 143

# புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுவோம்

புனித ஹஜ் கடமையானது இஸ்லாத்தில் ஐந்தாவது கடமையாகும். வசதி படைத்த செல்வந்தர்களுக்கு மட்டுமே கடமையாக்கப்பட்டுள்ளது. வசதி படைத்த செல்வந்தர்கள் அனைவரும் கண்டிப்பாக புனித ஹஜ்ஜை நிறைவேற்றியாக வேண்டும். சக்தியிருந்தும் புனித ஹஜ்ஜை நிறைவேற்றாமலிருப்பது பெரும் குற்றமாகும்.

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றும் போது நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் குடும்பமே நம் மனக்கண்முன் நிழலாடும். இஹ்ராம் கட்டுதல், கஃபாவை வலம் வருதல், ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடல், ஸபா, மர்வா மலைகளுக்கிடையில் ஓடுதல், புனித நிரம்பிய ஸம்ஸம் நீர் அருந்துதல், அரபாவில் தரித்தல், குர்பான் கொடுத்தல், மினாவில்கல்லெறிதல்போன்ற அனைத்து கிரியைகளிலும் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாகம் பிரதிபலிக்கின்றன.

ஹஜ்ஜுக்கான ஒன்றுகூடல், முஸ்லிம் உம்மத்தின் ஐக்கிய உணர்வை பறைசாற்றும் சர்வதேசளவிலான வருடாந்த மாநாடாக கணிக்கப்படுகிறது. தொழுகையில் ஆரம்பிக்கும் முஸ்லிம் உம்மத்தின் ஐக்கியமும் ஒருமைப்பாடும் ஹஜ் ஒன்றுகூடலில் மேலும் வலுப்பெறுகிறது.



நபி (ஸல்) அவர்களின் வருகைக்கு முன் வாழ்ந்த ஜாஹிலிய்யா காலத்து மக்கள் கூட இவ் வழிபாட்டில் ஈடுபட்டு வந்தனர். இணைவைப்போடு மூடநம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் நிறைந்த ஒரு வழிபாடாகவே இது இருந்து வந்தது. இது ஒரு வழிபாடு என்பதை விடவும் அரேபிய தீபகற்ப மக்கள் ஒன்றுகூடும் வியாபார சந்தையாகவே திகழ்ந்தது என்றால் மிகையாகாது.

நபி (ஸல்) அவர்களின் வருகைக்குப்பின் இந்நிலை முற்றாக மாற்றப்பட்டு இணைவைப்பும் மூடநம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் முற்றாக அகற்றப்பட்டு வருடாந்தம் ஒன்றுகூடும் சர்வநேச இஸ்லாமிய சமத்துவமும் சகோதரத்துவமும் உள்ளடக்கிய மாநாடாக அமையப்பெற்றது.


அல்லாஹ்வின் கட்டளையை இதயத்தில் இறுக்கமாய் கொண்டு, எத்தனையோ காலங்களாக "இல்லையே தமக்கொரு பிள்ளை" என ஏங்கித்தவித்து இன்னல் பலகண்டு இறுதியில் அன்புடனும் ஆசையுடனும் பெற்றெடுத்த அருமைமகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அல்லாஹ்விற்காக பலியிடத் துணிந்த இப்ராஹீம் (அலை) அவர்களின் உயர்வான, ஒப்பற்ற மனதையும், ஒருமாபெரும் தத்துவத்தையும் இந்த ஹஜ்ஜுப் பெருநாள் எமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றது.

எமது நாட்டில் உழ்ஹிய்யா சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படாமல் நிம்மதியாகவும் மன சந்தோசத்துடனும் உழ்ஹிய்யா கொடுக்கும் நிலைமை ஏற்பட வேண்டும் என்று அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்.

பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் சிறுபான்மையினராகிய நாம் பிறமத உணர்வுகளுக்கு மதிப்பளித்து புரிந்துணர்வுடன் உழ்ஹிய்யா கொடுப்போம். புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுவோம்.

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால்(ஜே.பி)
யாழ்ப்பாணம்.

## துயரின்றி வாழப் பிரார்த்திப்போம்



இந்த நாட்டில் தற்போது உருவாக்கப்பட்டுள்ள நல்லாட்சியின் மூலம் இன, மத, குல பேதமின்றி மூவின மக்களும் நிம்மதியாக வாழ வழி பிறந்துள்ளது. முஸ்லிம் மக்கள் இத் தினத்தில் நினைத்த நேரம் நினைத்த இடத்திற்கு சென்று வரக் கூடிய அளவுக்கு இந்நாடு இன்று சுதந்திரத் திருநாடாக மாறியுள்ளது. இத்தியாக திருநாளில் சகல இன மக்களும் நிம்மதியாக வாழ்ந்து ஒற்றுமையுடன் பாகுபாடின்றி செயற்பட இறைவனை மீண்டும் ஒருமுறை பிரார்த்திக்கின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-9)

தியாகத்தை நினைவூட்டும் புனித ஹஜ் பெருநாளை கொண்டாடும் அனைத்து முஸ்லிம் மக்களும் துயரங்களின்றி நிம்மதியாக இந் நாட்டில் வாழ பிரார்த்திப்பதாக யாழ்., கிளிநொச்சி உலமா சபை கிளை தலைவர் பி.எஸ். எம் சுபியான் மௌலவி தனது பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## டெங்கு ஒழிப்பில் கடற்படையும்

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இம்முறை இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு தொடர்பான வீடு தரிசிப்பின் போது கடற்படையினரும் ஈடுபட்டிருந்தனர். கடந்த காலங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு சுகாதார பரிசோதகர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பொலிஸார், இராணுவத்தினர் செல்வது வழமை. ஆனால் இம்முறை கடற்படையினரும் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-60)

## எந்த நாட்டோடும் இராணுவக் கூட்டு இல்லை - பிரதமர்

இலங்கை எந்தவொரு நாட்டோடும் இராணுவக் கூட்டை ஏற்படுத்தாது என்றும், வெளிநாடுகள் இங்கு படைத்தளங்களை அமைக்க அனுமதிக்கப்படாதென்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தியப் பெருங்கடல் மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள எமது படைத்தளங்களை வெளிநாடுகள் பயன்படுத்தவும் அனுமதி வழங்கப்படமாட்டாதெனவும் கூறினார்.

ஆயினும் இலங்கை நட்பு நாடுகளுடன் இராணுவ ஒத்துழைப்பை தொடரும் என குறிப்பிட்ட பிரதமர், படைப் பயிற்சி, போர்த்தளங்களை பெறுதல், கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுதல் என்ற வகையில் ஒத்துழைப்பு தொடரும் என தெரிவித்தார்.

அத்துடன் துறைமுகங்களை யுத்த தேவைக்கு பயன்படுத்த எந்த நாட்டுக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

ஆனால் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் சேர்ந்து எமது துறைமுகங்களை வர்த்தக ரீதியில் அபிவிருத்தி செய்வோம் எனவும் தெரிவித்தார். (இ-7)

## இறைவனை பிரார்த்திப்போம்




இன்று (02.09.2017) ஈதுல் அல்ஹா இனிய ஹஜ் பெருநாளை கொண்டாடும் அனைத்து முஸ்லிம் மக்களுக்கும் எனது வாழ்த்தை தெரிவிப்பதோடு எம் அனைவர் வாழ்வும் வளமாக இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

எமது நாட்டில் இனிவரும் காலங்களிலாவது உழ்ஹிய்யா சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படாமல் நிம்மதியாகவும் மனமகிழ்ச்சியோடும் உழ்ஹிய்யாக் கொடுக்கும் நிலைமை ஏற்படவேண்டும் என்று அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்.

மேலும் உழ்ஹிய்யா செவ்வனே சிறப்புற நிறைவேற்றவும் எம் பாவக்கறைகள் கழுவப்பட காரணவுற்ற இவ்வமலை நிறைவேற்றவும் எம் அனைவருக்கும் அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக ஆமீன்.

மௌலவி அல்ஹாஜ்
ஏ.எம்.ஏ.அப்துல் அஸீஸ் (காஸிமி)
யாழ்,கிளிநொச்சி மாவட்ட உலமா சபை சர்வமத தலைவர்.



வடமராட்சி வதிரி முன்பள்ளியை நவீன முறையில் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. முன்பள்ளி ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கரவெட்டிப் பிரதேச சபை செயலாளர் அ.வினோராஜ் அடிக்கல்லை நாட்டி வைத்தார். (இ-60)

# நமது அரசியல் பலம் அதிகரிக்கும் போதுதான் மக்களின் அபிலாஷைகளுக்கும் தீர்வுகாண முடியும்

## டக்ளஸ் எம்.பி.வலியுறுத்து

நாம் அரசியலில் மேலும் அதிகளவு பலப்படுகின்ற போதுதான் தமிழ் மக்களின் வேதனைகளையும் ஆறா வடுக்களையும் மட்டுமல்லாது அவர்களுக்கான தேவைகளையும் இனங்கண்டு தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வட்டார நிர்வாக செயலாளர்கள் மற்றும் உதவியாளர்களுடனான விஷேட ஒன்றுகூடலில் சிறப்புரையாற்றுகையிலேயே டக்ளஸ் தேவானந்தா எம்.பி. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், காலாகாலமாக தமிழ் மக்கள் தமக்கான ஒரு அரசியல் தலைமையை சரியான வகையில் இனங்கண்டுகொள்ளாமையால் இற்றைவரை பல துயரங்களை சுமந்து வாழவேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

தமிழ் மக்களின் தலையெழுத்து மாற்றப்பட வேண்டுமானால் சரியான அரசியல் தலைமைகளை மக்கள் இனங்கண்டு அவர்களை தெரிவு செய்யவேண்டும். அவ்வாறான ஒரு சூழ் நிலையை தமிழ் மக்கள் உருவாக்கும் போதுதான் அவர்கள் தமது அரசியலிலும் வாழ்வியலிலும் மேம்பாடு காண முடியும்.

அதை உணர்ந்துகொண்டு



மக்கள் எதிர்காலங்களில் செயற்படுவார்களேயானால் அவர்களது வாழ்வியலை எம்மால் பல்வேறு வழிகளிலும் மாற்றம் காண செய்ய முடியும் என்பதுடன் அரசியல் தீர்வுக்கான வழிமுறைகளையும் வெற்றிகொள்ள முடியும் என தெரிவித்தார்.

மேலும் குறித்த வட்டார நிர்வாக கட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் நோக்கம் தொடர்பாக கட்சியின் வட்டார நிர்வாக செயலாளர்களுக்கு தெளிவுபடுத்தியிருந்த டக்ளஸ் தேவானந்தா எதிர்காலத்தில் எத்தகைய அரசியல் வழிமுறைகளூடாக மக்களுக்கான தேவைப்பாடுகளை முன்னெடுத்து எடுத்துக்கொண்ட இலக்கின் பெறுபேற்றை அடைய முடியும் என்றும் விரிவாக எடுத்துரைத்தார். (இ-3)

## தென்னங்கன்றுகள் வழங்கல்

நெல்லியடி பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவையின் இறுதி நாள் நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க் கிழமை கரவெட்டியில் நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி ஆர்.பி.ஏ. பிரியந்த தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் மாசிங்க கலந்து கொண்டார். இந்நிகழ்வில் கலந்து கொண்டோருக்கு தென்னங்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. பொலிஸ்மா



அதிபர் பூஜித ஜெயசுந்தரவின் வழிகாட்டலில் பொலிஸ் நடமாடும் சேவை அனைத்துப் பொலிஸ் பிரிவுகளிலும் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (இ

## இரண்டு ஆண்டுகள் பூர்த்தி நிலையில்

# வடக்கு இறைவரித் திணைக்களத்தின் வளர்ச்சிப் போக்கு ஒரு பார்வை



கே.கமலரூபன்
பிரதி ஆணையாளர், மாகாண வருவாய்த்துறை, வடமாகாணம்.

1987 ஆம் ஆண்டின் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கு வரியினை அறவிடும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி 1990 ஆம் ஆண்டிலிருந்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் மாகாண இறைவரித் திணைக்களங்கள் உருவாக்கப்பட்டு வரி வருமானங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இதன்பிரகாரம்வடக்கு மாகாண சபையால் உருவாக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வடமாகாண சபையின் நிதி நியதிச்சட்டத்தின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வடக்கு மாகாண இறைவரித் திணைக்களங்களத்தினது செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

வடக்கு மாகாண இறைவரித் திணைக்களம் கீழ்வரும் நோக்கங்களினை பூர்த்தி செய்யும் முகமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதாவது வடக்கு மாகாணத்திற்குள் வரிகள் மற்றும் விதிப்பனவுகளை உத்தமமான செயலாற்றுகை மூலம் அறவிட்டு சேகரித்தல். அவ்வாறு அறவிடப்பட்ட வரிகளை மாகாண நிதியத்திற்கு வழங்குதல்,அசைவற்ற ஆதனங்கள் மீது அறவிடப்பட்ட முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்றக் குற்றப்பணம் ஆகியவற்றிலிருந்து சேகரிக்கப்படும் அரசிறையை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு வழங்குதல். வரி இணக்கப்பாட்டையும் வரி அறிவூட்டலையும் மேம்படுத்துதல். வரி ஏய்ப்பு மற்றும் வரிதவிர்ப்புக்களைத் தடுத்தல் போன்றவை பிரதான நோக்கங்களாக உள்ளது.

இத் திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட வெவ்வேறு வகையான வரி சேகரிப்புக்களை கீழ்வரும் அட்டவணை காட்டுகின்றது.

மொத்த அர்சிறை சேகரிப்புக்கள் (ரூபாவில்) (2015 ஜூலை- 2017 ஜூலை)

| வரி வகைகள் | 2016(ஜூலை -டிசம்பர்) | 2016(ஜனவரி - டிசம்பர்) | 2017(ஜனவரி- ஜூலை) | மொத்தம் |
|---|---|---|---|---|
| முத்திரைத் தீர்வை | 191,520,583 | 537,152,458 | 392,306,672 | 1,120,979,713 |
| நீதிமன்ற குற்றப் பணமும் தண்டப் பணமும் | 24,307,177 | 176,744,489 | 83,554,094 | 284,605,760 |
| கலால் அனுமதிப்பத்திர வருமானம் | 3,583,501 | 42,477,474 | 46,270,662 | 92,331,637 |
| ஏனையவை | 3,025 | 1,479,440 | 1,420,596 | 2,903,061 |
| மொத்தம் | 219,414,286 | 757,853,861 | 523,552,024 | 1,500,820,171 |

மொத்த அரசிறையாக 2015 தொடக்கம் இன்றுவரை (2017 ஜூலை ) 1500 மில்லியன் ரூபா சேகரிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 757 மில்லியன் ரூபா வருமானமாக அண் மிக்க முடிந்துள்ளது.

இது மதிப்பீட்டு இலக்கான 203 மில்லியன் ரூபாவின் 273% அதிகரிப்பினைக் காட்டியுள்ளது. இவ் வருட வருமான எதிர்பார்ப்பு 571 மில்லியன் ரூபாவாகும்.இதுவரை 523 மில்லியன் ரூபா சேர்க்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டின் அரசிறை சேகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ 23 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

இவ் வளர்ச்சிவீதமானது இத் திணைக்களத்தின் செயற்றிறன் வாய்ந்த வரி நிர்வாகத்தினையே காட்டுகின்றது.

திணைக்கள சேகரிப்புக்களில் முத்திரை தீர்வையானது பிரதானமான வரிவருமானமாக காணப்படுகின்றது. இவ்வரியானது 2015 தொடக்கம் இன்றுவரை (2017 ஜூலை ) 1120 மில்லியன் ரூபா முத்திரை தீர்வை சேகரிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 537 மில்லியன் ரூபாவினை முத்திரைவரி வருமானமாக மட் டும் சேகரிக்கப்பட்டுள்ளது.

இது மதிப்பீட்டு இலக்கான 163 மில்லியன் ரூபாவின் 229% அதிகரிப்பினைக் காட்டியுள்ளது. இவ்வருட எதிர்பார்ப்பு 461 மில்லியன் ரூபாவாகும்.இதுவரை 392 மில்லியன் ரூபா சேர்க்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2017ஆம் ஆண்டில் 28 சதவீதம் அதிகரித்த நிலையினை எடுத்துக் காட்டி நிற்கின்றன.

சாதாரண முத்திரைத் தீர்வைக்கும் மதிப்பீட்டின் அடிப்படையில் சேகரிக்கப் பட்ட மேலதிக முத்திரைத் தீர்வைக்குமான தொடர்பு

| ஆண்டு | அசைவற்ற ஆதனங்களினை கைமாற்றும் போதான முத்திரைத் தீர்வை | மதிப்பீட்டின் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட மேலதிக முத்திரைத் தீர்வை |
|---|---|---|
| ஜூலை - டிசம்பர் 2015 | 191,520,583 | -- |
| ஜனவரி - ஜூலை 2016 | 260,576,150 | 6,525,799 |
| ஜூலை - டிசம்பர் 2016 | 276,576,308 | 5,534,400 |
| ஜனவரி -ஜூலை 2017 | 392,306,672 | 17,463,153 |
| மொத்தம் | 1,120,979,713 | 29,523,352 |

மேற்காட்டிய அட்டவணையானது மதிப்பீட்டின் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட மேலதிக முத்திரைத்தீர்வைக்கும் சாதாரணமாக அசைவற்ற ஆதனங்களினை கைமாற்றும் போதான முத்தி ரைத் தீர்வைக்கும் இடையில் நேர்க்கணியத் தொடர்பை காட்டுகின்றது.

ஆதனங்களினை கைமாற்றும் உண்மை பெறுமதிக்கு முத்திரைத் தீர்வை செலுத்தப் படின் சாதாரண முத்திரைத் தீர்வை அதிகரிக்க மதிப்பீட்டின் அடிப்படையிலான முத்திரைத் தீர்வை குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர காலத்தில் அசைவற்ற ஆதனங்களினை கொள்வனவு செய்பவர்கள் கொள்வனவு செய்யப்பட்ட உண்மைப்பெறுமதியினை உறுதிகளில் குறிப்பிடுவார்கள் எனின் மதிப்பீட்டின் அடிப்படையிலான மேலதிக முத்திரைத் தீர்வை அறவிட வேண்டிய தேவை ஏற்படாது என்பதுடன் மேலதிக தண்டப்பணங்களும் செலுத்த வேண்டிய தேவை ஏற்படாது என எதிர்பார்க்கப்படுகின்றது. திணைக்களம் ஆரம்பித்து இது வரையான காலப்பகுதியில்பெறுமதி குறைத்து உறுதிகள் நிறைவேற்றப்பட்டதாக கருதப்பட்டு 3221 கோவைகள் திறக்கப்பட்டு 1336 கோவைகள் முடிவுறுத்தப்பட்டு 29.5 மில்லியன் ரூபா மேலதிக முத்திரைத் தீர் வையாக சேகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக் கது.


இத் திணைக்களத்தின் முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன் றக் குற்றப்பணம் மூலம் சேகரிக்கப்பட்ட அரசிறை உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு கைமாற்றம் செய்யப்படுதல் வேண்டும். இதற்கமைவாக கடந்த ஆண் டில் இத்திணைக்களம் சேகரித்த முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்ற குற்றம் மற்றும் தண் டப்பணம் ஆகியவற்றை வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஊடாக உரிய உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு இதுவரையான காலப்பகுதியில் ஏறத்தாழ 594 மில்லியன் ரூபா நிதியை வடக்கு மாகாணசபை ஏனைய மாகாண சபைகளை விட மிகக்குறுகிய காலத்தில் துரிதமாகக் கைமாற்றம்செய்துள்ளபெருமையினையும்தன்னகத்தே கொண்டுள்ளது.


அரசிறை சேகரிப்புக்களை மேலும் அதிகரிப்பதற்காக இறைவரித் திணைக்களமானது பல உபாயங்களினைசெயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபடவுள்ளது. முதலாவதாக ஏற்கனவே நிர்வகிக்கப்பட்டு வரும் வரிக்கணக்காய்வு (Tax Audit) மூலம் அதிகரித்த வரிகளை பெற்றுக்கொள்ளுதல். இரண்டாவதாக வரிகள் மற்றும் விதிப்பனவு பட்டியலில் உள்ள வரிகளான அடகு பிடிப்போர் கட்டணம், கனிப்பொருள் வரி ஆகியவற்றுக்குரிய நியதிச்சட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்த நடவடிக்கையெடுத்தல். மேலும் வியாபார பெயர் பதிவுக் கட்டணம், மருந்துகள்மற்றும்இரசாயனம்மீதான அனுமதிப் பத்திர வரி ஆகிய புதிய வரிகளை நடைமுறைப் படுத்துவதற்குரிய நியதிச் சட்ட வரைபுகளுக்குரிய ஏற்பாடுகள் இத்திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.மாகாணஇறைவரித்திணைக்க ளத்தின் அரசிறை சேகரிப்புக்கள் பல சவால்களை கொண் டமைந்ததாக உள் ளது. 2010 ஆம் ஆண்டு வரையில் மாகாண சபைகளின் மொத்த அரசிறை யில் ஏறத்தாழ 50% பெற்றுக் கொடுத்த மொத்த விற்பனை வரி 2011 ஆம் ஆண்டுக்கான தேசிய .வரவு செலவுத்திட்டத்தின்மூலம் நீக்கப்பட்டமை மாகாண சபைகளுக்கு பாரிய இழப்பாக உள்ளது. வரி செலுத்துநர்களின் ஒத்துழைப்பானது பெருமளவில் உள்ள போதும் 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை கைமாற்றப்படும் ஆதனங்களின் பெறுமதி மதிப்பீடு தொடர்பாக உரிய பொறிமுறை இன்மை யினால் மக்கள் அதனை புரிந்து கொள்ளும் தன்மையில் சில சிக்கல் தன்மைகளினையும் நாம் எதிர்நோக்குகின்றோம். மற்றும் மாகாண சபைகளினது ஏனைய வரிகள் தொடர்பாகவும் போதியளவு விழிப்புணர்வின்மையும் மக்களிடையே காணப்படு கின்றது.

இத்தகைய சவால்களிலிருந்து விடுபடும் தன்மையினை எதிர்காலத்தில் சாத்தியமாக்குவோம் எனும் எண்ணத்துடன் இத் திணைக்களமானது தனது செயற்பாடுகளை தொடர்கின்றது. எமது இறைவரிச் சேகரிப்பு நடவடிக்கைகள் சிறப்பான வகையில் இடம்பெறுவதற்கு, வட மாகாண முதலமைச்சர் மற்றும் பிரதம செயலாளர், பிரதேச செயலாளர்கள், நீதிமன்றப் பதிவாளர்கள் , காணிப்பதிவாளர்கள், பிரசித்த நொத்தாரிசுகள், மக்கள்வங்கி ஆகியோரின் பூரண ஒத்துழைப்புடன் வரி சேகரிப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வருடத்தின் மதிப்பீட்டு இலக்கு ரூபா 571 மில்லியனாக இருந்த போதும் ரூபா 850 மில்லியன்வரிவருமான மாக பெற்றுக் கொள்ளும் இலக் கினை நோக்கி இத் திணைக்களம் செயலாற்றுகின்றது.

# தெல்லிப்பழை
# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
# இரதோற்சவ சிறப்புமலர் - 2017







## செஞ்சொற்சொல்வரின் ஆசிச்செய்தி

தேசம் போற்றும் தெல்லிநகர் துர்க்காதேவி இன்று தேர் ஏறி வருகிறாள். அறங்காக்கும் நாயகி அடியார்களின் அல்லல்களைப் போக்குவதற்கு அழகுத் தேரில் வருகிறாள். அன்னையின் அருள் மழையில் நனைந்து ஆனந்தம் பெற அனைவரும் வாருங்கள். சித்தர் பிரான் கதிர்காமர் ஆரம்பித்த கோவில், அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் ஆற்றுப்படுத்தலில் வளர்ந்த கோவில். குறையேதும் இன்றி அடியார்களின் பேராதரவால் நிறை செல்வமாக மிளிரும் திருக்கோவில். ஆதரவற்றவர்களுக்கு உதவிடும் அறக்கோவில். திருமுறைகளைப் பதிப்பித்து திருக்கோவில்களுக்கு இலவசமாக வழங்கும் தேவஸ்தானம் அடையாள வாயிலாக அன்னதானம் வழங்கும் அன்னசத்திரம், உடற்பிணி போக்குவதற்கு சிறந்த ஆயுர்வேத வைத்தியசாலையை அமைத்த ஆலயம். இத்திருக்கோவில் சிறக்க தொண்டாற்றும் அனைவரையும் இந்நாளில் வாழ்த்துகிறேன். தேர்ச்சிறப்பு மலரை வெளியிடும் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் செயற்கரும பணி சிறக்க நல்லாசி கூறு அமைகிறேன். அறங்காக்கும் அன்னை துர்க்கை தேரில் வந்து எம்மண்ணில் நிதி நிலைத்திடவும் நிம்மதி நிலைத்திடவும் பிரார்த்தித்து நிறைவு செய்கிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**



## பிரதம குருவின் ஆசிச்செய்தி

அன்னையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம் .உலகமே வியக்கும் தெல்லிப்பழை துர்க்கா தேவியின் திருவருளை அறியாதவர்களில்லை. எவர் நாடி வந்தாலும் அவர் துயர் போக்கும் அம்பாளின் கருணையை சொல்லில் வடிக்கமுடியாது. ஏவிளம்பி வருடப் பெருந்திருவிழா பக்தி பூர்வமாக நடைபெற்று இன்று அம்பாள் திருத்தேரில் காட்சியளிக்கவுள்ளாள். அம்பாளின் திருவருளைப் பெற இலட்சம் மக்கள் திரளாகக் கூடுவர். பக்திப் பரவசக்காட்சியை அனைவரும் கண்டு ஆனந்தம் அடைவர். பிறவிப் பிணிபோக்கும் பராசக்தியின் அருளைப்பெற அனைவருக்கும் எனது இதயபூர்வமான ஆசிகள் உரித்தாகுக.

**வா.அகிலேஸ்வரக்குருக்கள் - பிரதம குரு**

இற்றைக்கு 250 வருடங்களுக்கு முன் 1760 களில் சைவப்பெரியார் கதிர்காமர் அவர்கள் காசியிலிருந்து கொண்டுவந்த துர்க்கா இயந்திரத்தையும் திருமுகக் கெண்டியையும் தெல்லிப்பழையின் உழுதுடைப்பதியில் இலுப்பைமர நிழலில் தாபித்து வணங்கி வந்தார். இவ்வழிபாட்டிடமே இன்றுள்ள மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப்பெற்ற ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் ஆகும்.

## ஆலய அமைப்பு

மகிடாசுரன் தலைமீது ஊன்றிய திருப்பாதங்களையும் சங்கு,சக்கரம் தாங்கிய திருக்கரங்களையும் உடைய துர்க்கையம்பாள் மூலமூர்த்தியாக வீற்றிருந்து அருள்பொழிய விநாயகர், கஜலக்ஷ்மி, சுப்பிரமணியர், வைரவர், நாகதம்பிரான் மற்றும் சண்டேஸ்வரர் ஆகியோர் பிரதான பரிவாரத் தெய்வங்களாக உள்ளனர். வானளாவ உயர்ந்த இரு கோபுரங்கள், வில்லுமண்டபம், செங்கழுநீர்த் தொட்டி, துர்க்காபுஷ்கரணி,தீர்த்தத் தடாகம் போன்றன அமைந்த அழகிய கம்பீரமான பக்தி நிறைந்த சூழலைக்காண கண்கோடி வேண்டும். சிவாகம விதிப்படி நித்திய, நைமித்தியங்கள் நடைபெறும் இக்கோயிலுக்கு இலங்கையின் அதிசிறந்த சைவக்கோயிலுக்கான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விருது இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் 2017 இல் வழங்கப்பட்டது.

KINGS BAKERY & CAFE
K.K.S. Road, Tellippalai.
Tel :
077 348 5856,
077 123 5942

சயன் உணவகம்
K.K.S. Road, Mallakam
உரிமையாளர் :
Y.Ravindran
021 300 7980

Abans PLC
K.K.S. Road,
Tellippalai Junction,
Tellippalai.
Tel : 021 577 6152
Mobile : 077 072 7821,
076 913 6401,
077 721 8189
Email - ab_2tlp@abansgroup.com

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி
பயிற்சிப் பாடசாலை
Reg No - DS882
சசிகா
லேணர்ஸ்
070 301 5004
021 222 8004

இசைப்பிரியா
கிறீம் ஹவுஸ்
துர்க்காபுரம், தெல்லிப்பழை
உரிமையாளர் :
கோபி 077 072 4181
சகலவிதமான வைபவங்களுக்கும்
ஓடருக்கு ஐஸ்கிறீம் தரப்படும்.

UKS MULTI CENTER & BABY SHOP
K.K.S. Road, Tellippalai
(Opposite) D.S.Office
077 679 0603
சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

Vidthu Precious
DIGITAL COLOUR LAB
திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், பிறந்தநாள் வைபவங்கள் அனைத்து நிகழ்வுகளும் சிறந்தமுறையில் வீடியோ மற்றும் படப்பிடிப்பு செய்து தரப்படும். K.K.S. Road,
Chunnakam.
Tel - 77 224 5552
021 224 0766

அம்பாள் ஸ்ரோர்ஸ்
ஆலய நுழைவாயில்
துர்க்கை அம்மன் கோவிலடி
தெல்லிப்பழை
தேவஸ்தானத்திற்கு தேவையான அர்ச்சனை பொருட்கள், அபிஷேக பொருட்கள் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

SISILWORLD
No.125,K.K.S. Road,
Chunnakam.
021 224 5335
பிரதிப்
077 043 4668
சகலவிதமான எலெக்ரோனிக் பொருட்கள் பெற்றுக்கொள்ளலாம்.

VFT
FURNITURE
* SALES CENTRE
T.P : 021 224 2494
No. 141, K.K.S Road,
Chunnakam, Jaffna.

துர்க்கா CIVIL ENGINEERING CONSTRUCTION
K.K.S. Road, Tellippalai.
Email: jana.construction@yahoo.com

# முன்னாள் எம்.பி.தர்மரின் 32 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

(யாழ்ப்பாணம்)

முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் அமரர் வி. தர்மலிங்கத்தின் 32 ஆம் ஆண்டு நினைவஞ்சலி இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு தாவடியிலுள்ள நினைவுத் தூபியில் இடம் பெறும். நவாலியூர் க. சௌரி காந்தன் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் சிறப்பு அஞ்சலி உரைகளைப் பேரா சிரியர் சி.க. சிற்றம்பலம், வைத் திய கலாநிதி அமிர்தலிங்கம் பகீரதன் ஆகியோர் நிகழ்த் துவர். நண்பகல் 12 மணிக்கு ஏழாலை கண்ணகை அம் மன் ஆலய மண்டபத்தில் அன்னதான நிகழ்வும் இடம் பெறும். (இ-3)

# இந்தியப் பெருங்கடல் கருத்தரங்கு தொடங்கியது முன்வரிசையில் சம்பந்தன், சுமந்திரன்





(கொழும்பு)

இந்தியப் பெருங்கடல் கருத்தரங்கு கொழும்பில் பிரதமரின் அதிகாரபூர்வ செயலகமான அலரி மாளி கையில் நேற்று முன்தினம் மாலை ஆரம்பமானது. இர ண்டு நாட்கள் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில், பங் கேற்க, இந்திய வெளி விவ கார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், நேற்று முன்தினம் பிற்பகல் தனி விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலை யத்தை வந்தடைந்தார்.

அவரை நிதியமைச்சர் மங்கள சமரவீர, இலங் கைக்கான இந்திய தூதுவர் தரண்ஜித் சிங் சந்து உள் ளிட்டோர் விமான நிலை யத்தில் வரவேற்றனர்.

இதையடுத்து, அலரி மாளி கையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணை ந்து இந்தியப் பெருங்கடல் கருத்தரங்கை, இந்திய வெளி விவகார அமைச்சர் ஆரம் பித்து வைத்தார்.

இந்தக் கருத்தரங்கில் சுஷ்மா சுவராஜ், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சிங் கப்பூர் வெளிவிவகார அமைச் சர் விவியன் பாலகிருஷ் ணன், சீஷெல்ஸ் துணை ஜனாதிபதி உள்ளிட்டோர் உரையாற்றினர்.

இந்தக் கருத்தரங்கில், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோருக்கு முன்வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச் சர் திலக் மாரப்பன இரண்டா வது வரிசையிலும், வெளி விவகாரச் செயலர் பிரசாத் காரியவசம், ஜனாதிபதியின் செயலர் ஒஸ்ரின் பெர்னா ண்டோ போன்றவர் கள் மூன்றாவது வரிசை யிலும் அமர்ந்தனர்.

இந்தக் கருத்தரங்கில் 35 நாடுகளைச் சேர்ந்த 150 இற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (இ-7)

# சு.க. மாநாட்டில் அதிகளவான தமிழ், முஸ்லிம்கள் பங்கேற்பர்

## ஹிஸ்புல்லாஹ் நம்பிக்கை



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் மாகாண சபை மற்றும் உள் ளூராட்சி தேர்தல்களை மையப்படுத்தி நடத்தப்பட வுள்ளதாக தெரிவித்த புனர் வாழ்வு மற்றும் மீள்குடி யேற்ற இராஜாங்க அமைச் சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல் லாஹ், வரலாற்றில் முதன் முறையாக வட கிழக்கில் இருந்து அதிகளவான தமிழ், முஸ்லிம் மக்கள் இந்நிகழ் வில் கலந்து கொள்ளவுள்ள தாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, இன்று ஹஜ்ஜுப் பெருநாள் தினம் என் பதால் சு.க.வின் 66 ஆவது ஆண்டு நிறைவு விழா அக் கட்சியின் முஸ்லிம் சம் மேளனத்தின் வேண்டுகோ ளுக்கு அமைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் செப்டெம்பர் 3ஆம் திகதிக்கு மாற்றப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆவது ஆண்டு நிறைவு நாளை 3ஆம் திகதி கொழும்பு கெம்பல் மைதா னத்தில் நடைபெறவுள்ளது.

"மக்களின் பலம் நேர்த்தி யான கரங்களில்" என்ற தொனிப்பொருளில் நடை பெறவுள்ள இம்மாநாடு தொட ர்பில் விளக்கமளிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பு கொழு ம்பில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கி ழமை நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சியின் முஸ்லிம் சம்மேளன பிரதித் தலைவரும், இராஜாங்க அமைச்சருமான ஹிஸ்புல் லாஹ் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றுதல்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த யாழ்.நகர் II பொதுச் சுகா தாரப் பரிசோதகர் பிரிவுக் குட்பட்ட வளர்ப்பு நாய்க ளுக்கு விலங்குவிசர் நோய்த் தடுப்பூசி (A.R.V) கீழ் வரும் இடங்களில் வைத்து வழங் கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியினை ஏற்றிக் கொள் ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம். இவ் வளர் ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணமாக ரூபா30 செலுத் தப்பட வேண்டும்.

04.09.2017 காலை 9- முற்பகல் 11 மணிவரை அத் தியடி பிள்ளையார் கோவிலடி அத்தியடி, முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை ஸ்ரான்லி வீதி பெற் றோலியக் கூட்டுத்தாபனம் முன்பாக, பிற்பகல் 2.30 தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பருத்தித்துறை வீதி, குருநாதர் சுவாமி கோவிலடி, 06.09.2017 காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை நாவலர் மண்ட பம், நாவலர் வீதி, முற்பகல் 11 மணிதொடக்கம் பிற்பகல் 1 மணிவரை ராசாவின் தோட்ட வீதி, ஸ்ரான்லி வீதி சந்தி, பிற்பகல் 2.30 தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை கோவில் வீதி, நக்கா வீதி சந்தி, 07.09.2017 காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை மருதடிலேன் வைர வர் கோவிலடி, முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை நல்லூர் தெற்கு சனச மூகசுற்பகபிள்ளையார்கோவி லடி, பிற்பகல் 2.30 தொடக் கம் பிற்பகல் 4 மணி வரை நக்கா வீதி, இளஞ் சிங்கம் சனசமூக நிலையம், 08.09. 2017 காலை 9 மணி தொட கம் முற்பகல் 11 மணி வரை கோவில் வீதி ஆஸ்பத்திரி வீதி சந்தி, முற்பகல் 11மணி தொடக் கம் பிற்பகல் 1 மணிவரை குழந்தை யேசு ஆலயத்திற்கு முன்பாக கோயில் வீதி, பிற் பகல் 2.30 தொடக்கம் பிற் பகல் 4 மணி வரை மடம் வீதி, திருவள்ளுவர் சனசமூக நிலை யம், 11.09. 2017 காலை 9 மணி தொடக் கம் 11 மணி வரை அருள்மாதா கோவிலடி, ராசா வின் தோட்டம், முற் பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை மாட்டின் வீதி, சப்பல் வீதி சந்தி, பிற்பகல் 2.30 தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை 2ஆம் குறுக்கு வேம் படி வீதி யாழ்ப்பாணம், 12.09. 2017 காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை O.L.R.தேவா லயம், 4ஆம் குறுக் குத் தெரு, முற் பகல் 11 மணி தொடக்கம் பிற் பகல் 1மணி வரை யாழ். புகையிரத நிலைய வீதி வைர வர் கோவிலடி, பிற் பகல் 2.30 தொட க்கம் பிற்பகல் 4 மணி வரை 2 ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி யாழ்ப்பா ணம், 13.09. 2017 காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி, முற்பகல் 11 மணி தொடக்கம் பிற் பகல் 1 மணி, பிற் பகல் 2.30 தொடக் கம் பிற்பகல் 4 மணிவரை அனைத் துப் பகுதியும் நட மாடும் சேவை என அறிவிக் கப் பட்டுள்ளது. (இ)



2017ஆம் ஆண்டுக்கான பன்முக ப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் நீர் வேலி மத்தியில் குறைந்த வருமா னங்களுடைய விவசாய பயனா ளிகள் இருவருக்கு வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் நீர் இறைக்கும் இயந்திரத்தினை வழங்கி வைத்தார்.

# தள்ளாடினால் தடை

பொரளை கெம்பல் மைதா னத்தில் நாளை 3ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையன்று நடைபெற விருக்கும், ஸ்ரீல ங்கா சுதந் திரக் கட்சியின் 66 ஆவது ஆண்டு விழாவுக் கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்து விட்டன" என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

"அந்த விழா இடம் பெறும், பூமிக்குள் போதை யில் மற் றும் போதையூட்டும் பொருட களை எடுத்துக் கொண்டு வரும் எவருமே அனுமதிக் கப்படமாட்டார்கள்" என்றும் அக்கட்சி அறிவித் துள்ளது.

இதேவேளை, இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துகளை பயன்படுத்துவதை குறை த்து, கூடியவரையிலும், தனி யார் பேருந்துகளைப் பயன் படுத்துமாறு, கட்சியின் அமை ப்பாளர்களுக்கு அறி வுறு த்தப்பட்டுள்ளதாகவும் அக் கட்சி அறிவித்துள்ளது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 120 | 120 | 140 | 160 | 130 |
| உருளைக்கிழங்கு | 110 | 85 | 100 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 300 | 300 | 400 | 300 |
| தக்காளி | 150 | 100 | 160 | 140 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 40 | 80 | 80 | 60 | 80 |
| கோவா | 80 | 55 | 120 | 100 | 100 | 100 |
| கரட் | 100 | 80 | 200 | 160 | 180 | 150 |
| பூசணி | 30 | 30 | 60 | 40 | 60 | 60 |
| புடோல் | 60 | 40 | 80 | 80 | 80 | 70 |
| வாழைக்காய் | 100 | 70 | 100 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 180 | 150 | 180 | 200 | 200 | 160 |
| பெரிய வெங்காயம் | 130 | 100 | 130 | 120 | 120 | 130 |
| பாகற்காய் | 200 | 110 | 200 | 160 | 280 | 200 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 50 | 60 | 80 | 70 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 100 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 80 | 60 | 80 | 120 | 60 |
| லீக்ஸ் | 100 | 60 | 120 | 80 | 100 | 100 |
| பீற்றூட் | 40 | 30 | 60 | 50 | 60 | 40 |
| கறிமிளகாய் | 140 | 70 | 160 | 120 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 50 | 40 | 80 | 50 | 60 | 70 |
| போஞ்சி | 180 | 110 | 180 | 160 | 200 | 140 |
| கத்தரிதம்பள்ளா | 140 | 120 | 100 | 120 | 140 | 120 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 40 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 120 | 150 | 200 | 120 | 250 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 70 | 70 | 50-70 | 60 |
| இராசவள்ளி | 200 | 200 | - | 280 | - | - |
| வெங்காயப்பூ | 200 | 130 | 200 | - | 160 | 240 |
| முள்ளங்கி | 80 | 30 | 80 | 60 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 07 | 20 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 70 | 80 | 50 | 60 | 80 |

# திலக் மாரப்பனவுடன் அலிஸ் வெல்ஸ் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள அமெரி க்க இராஜாங்கத் திணைக்க ளத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பதில் உதவிச்செயலர் அலிஸ் வெல்ஸ் வெளிவிவகார அமை ச்சர் திலக் மாரப்பனவுடன் பேச்சு நடத்தினார்.

வெளிவிவகார அமைச் சருடன் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கைக்கான அமெ ரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் உள்ளிட்ட அதிகாரிகளும், வெளிவிவகாரச் செயலர் பிரசாத் காரியவசமும் இந்தச் சந்திப்பின் பங்கேற்றனர்.

அமெரிக்கா - இலங்கை இடையிலான பரஸ்பர உற வுகளைப் பலப்படுத்துவது தொடர்பில் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டதாக, வெளிவிவ கார அமைச்சு தெரிவித்துள் ளது.

அதேவேளை, கொழும்பு வந்துள்ள அலிஸ் வெல்ஸ் நேற்றுமுன்தினம் சிவில்சமூகப் பிரதிநிதிகள், பெண்கள் அமை ப்புகளின் பிரதிநிதி களையும் சந்தித்திருந்தார். (இ-7)

மனிதனின் பெருமையும் சிறுமையும் அவனவன் இதயத்துக்குள் இருக்கின்றன!

~ சீனப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சர்வமதக் கூட்டம் எதற்காக கூடியது?

நடுநிலையோடு நின்று நிதானமாகச் சிந்திப்பவர்களுக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

அவ்வாறு சிலர் சிந்திப்பார்களாக இருந்தாலும் அவர்களின் கருத்துக்கள் சபை ஏறுவதில் பெரும் இடர்பாடுகளைச் சந்தித்துள்ளது என்றே கூற வேண்டும்.

தமிழ் மக்களின் தற்போதைய நிலைமை என்பது மிகவும் இக்கட்டானதாக இருப்பதைக் காண முடியும்.

சிங்களப் பேரினவாதத்துக்கு ஆதரவாகச் செயற்படுபவர்கள் தமிழ் இனத்தில் இருப்பது மிகவும் ஆபத்தானது.

எனினும் அத்தகையவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருந்து கொண்டு ஆட்சியாளர்களின் தேவைகளை நிறைவேற்றக் கடுமையாகப் பாடுபடுகின்றனர்.

அதேநேரம் இவர்கள் நமக்கு உரிமை பெற்றுத் தருவார்கள் என தமிழ் மக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

இங்குதான் தமிழ் மக்கள் ஏமாந்து போகின்றனர். நம்மவர்களே நம்மை ஏமாற்றி நமக்கு எதிரானவர்களுக்குப் பந்தம் பிடிக்கின்றனர் என்றால் தமிழினம் வாழ்வதென்பது எங்ஙனம் சாத்தியமாக முடியும்.

ஆக, எதை எடுத்தாலும் அதற்குள் பேரினவாதத்தின் ஆதிக்கமும் ஆக்கிரமிப்பும் இருக்கவே செய்கிறது.

அண்மையில் சர்வமதத் தலைவர்களின் கூட்டமொன்று யாழ்ப்பாணத்தில் ஏற்பாடாகியிருந்தது.

அஸ்கிரிய பீடாதிபதி உள்ளிட்ட சர்வமதத் தலைவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அஸ்கிரிய பீடாதிபதி தவிர்ந்த ஏனைய சமயத் தலைவர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

இதில் சிலர் வைத்த கருத்துக்கள் மக்கள் சமூகம் சார்ந்தவை. இன்னும் சிலர் தங்கள் மதம் சார்ந்த பிரச்சினைகளை எடுத்தியம்பினர்.

எந்தச் சமயத்தில் இருந்து எவர் கதைத்தாலும் இதற்கெல்லாம் பதில் கூறுகின்ற பொறுப்பு அஸ்கிரிய பீடத்தின் பீடாதிபதியிடமே இருந்தது.

சர்வமதத் தலைவர்களின் கூட்டத்துக்கு அவர் தலைமை தாங்கியதால் பதில் அளிப்பது அவரின் பொறுப்பு என்பதற்காக அவர் பதில் அளிக்கவில்லை.

மாறாக இலங்கையில் தாம் அசைந்தால் மட்டுமே எதுவும் அசையும் என்ற அதிகாரம் தங்களிடமே இருக்கிறது என்ற அடிப்படையிலேயே அஸ்கரிய பீடாதிபதி பதில் அளிப்பதாக இருந்தது.

எல்லாப் பிரச்சினைகளையும் கேட்ட அஸ்கிரிய பீடாதிபதி தனது பதிவில் யாழ்ப்பாணத்தில் சிங்கள மகா வித்தியாலயத்தை மீளவும் ஆரம்பிப்போம் என்றார்.

யாழ்ப்பாணத்தில் சிங்கள மகா வித்தியாலயம் மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்ற செய்தியை அறிவிப்பதற்கு சர்வமதத் தலைவர் கூட்டம் எதற்காக? என்பதுதான் தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தில் சிங்கள மகா வித்தியாலயம் ஆரம்பிக்கப்படுமென்ற செய்தியை இந்த நாட்டின் கல்வி அமைச்சர் தெரிவித்திருந்தால் அது சம்பந்தப்பட்ட பொருத்தப்பாடு எனலாம்.

ஆனால் அஸ்கிரிய பீடாதிபதி ஏன் அப்படியொரு அறிவித்தலை தெரிவித்தார் என்பது குறித்து நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

ஆக, யாழ்ப்பாணத்தில் சிங்கள பாடசாலைகளை நிறுவுகின்ற ஒரு திட்டத்தை பௌத்த பீடங்கள் பொறுப்பெடுத்துள்ளன என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

என்ன செய்வது எங்கள் அரசியல்வாதிகளே அவர்களுக்காக கதைக்கும்போது தமிழ் மக்கள் என்ன செய்ய முடியும்.

# ரோஹிஞ்சா இனப்படுகொலையை கண்டித்து கிழக்கில் ஆர்ப்பாட்டம்

மியன்மாரில் ரோஹிஞ்சா முஸ்லிம்கள் கொல்லப்படுவதைக் கண்டித்தும் அங்கு முஸ்லிம்கள் மீதான தாக்குதலை நிறுத்தக் கோரியும் மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி, ஓட்டமாவடி பிரதேசங்களிலும் திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியாவிலும், ஜும்ஆத் தொழுகையின் பின்னர் நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம், காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சபை என்பன இணைந்து, இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தது.

காத்தான்குடி ஐந்தாம் குறிச்சி ஜாமியுழ்ழாபிரீன் ஜும்ஆ பள்ளிவாசலில் இருந்து ஆரம்பான இவ்வார்ப்பாட்ட பேரணி காத்தான்குடி பிரதேச செயலகம் வரை சென்று அங்கு ஐக்கிய நாடுகள சபைககும் அரசாங்கத்துக் கும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

கலகுடா ஜம் இய்யத்துல் உலமா சபையின் வழிகாட்டலில கல்குடா முஸ்லிம் பிரதேசத்தில் உள்ள பள்ளிவாசல்கள், சமூக சேவை அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள என்பன ஒன்றிணைந்து ஜும்ஆ தொழுகையின் பினனர் ஓட்டமாவடி முஹைதீன் ஜும்ஆ பள்ளிவாசல் முன்பாக இந்தக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கிண்ணியா உலமா சபை, சூரா சபை, பள்ளிவாசல்கள் ஒன்றியம், இளைஞர் அமைப்புக்கள் மற்றும் நலன் விரும்பிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட அமைதிவழி அறப் போராட்டம், ஜும்ஆ தொழுகையின் பின்னர் கிண்ணியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்றது. (இ-7)

## பௌர்ணமி விழா இன்று

கரவெட்டி (கரணவாய் கிழக்கு) கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் நடத்தும் பௌர்ணமி விழா இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணிக்கு சனசமூக நிலையத் தலைவர். சி.ஜி.திருமாலழகன் தலைமையில் ஜெயச்சந்திரன் கலையரங்கில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளர் மார்க்கண்டு செகசோதி கலந்து கொள்வார். இந்நிகழ்வில் " ஆன்மீகமும் மனிதனும்" எனும் தொனிப் பொருளில் சிறப்புச் சொற்பொழிவை ஆன்மீகவாதி விஸ்வலிங்கம் சுமதீஸ்வரன் வழங்குவார். (இ-7)

## ஜெகத் ஜெயசூரியவிற்காக அரசு நடவடிக்கை எடுக்கும் அமைச்சர் சஜித் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச மனிதவு ரிமை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவின் குற்றமற்ற நிலையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கையை எடுப்பதாக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இராணுவ வீரர்கள் தொடர்பில் எவராவது குற்றம் சுமத்தினால் நிபந்தனைகள் இன்றி இராணுவ வீரர்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் முன்னிற்பதாக அமைச்சர் கூறியுள்ளார்.

திஸ்ஸமஹாராம ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் கட்டடம் ஒன்றுக்கு நேற்று அடிக்கல் நாட்டும் நிகழ்வில் அமைச்சர் இவ்வாறு உரையாற்றியுள்ளார்.

யுத்த காலத்தில் மனிதவுரிமைகள் மீறப்பட்டதாக முனனாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பான் கீ மூனுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கை காரணமாக ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய இந்தக் குற்றச்சாட்டுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளதாக அமைச்சர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## வைத்தியருக்கு கௌரவிப்பு விழா

கண்டி போதனா வைத்தியசாலையில் முதன் முறையாக இருதயமாற்று சத்திர சிகிச்சையை வெற்றி கரமாக மேற்கொண்ட வைத்திய கலாநிதி குமாரதாசன் ஞானகாந்தனை பாராட்டும் முகமாக நீர்வேலி மக்களால் நடத்தப்படும் கௌரவிப்பு விழா நாளை 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நீர்வேலி தெற்கு ஸ்ரீமுருகன் மாதர் சங்க மண்டபத்தில் விழாக் குழுத்தலைவர் த. நடராசா தலைமையில் இடம் பெறும். இந்நிகழ் வில் ஆசியுரையை நீர்வேலி கந்தசுவாமி கோவில் பிரதம குரு சிவஸ்ரீ இராசேந்திர சுவாமிநாதக் குருக்கள் வழங்குவார். (இ-7)

## கிளிநொச்சியில் கஞ்சாவுடன் சந்தேகத்தில் ஒருவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டைக்காடு பகுதியில் 2 கிலோ கஞ்சா பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன், சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலிற்கமைய கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபரின் போதைப்பொருள் ஒழிப்பு விசேட பொலிஸ் பிரிவினரினால் குறித்த நடவடிக்கை முனனெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் போதைப்பொருள் ஆகியன நீதிமன்றில் முற்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட நபர் மீது தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர், (மு-312)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ்.பிரதேசத்தில் நந்தாவில், தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி, சிவன் அம்மன் வீதி, கந்தர்மடம், அன்னசத்திரச் சந்தி, இலுப்பையடி சந்தி, பருத்தித்துறை வீதியில் நாக விகாரையில் இருந்து பாரதியார் சிலை வரை, விக்ரோறியார் வீதி, மின்சார நிலைய வீதியில் ஒரு பகுதி, புகையிரத நிலையப் பிரதேசம், மார்டின் வீதி, யாழ் 2ம், 3ம், 4ம் குறுக்கு தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் புகையிரதக் கடவையிலிருந்து இராசாவின் தோட்ட வீதி வரை, அம்பலவாணர் வீதி, ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து மார்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதியில் ஆரியகுளத்திலிருந்து முட்டாசுக்கடை சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியில் ஒரு பகுதி, கல்வயல், மட்டுவில், சரசாலை, நுணாவில் பருத்தித்துறை வீதி, சுதந்திரபுரம், குட்டியப்புலம், நவக்கிரி, நிலாவரை, சிறுப்பிட்டி மேற்கு, கலைமகள், ஆவரங்கால், வாதரவத்தை, பெரிய பொககணை, புத்தூர், ஊரணி, வீரவாணி, நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆண்கள் விடுதி, டம்றோ பலாலி வீதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, AVNOR பிறைவேற்லிமிறரெட், மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, யாழ்.புகையிரத நிலையம், Green Grass விடுதி, சிறிநதியா நகை மாளிகை, Raja Talkies, LOLC, ஞானம்ஸ் விடுதி, றொப்பாஸ் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)


## புலிகளின் கோட்பாடு உயிர்ப்புடனாம்!

விடுதலைப்புலிகளின் கோட்பாடு இன்னமும் உயிருடன் இருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜெனரல் ஜெயசூரியவுக்கு எதிராக பிரேசிலில் தொடரப்பட்ட வழக்கானது விடுதலைப் புலிகளின் கோட்பாடு உயிர்ப்புடன் இருப்பதையே சுட்டி நிற்கின்றது என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனவிரத்ன இதன்போது சுட்டிக் காட்டினார். (மு-11)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ இந்தியாவின் எழுச்சி என்ற சக்கரம் மீண்டும் ஒருமுறை சுழல ஆரம்பித்துவிட்டது. மீண்டும் இந்தியாவிலிருந்து குரல் ஒலிக்க ஆரம்பித்திருக்கிறது. இந்தக் குரல் விரைவில் உலகின் எல்லாப் பகுதிகளிலும் கேட்டே ஆக வேண்டும்.

❖ நம்புங்கள்; உறுதியாக நம்புங்கள். இந்தியர் கண்விழித்து எழுந்திருக்கவேண்டும் என்று ஆண்டவனின் கட்டளை பிறந்துவிட்டது. இந்தியா எழுச்சி பெற்று முன்னேற்றப் பாதையில்தான் செல்ல வேண்டும் என்று இறைவன் ஆணை பிறப்பித்துவிட்டான். பாமரர்களான இந்தியாவின் ஏழை எளிய மக்கள் நல்வாழ்வு பெறப்போகிறார்கள்.

❖ மிருகபலத்தால் அல்லாமல் ஆன்மீக பலத்தால் மட்டுமே எழுச்சி பெறப்போகிறது. அழிவு முறையின் மூலமாக அதன் எழுச்சி உண்டாகப் போவதில்லை. மாறாக அமைதி, அன்பு ஆகிய முறைகளின் மூலமாகத்தான் இந்தப் பணி நடைபெறும்.



கம்பர்மலை யங் கம்பன்ஸ் வி.க. நடத்தும் அமரர் தங்கவடிவேல் ஆசிரியர் ஞாபகார்த்த கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கழக மைதானத்தில் நடைபெற்று இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இதில் இறுதிப் போட்டிகளுக்கு முன்னேறியது ஆவரங்கால் மத்தி மற்றும் ஆவரங்கால் இந்து இளையர் விளையாட்டுக்கழகம். (க)

## 95 ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்

# தனது சொந்த தேசிய சாதனையை தகர்த்தார் மகாஜனா வீராங்கனை அனித்தா

95 ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற கோலூன்றிப் பாய்தலில் 3.47 மீற்றர் உயரம் பாய்ந்த தனது சொந்த தேசிய சாதனையை மீண்டும் முறியடித்தார் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி வீராங்கனை அனித்தா ஜகதீஸ்வரன். (க)



## பிரிவு I ற்கான உதைபந்தாட்டம்

# சென்.மேரிஸ் - கொழும்புரட்ணம்ஸ் இன்று பலப்பரீட்சை



உதைபந்தாட்ட பிரிவு I ற்கான உதைபந்தாட்ட போட்டி ஆரம்பமாகவுள்ளது. இதில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு சுகாதி மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டியில் சென்.மேரிஸ் அணியை எதிர்த்து கொழும்பு ரட்ணம்ஸ் அணி மோதவுள்ளது. (க)

## வட மாகாண ரீதியிலான சைக்கிள் ஓட்டம்

நாவற்குழி சரஸ்வதி சன சமூக நிலையமும், விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் வட மாகாண ரீதியிலான 60 கிலோ மீற்றர் தூரமுடைய சைக்கிள் ஓட்டப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்தப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (க)

## சங்காவின் அதிரடியோடு

# கரீபியன் பிரிமியர் லீக் கிரிக்கெட் தொடரில் பிளே ஓப் சுற்றில் தல்லாவாஸ் அணி

விறுவிறுப்பான முறையில் நடைபெற்று வரும், மேற்கிந்திய தீவுகளின் கிரிக்கெட் திருவிழாக்களில் ஒன்றான 'கரீபியன் பிரிமியர் லீக்' இருபது-20 தொடரில் பிளே ஓப் சுற்றிற்கு, குமார் சங்கக்கார தலைமையிலான ஜமெய்க்கா தல்லாவாஸ் அணி, சென். கிட்ஸ் மற்றும் நெவிஸ் பேட்ரியட்ஸ் அணியினை 41 ஓட்டங்களால் வீழ்த்தியதன் மூலம் தெரிவாகியுள்ளது.



இம்மாதம் ஓகஸ்ட் 4 ஆம் திகதி முதல் மேற்கிந்திய தீவுகளின் உள்ளூரைச் சேர்ந்த அணிகளின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றுவரும் மேற்கிந்திய தீவுகளின் உள்ளூர் இருபது-20 தொடரின், குழு நிலை ஆட்டங்கள் அனைத்தும் நிறைவுபெறும் தறுவாயினை தற்போது நெருங்கியுள்ளன. வெளிநாட்டு மற்றும் உள்ளூர் வீரர்களை பிரதிநிதித்துவப்படுத்தி ஆறு அணிகள் பங்குபெறும் இந்தத் தொடரில் ஒவ்வொரு அணியும் 10 போட்டிகளில் விளையாடி தொடரின் அடுத்த கட்டமான பிளே ஓப் சுற்றிற்கு வாய்ப்பினை பெறும்.

இத்தொடரின் பிளே ஓப் சுற்றிற்கு திரின்பாகோ நைட் ரைடர்ஸ் ஏற்கனவே தெரிவாகியுள்ள நிலையில், குமார் சங்கக்கார தலைமையிலான தொடரின் நடப்பு சம்பியன் ஆன ஜமெய்க்கா தல்லாவாஸ் அணி பிளே ஓப் வாய்ப்பினை உறுதி செய்ய, கிறிஸ் கெய்ல் தலைமையிலான சென். கிட்ஸ் மற்றும் நெவிஸ் பேட்ரியட்ஸ் அணியினை தீர்க்கமான குழு நிலை ஆட்டத்தில் வீழ்த்த வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது.

கிங்ஸ்டன் நகரத்தின் சபீனா பார்க் மைதானத்தில் தொடங்கியிருந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிறிஸ் கெயில் தரப்பு முதலில் துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பத்தினை ஜமெய்க்கா தல்லாவாஸ் அணியிற்கு வழங்கியிருந்தது.

போட்டியின் முதல் பந்திலேயே ஆட்டமிழந்த லெண்ட்ல் சிம்மோன்ஸ் தனது அணி ஜமெய்க்காவிற்கு மோசமான ஆரம்பத்தினைத் தந்திருந்தார். இவ்வாறான தொரு நிலையில் மைதானம் விரைந்த இலங்கை அணியின் குமார் சங்கக்கார சாமர்த்தியமான தனது துடுப்பாட்டத்தினை வெளிப்படுத்தி ஏனைய ஆரம்ப வீரர் கிளேன் பிலிப்ஸ் உடன் இணைந்து ஓட்டங்கள் சேர்க்க தொடங்கினார்.

முதல் விக்கெட்டுக்காக இரண்டு வீரர்களினாலும் 81 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப்பெறப்பட்டது. இரண்டாம் விக்கெட்டாக பறிபோன பிலிப்ஸ் ஆப்கானிஸ்தான் வீரர் முஹம்மட் நபியின் பந்துவீச்சில் பிடியொன்றினைக் கொடுத்து 31 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இவரின் விக்கெட்டினை தொடர்ந்து சீரான இடைவெளியில் மூன்றாவது விக்கெட்டினையும் பறிகொடுத்த ஜமெய்க்கா தல்லாவாஸ் அணியை சங்கக்கார அரைச்சதம் கடந்து மேலும் வலுப்படுத்தினார். அணியின் நான்காவது விக்கெட்டாக பறிபோன சங்கக்காரவினால் மொத்தமாக 55 பந்துகளில் 3 சிக்ஸர்கள் மற்றும் 4 பௌண்டரிகள் அடங்கலாக 69 ஓட்டங்கள் பெறப்பட்டிருந்தன.

தொடர்ந்து மேற்கிந்திய தீவுகளின் தேசிய அணி வீரர் ரொவ்மேன் பொவேலின் அதிரடி காட்ட, 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்த ஜமெய்க்கா தல்லாவாஸ் அணி 157 ஓட்டங்களினை குவித்துக் கொண்டது.

தொடர்ந்து வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்ட 158 ஓட்டங்களை 20 ஓவர்களில் பெற களமிறங்கிய சென். கிட்ஸ் மற்றும் நெவிஸ் பேட்ரியட்ஸ் அணியில் ஆரம்ப வீரரும் அணித் தலைவருமான கிறிஸ் கெயில் ஓட்டம் ஏதுமின்றி ஓய்வறை திரும்பி ஏமாற்றினார்.

எனினும், ஏனைய ஆரம்ப வீரரான ஈவான் லூயிஸ் சிறிது அதிரடி காட்டி அணியினை வெற்றிப் பாதையிற்கு அழைக்க முயற்சித்திருந்தார். அவரின் விக்கெட்டினை பாகிஸ்தானின் வேகப் பந்து வீச்சாளரான மொஹமட் சமி கைப்பற்ற போட்டியின் முடிவு ஜமெய்க்கா அணியிற்கு சாதமாகியது. தொடர்ந்து வந்த துடுப்பாட்ட வீரர்கள் அனைவரினையும் வேகப் பந்து வீச்சாளர்களான ஒசானே தோமஸ் மற்றும் கிரிஸ்மர் சன்டோக்கி ஆகியோர் விரைவாக ஓய்வறை அனுப்ப முடிவில், 17.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து சென். கிட்ஸ் மற்றும் நெவிஸ் பேட்ரியட்ஸ் அணி 116 ஓட்டங்களினை மாத்திரம் பெற்றுபோட்டியில் தோல்வியினை தழுவியது.

இப் போட்டியின் வெற்றி மூலம் கிடைத்த புள்ளிகளினால், தொடரின் புள்ளிகள் இரண்டாம் இடத்திற்கு முன்னேறிய ஜமெய்க்கா தல்லாவாஸ் அணி தொடரின் பிளேஓப் சுற்றிற்கும் முன்னேறியது. (க)

## தமிழரை ஒருபோதும்...

இலங்கைத் தமிழர்கள் சகல உரிமைகளையும் பெற்று சுதந்திரமாக வாழ வேண்டும். நிரந்தர அரசியல் தீர்வே இந்த நிலைமையை ஏற்படுத்தும்.

எனவே, நிரந்தர தீர்வு கிடைக்கும் வரை இலங்கை அரசுக்கு இந்தியா தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும் என எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தனிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் திட்டவட்டமாகத் தெரிவித்தார் இலங்கைத் தமிழர்களை இந்தியா ஒரு போதும் கைவிடாது எனவும் கொழும்பில் நேற்று ஆரம்பமாகிய இந்தியப் பெருங்கடல் கருத்தரங்கில் பங்கேற்பதற்காக வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முதலாம் நாள் கருத்தரங்கு நிறைவடைந்த பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை இராப்போசனத்துடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது தற்போதைய புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் தொடர்பில் அமைச்சரைத் தெளிவுபடுத்திய இரா.சம்பந்தன் இந்தக் கருமத்திற்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டுமெனவும், இதனைமேலும் இழுத்தடிக்கப்படலாகாது எனவும் தெரிவித்தார்.

இந்தவிடயம் சம்பந்தமாக ஏற்கெனவே பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய இரா.சம்பந்தன், அந்த நடவடிக்கைகளின் அடிப் படையில் மேலும் காலதாமதம் ஏற்படாத வகையில் அரசியலமைப்பு யாப்பின் வரைபானது இந்த வருட இறுதிக்குள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, அதனைத் தொடர்ந்து உடனடியாக அது சர்வசனவாக்கெடுப்புக்கு உட்படுத்தப்படவேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

இலங்கை அரசாங்கமானது இந்த் நாட்டு மக்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் கொடுத்தவாக்குறுதிகளின் அடிப்படையில் இந்தக் கருமத்தினை நிறைவேற்றுவதனை இந்திய அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டுமென வெளிவிவகார அமைச்சரை இரா.சம்பந்தன் கேட்டுக்கொண்டார்.

இந்திய அரசாங்கத்தினது ஒத்துழைப்பை மீள் உறுதி செய்தவெளி விவகார அமைச்சர், இந்த நடவடிக்கைகளை நிறைவுக்குக் கொண்டு வருமுகமாக தமது தொடர்ச்சியான ஒத்துழைப்பு இருக்குமெனவும் எடுத்துக் கூறியுள்ளார். (மு-11)

## தேசிய மட்டத்தில்...

த்தை சேர்ந்த அனித்தா மீண்டும் தனது புதிய சாதனையினைப் படைத்துள்ளார்.

ஏற்கெனவே தன்னால் படைக்கப்பட்ட இந்தச் சாதனையை அவர் மீண்டும் புதுப்பித்துள்ளார். தியகமவில் உள்ள மகிந்த ராஜபக்ஷ மைதானத்தில் இடம்பெற்ற 95 ஆவது தேசிய தடகள போட்டியிலேயே அவர் இந்த சாதனையை நேற்று நிலைநாட்டியுள்ளார்.

அதன்படி நேற்று இடம்பெற்ற இந்த பெண்களுக்கான கோல் ஊன்றி பாய்தல் போட்டியில்,

ஜே.அனித்தா 3.47m உயரம்வரை பாய்ந்து முதலாம் இடத்தினையும், விமானப் படையைச் சேர்ந்த எஸ்.பீ.ரணசிங்க 3.20m உயரம்வரை பாய்ந்து இரண்டாம் இடத்தினையும் சீ.ஹெரினா 3.00m உயரம் வரை பாய்ந்து மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளனர்.

இந்தப் போட்டிகள் அம்பாந்தோட்டையில் தியகம மகிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்று வருகின்றதோடு கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற 42-வது தேசிய விளையாட்டு விழா பெண்களுக்கான கோல் ஊன்றி பாய்தல் போட்டியில் அனித்தா சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (மு-11)

## ஜனாதிபதி மைத்திரி...

கார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், தனி விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அவர், நேற்றுமுன்தினம் இரவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் தனித் தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்புகளில் பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து ஆராயப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமருக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பில், அமைச்சர்கள் மலிக் சமரவிக்கிரம, சாகல ரத்நாயக்க ஆகியோரும், இந்திய வெளிவிவகாரச் செயலர் ஜெய்சங்கர், இந்தியத் தூதுவர் தரன்ஜித்சிங் சந்து உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (மு-11)

## இனம் தெரியாத...

டைந்தவராவார்.

தாக்குதல் நடத்திய இருவரும் கடும் போதைமயக்கத்தில் தன்னை தாக்கியதாக மேற்படி யுவதி தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸில் முறையிட்டதனை தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (மு-30)

## விபத்தில் படுகாய...

கடந்த 27ஆம் திகதி காலை 8.30 மணியளவில் ஊரெழு பிள்ளையார் கோவிலுக்கு அருகில் இடம்பெற்றிருந்தது.

சடலமானது பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊரெழு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். (மு-30)

## ஜெகத் ஜெயசூரிய...

ப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தன மற்றும் கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ரெவிஸ் சின்னையா ஆகியோரை நேற்று சந்தித்து கலந்துரையாடியதன் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெகத் ஜெகசூரிய என்ற இராணுவ அதிகாரியை இராணுவ தளபதியாக நியமிக்க வேண்டாம் என அப்போதைய ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷவிடம் நான் கூறினேன். அவரை விட சிரேஷ்ட அதிகாரிகள் 17 பேர் இருந்தனர். எனினும் அவர்களை தவிர்த்து அப்போதைய ஜனாதிபதியும் பாதுகாப்பு செயலாளரும் தமது நலன்களுக்கான கனிஷ்ட அதிகாரியான ஜெகத் ஜெகசூரியாவை இராணுவ தளபதியாக நியமித்தனர்.

நான் யுத்தத்தை வழிநடத்தியபோது ஜெயத் ஜெயசூரிய வவுனியா கட்டளை தளபதியாக இருந்தார். அங்குள்ள பதுங்குழியை அவதானித்து கொள்வதே அவருக்கு வழங்கப்பட்ட பொறுப்பாகும்.

அதிலிருந்த சிப்பாய்கள் அவருக்கு கீழ் இருந்தனர். எனினும் போர்க்களத்தில் படையணிகளுக்கு சேவை வழங்கும் பணி வழங்கப்பட்டிருந்தது. அவர் போராட்டத்தை வழிநடத்தவில்லை. எனினும் போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள் அவரின் கீழ் இருந்தனர். அவ்வாறானவர்களுக்கு எதிராக சில குற்றங்கள் இழைக்கப்பட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. அவர் இராணுவத்தளபதியான பின்பும் அந்த நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டதாக நான் கருதுகின்றேன். அவ் குற்றம் தொடர்பில் என்னிடம் தகவல்கள் உள்ளன. உரிய சட்டநடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமாயின் அதன் போது சாட்சியினராக முன்னிலையாகி குற்றம் தொடர்பில் விரிவாக விளக்கம் அளிப்பேன். அவர் குற்றம் இழைத்தார் என்பதை நான் அறிந்திருந்தேன். அவை தொடர்பில் விசாரணை ஆரம்பிக்க நான் முயற்சித்தேன். அதன் ஆரம்ப நடவடிக்கையாக அவருக்கு உதவியாளராக இருந்த லெப்ரினன்ட் ஒருவரை கைது செய்தேன். அந்த விசாரணைகள் ஆரம்பிக்கும் பொழுது இராணுவ தளபதி பதவியிலிருந்து என்னை நீக்கினர். அவர் இழைத்த குற்றங்களுக்கு அப்போதைய ஆட்சி யாளர் மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆசீர் வாதம் கிடைத்ததற்கான தகவல்கள் என்னிடம் உள்ளன. சட்டரீதியாக நடவடிக்கை ஒன்று இடம்பெற்றால் நீதிமன்றத்துக்கு செல்ல வேணடிய அவசியமில்லை. ஜெகத் ஜெயசூரிய இழைத்த குற்றம் தொடர்பில் நாட்டின் சட்டம் நடைமுறைப்படுத்த வேண்டுமென நான் நினைக்கின்றேன். அது நடைமுறைப்படுத்தப்பட்டால் நாட்டின் குடிமகன் என்ற வகையில எனது கடமையை நான் நிறைவேற்றுவேன் என்றார் பொன்சேகா. (மு-11)

## பிரேரணை...

காரம் 37ஆவது கூட்டத் தொடரில் சூடுபிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ள கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான விவகாரம் விரிவாக ஆராயப்படவுள்ளது. இதன்போது 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான ஜெனிவா பிரேரணை எவ்வாறு அமுல்படுத்தப்படுகின்றது என்பது குறித்து ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் அல்ஹுசைன் ஒரு அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார்.

அதேபோன்று ஜெனிவா பிரேரணை எவ்வாறு அமுல்படுத்தப்படுகின்றது என்பது தொடர்பில் இலங்கையும் அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளது.

இந்நிலையில் சர்வதேச அமைப்புக்கள் மற்றும் ஐ.நா. மனித உரிமை பேரவையின் உறுப்புநாடுகள் 37ஆவது கூட்டத் தொடரில் இலங்கையிடம் பல்வேறு கேள்விகளை எழுப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக ஜெனிவா பிரேரணை அமுல்படுத்துவதில் உள்ள தாமதம், பொறுப்புக்கூறலுக்கான நீதிப் பொறிமுறை இதுவரை தயாரிக்கப்படாமை, காணாமல் போனோர் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து சர்வதேசம் இலங்கையிடம் கேள்வி எழுப்ப உள்ளது.

இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழுவினர் இந்தக் கூட்டத் தொடரில் பங்கேற்று பதிலளிக்க உள்ளனர். முக்கியமாக முதல் மூன்று நாட்களில் இலங்கை அரசாங்கம் சார்பாக வெளிவிவகார அமைச்சர் ஜெனிவா அமர்வில் உரையாற்றவிருக்கிறார். அதேபோன்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளும் இந்தக் கூட்டத் தொடரில் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

இதன்போது வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழுவினர் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைனையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். இதன்போது நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதில் காணப்படும் சவால்கள் தொடர்பில் விரிவாக பேச்சுவார்த்தை நடத்தப்படலாம் என தெரியவருகிறது.

2015ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பாக ஒரு பிரேரணை நிறைவேற்றப்பட்டது. 2015 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டுவரை குறித்த பிரேரணை முழுமையாக நிறைவேற்றப்படாததால் 2019 ஆம் ஆண்டுவரை மேலதிக இரண்டுவருட கால அவகாசம் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு வருடகால அவகாசத்தில் இலங்கை எவ்வாறு பிரேரணையை அமுல்படுத்துகிறது என்பது தொடர்பிலேயே 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் ஆராயப்படவுள்ளது. (மு-11)

## த.தே.கூ-அமெ...

பொன்று நேற்று நடைபெற்றது. இச்சந்திப்பு ஐக்கிய அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் அதுல் கெசெப்பின் இல்லத்தில் நடைபெற்றது.

சம்பந்தன் நாட்டின் அரசியல் நிலைமைகள், குறிப்பாக அரசியலமைப்புச் செயற்பாடுகள் தொடர்பான விடயங்கள் பற்றித் தூதுவருக்கு விளக்கமளித்தார். முரண்பாடுகளுக்கான பின்னணி பற்றி சம்பந்தன் தெளிவுபடுத்துகையில், நாட்டில் ஏற்பட்ட வன்முறைகளினால் தமிழ் மக்கள் ஒவ்வொரு வரும் பாதிக்கப்பட்டுள்ளதோடு நாட்டில் எங்களது உரிமைகளும் மறுக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக 1.5 மில்லியன்களுக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் நாட்டிலிருந்து புலம்பெயர்ந்துள்ளனர் என்றும் நாட்டில் எஞ்சியுள்ள தமிழ் மக்களாவது உரிய கௌரவத்துடன் வாழவேண்டுமென்றும் புலம்பெயர்ந்தவர்கள் நாட்டிற்குத் திரும்பிவரவேண்டும் என்றும் நாம் விரும்புகின்றோம்.

இலங்கையில் வாழுகின்ற சகலமக்களினதும் கௌரவத்தைக் காப்பாற்றுவதாகவும், பேணக்கூடியதாகவும் அமையக் கூடிய புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை சம்பந்தன் சுட்டிக்காட்டினார். கடந்தகாலங்களைப் போலல்லாது இம்முறை அரசியலமைப்பு உருவாக்குவதில் அதிகளவான ஆரம்பக் கட்ட நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச் செயற்பாடுகள் தோல்வியடைய இடமளிக்கப்படக் கூடாது. அதிகாரப் பங்கீடு தொடர்பான ஒழுங்குகள் பற்றி சம்பந்தன் கூறியபோது, இதயசுத்தியுடனான அதிகாரப் பங்கீடு இன்றியமையாதது என்றும், மக்கள் தொடர்ச்சியாக வாழ்ந்துவரும் இடங்களில் தங்களது அன்றாட விடயங்களில் தாமே முடிவுகளை மேற்கொண்டு செயற்படக்கூடியதாக அவை அமையவேண்டும் என்றும் கூறினார்.

அவர் கூறுகையில், இந்தநாட்டில் இதுவரை காலமும் ஒவ்வொருவரும் கணிக்கப்பட்டதைப் போல இனிமேலும் நாங்கள் கணிக்கப்படக் கூடாது என்றும், இந்தநாட்டில் வாழுகின்ற சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களையும் சமமானவர்களாகவும் கௌரவமானவர்களாகவும் நாம் கணித்துச் செயற்படுவோம் என மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தை நாம் தவறவிடாது உயர்ந்த அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனத் தெரிவித்த அவர், இந்த நாட்டில் இரண்டு பெரியகட்சிகளும் இணைந்து செயற்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவென்றும், புதிய அரசியலமைப்புக்குப் பல்வேறு கட்சிகளினதும் ஒப்புதலைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதெனவும், அதனால் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை ஆதரவைப் பெற்று பின்னர் சர்வசனவாக்கெடுப்பு ஒன்றினூடாக நாட்டுமக்களின் அங்கீகாரத்தைப் பெற முடியும் என்றநம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் கூறினார்.

எல்லா மாகாணங்களிலும் உள்ள முதலமைச்சர்கள் தமது மாகாணங்களுடன் தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்குத் தமக்குமேலும் அதிகாரங்கள் வேண்டுமெனத் தெரிவித்திருப்பதாகவும் நாம் அறிகின்றோம்என்றும் கூறினார்.

ஆயுதப் படையினர் தங்கியிருக்கும் தனியார் காணிகள் விடுவித்தல் தொடர்பாக சம்பந்தன் கூறுகையில், இக் காணிகள் விடுவிக்கப்பட்டு அதன் உரிமையாளர்களுக்குக் கையளிக்கப்படவேண்டும் என்றும், அக்காணிகளுக்குத் திரும்பி வருவதற்கு அவர்கள் உரிமையுடையவர்கள் என்றும், மக்கள் தமது காணிகளைக் கோரி ஆர்ப்பாட்டங்கள் நடத்திவரும் இவ்வேளையில் ஆயுதப்படையினர் இக் காணிகளில் தங்கியிருந்து அதனைத் தமது உபயோகத்துக்குப் பயன்படுத்தமுடியாது எனவும் கூறினார். மேலும், காணாமல் போனவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு உடனடியாகக் கவனம் செலுத்தப்பட்டு, நம்பத் தகுந்த விசாரணைகள் மூலம் உண்மைகள் அறியப்பட்டுக் காணாமல்போனவர்களது குடும்பங்கள் ஏதாவது வகையில் மன ஆறுதல் அடைவதை உறுதிசெய்ய வேண்டும் என்றும் கூறினார்.

கொடுமையான பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றியமைப்பதாக அரசாங்கம் உத்தரவாதம் அளித்திருந்தபோதும் அச்சட்டம் இன்னும் மாற்றியமைக்கப்படவில்லையென்பதையும் சம்பந்தன் தூதுவர் அலிஸின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். இச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் இன்னமும் நியாயமற்றவகையில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என மேலும் தெரிவித்தார். (மு-11)

## மீனவரை காணவில்லை

(வல்வெட்டித்துறை)

தொழில் செய்வதற்காக கடலுக்கு சென்ற மீனவர் ஒருவர் நேற்று மாலை வரை கரை திரும்பவில்லை.

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்காகச் சென்ற வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வடிவேல் சிறிகாந் (வயது 47) என்ற மீனவரே கரைதிரும்பாதவராவார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அதிகாலை மீன்பிடிப்பதற்காகச் சென்ற குடும்பஸ்தர் மாலையாகியும் வீடுவராததையடுத்து அன்றிரவு 9.00 மணியளவில் வல்வெட்டித்துறைப்பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று காலையில் இருந்து அப்பகுதி மீனவர்களும் தேடுதல் மேற்கொண்டுள்ள நிலையில் மாலை அவரைக் கண்டுபிடிக்கமுடியவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (மு-60)

## PERSONAL, GROUP CLASS

இரசாயனவியல் (A/L) 2018, 2019
Repeat Batch 37 வருட Past Papers
கற்பிக்கப்படும்
சி.அங்கதன் B.Sc (Chem.Spl)
தொடர்பு: 0779208945
(299)


## சுஷ்மாவை சந்தி...

ற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார். இவரை சந்திப்பதற்கு மகிந்த அணியினர் கடும் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதில் அம்பாந்தோட்டை துறைமுக விவகாரம், மத்தள விமான நிலையம் தொடர்பாகவே மகிந்த அணியினர் சுஷ்மாவுடன் உரையாடுவதற்கு முயற்சிக்கின்றனர். (மு-11)

## போதைப்பொருள்...

த்தில் கடந்த 14 மாதங்களில் 6 தடவைகள் பாரிய அளவிலான கொக்கேய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன்,

இதுவரையில் ஆயிரத்து 770 கிலோகிராம் கொக்கேய்ன் மீட்கப்பட்டுள்ளதாகவும் அதன் பெறுமதி 140 மில்லியன் டொலர்தள் (இலங்கை மதிப்பில் ரூ. 2ஆயிரம் கோடி) என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை பிரேசிலில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சீனி கொள்கலன்களில் இருந்து கொக்கேய்ன் மீட்கப்பட்ட நிலையில் இவை தவறுதலாக அனுப்பி வைக்கப்பட்டவையாக தெரியவில்லை என்றும் குறித்த அதிகாரி தெரிவித்துள்ளார். (மு-11)

## இன்று...

அதிகரிப்பு நடைமுறைக்கு வரவுள்ளதாகவும் இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்க தேசிய இணைப்பாளர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

பொலித்தின் பை, உணவு பொதியிடலுக்காக பயன்படுத்தப்படும் பொலித்தின் தாள் மற்றும் ரெஜிபோம் உணவுப்பெட்டி என்பவற்றிற்கு தடை செய்யப்பட்டுள்ள நிலையில் சோற்றுப்பொதியின் விலை அதிகரித்துள்ளது. (மு-11)


தற்போது தரம் 4, தரம் 3 இல் கல்விகற்கும் மாணவர்களுக்கான...

## புலமைப் பரிசில் வகுப்புகளும் மாதிரிப் பரீட்சைகளும்

ஆசிரியர் : திரு.ம.விமலேஸ்வரன்
(யா/சென் பெனடிக்ற் றோ.க.வித்தி
அவர்களால் ஆரம்பம்
02.09.2017 சனிக்கிழமை
பிற்பகல் 3.00 மணி

- அடிப்படையில் இருந்து பாடத்திட்டத்திற்கு ஏற்பபூரண விளக்கத்துடன் கற்பித்தல்.
- ஆரம்பக் கல்வி கணித பாடத்தில் கூடிய செயற்பாடுகள்.

தொடர்பு புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
T.P : 077 459 8440
(C-9479)

## தேவை

சுன்னாகப் பகுதிக்குள் வீடு உடனடியாக வாடகைக்குத் தேவை.
தொடர்பு: அபிஷர்மா
அம்பிகை ஜோதிட நிலையம்
மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.
தொ.பே: 0776678222, 0759859256
(292)

## இயந்திரங்கள் விற்பனைக்கு

- மரஅரிவு பட்டறை
- ஜெனறேட்டர் 35kw uk
- அலுமினிய வேலைப் பொருட்கள்
- இரும்பு வேலைப் பொருட்கள்
- Photocopy மிசின் புதியது
- JCB uk 3cx

விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 0771336617
(300)

## வியாழ மாற்றம்

2017.07.28ல் மாறிய இராகு, கேது மாற்றமும், 2017.09.02 இன்று மாறும் வியாழ மாற்றமும் தங்களுக்கு நன்மை அளிக்குமா? அறிந்து கொள்வதற்கு
அபிஷர்மா
அம்பிகை ஜோதிட நிலையம்
மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.
தொ.பே: 0776678222, 0759859256
(292)

## V2 TRAVELS

PASSPORT
வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.
VISA EXTENSION
FOR FOREIGN PASSPORT
(வீசா எக்ஸ்ரென்சன்)
0768227499
(C-9463)
- யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - நெல்லியடி
- சாவகச்சேரி - பருத்தித்துறை - வல்வெட்டித்துறை

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு [illegible] மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9463)
கப்பல் மூலம் கடையாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)
V2 TRAVELS - 0768226240
- யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - நெல்லியடி
- சாவகச்சேரி - பருத்தித்துறை - வல்வெட்டித்துறை

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

EXPRESS Courier Services
அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | ஊர்காவற்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை
(C-9472)

## ROYAL BIOLOGY

Brown road, Neeravijadi-Jaffna (Neer to Science World)
Tamil & English medium classes for A/L
தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்
Con : 0713438442 www.facebook.com Royal-Biological-Sciences-Jaffna
- 2019 A/L - Unit-03 Evolution and diversity of organisms — அங்கிகளின் உயிர்ப்பல்வகைமையும் கூர்ப்பும்
- 2018 A/L - Unit 11 - Heredity (genetics) — பாரம்பரியம்
- 2018 - Day class (for 2017 August-A/L Students) — தமிழ் மொழிமூலம் - Monday to Friday morning 6:15 am - 7:30 am; English medium - Monday to Friday Evening 1:45 pm - 2:45pm

Group or Personal classes also available ★★★★★
க.கலைவாணன் (Spl.in.BiologicalSciences)
(291)

## VACANCY - The Thinnai

கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- BANQUET HALL WAITERS
- RESTAURANT WAITERS
- ROOM ATTENDANTS

அனுபவம் வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
ஆர்வமுள்ளவர்கள் 04.09.2017 காலை 11 மணிக்கு உங்கள் சுயவிபரக்கோவையுடன் சமுகம் தரவும். அல்லது அதனை (CV) எமக்கு மின்னஞ்சலில்/தபாலில் அனுப்பி வைக்கவும்.
hr@thethinnai.com
86, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 203 0400
(297)

## NEW SCIENCE WORLD

NEW SCIENCE WORLD VICTORY MUST
தொடர்புகளுக்கு : 021 221 6690
(7.00 am - 4.00 pm)
G.C.E(A/L)-2018
Day Classes
திங்கள் – வெள்ளி

| | |
|---|---|
| பௌதிகவியல் | திரு. R. குகன், திரு. R. குமரன் (நேரம் – 11.30am – 1.30pm) |
| இரசாயனவியல் | திரு. டயஸ், திரு. K.T. சிவகுமார் (நேரம் – 9.30am – 11.30am) |
| உயிரியல் | திரு. S. பொன்திவாகரன், திரு. N.T. கஜேந்திரன் (நேரம் – 7.30am – 9.30am) |
| இணைந்த கணிதம் | திரு. S.S. செந்தில்நாதன் (நேரம் – 7.00am), திரு. T. சஞ்சீவன் (நேரம் – 7.30am – 9.30am) |

நிறுவன ஒழுக்க விதிகளை மீறும் மாணவர்கள், பெற்றோர்களுக்கு அறியப்படுத்தப்பட்டு இடை நிறுத்தப்படுவர்.
ஆரம்பம் 05.09.2017 செவ்வாய் காலை 07.00 மணி
அமைவிடம்: நாவலர் வீதி, பிறவுண் வீதி சந்தி, யாழ்ப்பாணம். பிறவுண் வீதி சந்தியிலிருந்து 75 M இடது புறமாக அமைதியான சூழலில்.
(சி-9482)




## NEW SCIENCE HALL

Kannathiddy Road, Jaffna
2018 A/L
2017 August பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரியது
DAY CLASSES
திங்கள் தொடக்கம் வெள்ளி

| | |
|---|---|
| PHYSICS 11.30 - 1.30 | திரு. G.பிரபா, திரு.S.சோதிலிங்கம் |
| CHEMISTRY 9.30 - 11.30 | திரு.K.சிவத்திரன் |
| BIOLOGY 7.00 - 9.30 | வழமையான ஆசிரியருடன் திரு.T.கெங்காதரன் |
| COM.MATHS 7.00 | திரு.P.செந்தில்நாதன் |

ஆரம்பம் : 05.09.2017 செவ்வாய் காலை 7.00
தொடர்பு : 0777 917611
https://facebook.com/newsciencehalljaffna


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.